விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்,உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 தை 10 சனிக்கிழமை (24.01.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 036

# தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு!

## ரணில் உறுதி



(கொழும்பு)

*தமிழ் மக்களுக்காக அரசியல் தீர்வொன்றை வழங்க வேண்டும் என்ற கடும் நிலைப்பாட்டில் புதிய அரசாங்கம் இருப்பதாக ரணில் விக்கிரம சிங்க தெரிவித்தார். த வோல்ட் ஸ்ட்ரீட் ஜேர்ன லுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இத னைத் தெரிவித்தார்.*

23ஆம் பக்கம் பார்க்க....

## கழிவு எண்ணெய்க் கசிவுக்கு உடனடி நடவடிக்கை

### ஜனாதிபதி உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கழிவு எண்ணெய்க் கசிவு குறித்து உடனடியாக கவனம் செலுத்தி நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியளித்துள்ளார்.

கொழும்பில் ஜனாதிபதி செயல கத்தில் நேற்றைய தினம் உள்ளு ராட்சி மன்ற உறுப்பினர்கள் மற் றும் பிரதேச சபைத் தலைவர்களு டனான சந்திப்பின் போதே ஜனா திபதி உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதியுடனான சந்திப்பில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்க ளும் கலந்து கொண்டிருந்தனர்.

இதில் சுன்னாகம் பிரதேச சபை

23ஆம் பக்கம் பார்க்க....

## போர்க்குற்ற மீறல்கள் விசாரிக்க உள்நாட்டுக் குழு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறு திக்கட்டப் போரின் போது மேற்கொள் ளப்பட்ட மனிதவுரிமை மீறல்கள் தொடர பில் விசாரணை நடத்த விரைவில் உள்நாட்டு விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்படவுள்ளதாக அமைச் சரவையின் பேச்சாளர் ராஜித சேனா ரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சீன செய்தி நிறு வனம் ஒன்றுக்கு அவர் தகவல் வெளி யிடுகையில்,

இலங்கையில் இடம்பெற்ற மனித வுரிமை மீறல்கள் தொடர்பில் விசா ரணைகளை மேற்கொள்ள விரை

23ஆம் பக்கம் பார்க்க....

## இராணுவ சதித்திட்டம் நடந்தமை உண்மையே

### மின்சக்தி அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

இராணுவ சூழ்ச்சித் திட்டம் பற் றிய குற்றச்சாட்டு உண்மையானதே என மின்வலு எரிசக்தி அமைச்சர் சம் பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் நடைபெற்ற கடந்த 8-ம் திகதிக்கு மறுநாள் அதி காலை சட்டவிரோதமான முறையில் ஆட்சி அதிகாரத்தை தக்க வைத்துக்

23ஆம் பக்கம் பார்க்க....

## பேக்கரி உற்பத்திகளின் விலைகளும் குறையும்!

(கொழும்பு)

பேக்கரி உற்பத்திகளின் விலை களைக் குறைக்க நடவடிக்கை எடு க்கப்படும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

நிதியமைச்சர் ரவி கருணாநாய க்கவை சந்தித்து கோதுமை மாவி ற்கு அறவிடப்படும் வரியை நீக்கு மாறு கோரிக்கை விடுத்துள்ளதாக குறித்த சங்கத்தின் தலைவர் எம். கே.ஜயவர்தன தெரிவித்தார்.

எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டதைப் போன்று எதிர் காலத்தில் பேக்கரி உற்பத்திகளுக் கான மூலப்பொருட்களின் விலைக ளையும் குறைப்பதற்கான நடவ

23ஆம் பக்கம் பார்க்க....

01.02.2015 ஞாயிற்றுக்கிழமை உங்கள் வலம்புரி நாளிதழில் வெளிவரும்
Special Magazine
வலம்புரி ADZ
Valampurii
இலவச கல்வி சிறப்பிதழை பெற்றுக்கொள்ள தவறாதீர்கள்
உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள வலம்புரி பத்திரிகை முகவரை நாடுங்கள்

## இராணுவ அதிகாரிகள் 133 பேருக்கு இடமாற்றம்

(கொழும்பு)

இராணுவத்தில் கடமையாற்றிய 133 உயர் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

28 பிரிகேடியர்கள், 33 கேர்ணல கள், 54 லெப்டினனட் கேணல்கள், 18 மேஜர்கள் இவ்வாறு இடமாற்றம செய்யப்பட்டுள்ளனர்.

புதிய இராணுவ ஊடகப் பேச் சாளர்ஜயனாத்ஜயவீர இந்த தகவலை உறுதி செய்துள்ளார்.

இராணுவ நியதிகளுக்கு அமைய ஓராண்டுக்கு இரண்டு தடவைகள் இடமாற்றங்கள் செய்யப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த நியதியின் அடிப்படையில்

24ஆம் பக்கம் பார்க்க....

## அப்பாவி தமிழ் கைதிகளுக்கு சுதந்திரதினத்தில் பொதுமன்னிப்பு

### பிரதி அமைச்சர் விஜயகலா கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கில் யுத்தத்தினால விதவைகளான 80 ஆயிரம் பெண் களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி அவர்களது வாழ்வாதாரத்தை கட்டியழுப்புவேன். பெண்கள் பாலி யல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத் தப்படுகின்றமை தொடர்பிலும் உரிய நடவடிக்கை எடுக்க முனை வேன். மேலும் தேசிய பிரச்சினைக் கான தீர்வு விடயத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு என்றும் உறு துணை யாக இருப்பேன் என்று தெரிவித்த மகளிர் விவகார பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், பல

23ஆம் பக்கம் பார்க்க....

## பிரதம நீதியரசரிடம் நேற்று புலனாய்வுப் பிரிவு விசாரணை

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் அன்று அலரி மாளிகையில் இடம்பெற்றதாக கூறப்படும் இராணுவப் புரட்சிக்கான முயற்சி தொடர்பில் பிரதம நீதியரசரி டம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வுத் துறையினர் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸி டம் நேற்று மாலை வாக்குமூலத்தை பெற்றதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.


ஏற்கெனவே இந்த சம்பவம் தொடர்பில், மேல்மாகாணசபை உறுப்பினர் உதய கம்மன்பில, முன் னாள் வெளியுறவு அமைச்சர் ஜி. எல்.பீரிஸ் உட்பட்டவர்களிடம் வாக்கு மூலங்கள் பெறப்பட்டுள்ளன.

வெளியுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர செய்த முறைப் பாட்டின் அடிப்படையிலேயே இந்த

23ஆம் பக்கம் பார்க்க....

## வாழ்க்கைச் செலவு கொடுப்பனவுடன் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு

### நிதியமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

புதிய அரசாங்கம் எதிர்வரும் 29 ஆம் திகதி தாக்கல் செய்யும் இடைக்கால வரவு செலவுத் திட்ட த்தில் அரச ஊழியர்களுக்கு 5 ஆயி ரம் ரூபாய் சம்பள அதிகரிப்பு வழங் கப்படும் என நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை மகிந்த ராஜபக்ஷ

23ஆம் பக்கம் பார்க்க....

# எளிமையான மனிதர் ஜனாதிபதி மைத்திரி

## பாப்பரசர் புகழாரம்


(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவை போன்ற எளிமை யான மனிதரை தான் வாழ்க்கை யில் சந்தித்ததில்லை என பாப்பரசர் பிரான்சிஸ் திருத்தந்தை தெரிவித் துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால மீது தமக்கு புதுமையான அன்பும், கௌர வமும் ஏற்பட்டதாக புனித பாப்பரசர் தன்னிடம் கூறியதாக கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரி வித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சில் நடை பெற்ற விசேட சந்திப்பொன்றிலேயே

24ஆம் பக்கம் பார்க்க....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A/L பரீட்சையின் பின்...



**இந்தப் பேனாவினால் வாழ்க்கையை புதிதாக எழுதுங்கள். எமது குடும்ப அங்கத்தவர்களாக நீங்களும் இணையுங்கள்.**

பாடசாலைக் கல்வியை முடித்துக் கொள்ளும் நீங்கள் தற்போது வாழ்க்கைக்கு புதிதாக முகம் கொடுக்கத் தயார். உங்களிடமுள்ள இளம் சக்தி சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கும் இலக்குகளை வெற்றி கொள்வதற்கும் உங்களுக்கு வலிமை தருகின்றது.

எமது நிறுவனத்தில் இணைந்து வாழ்க்கையை புதிதாக எழுதுவதற்கு இதோ உங்களுக்கு அரியதோர் சந்தர்ப்பம். சர்வதேச நிறுவனம் ஒன்றில் அங்கத்தவராகும் வாய்ப்பு உங்களுக்கு கிடைத்துள்ளது.

(9238)

தொடர்பு:

**0777121868**


# ஊழல் மோசடிகள் குறித்த விசாரணைக்கு இந்தியா ஆதரவு

(புதுடில்லி)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஊழல் மோசடிகள் குறித்த விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார் என இந்தியா அறிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பாரியளவு மோசடிகள் தொடர்பிலான விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார் என இந்திய மத்திய வங்கி அறிவித்துள்ளது.

கடந்த அரசாங்க காலத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்த ஒத்துழைப்பு வழங்குவதாக இந்தியா இணங்கியுள்ளது என அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவு அதிகாரியொருவரை இந்தியா அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக உறுதியளித்துள்ளன.

பல பில்லியன் ரூபாய் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் ஏற்கெனவே சில வெளிநாட்டுத் தரப்பினர், புதிய அரசாங்கத்திற்கு தகவல்களை வழங்க முன்வந்துள்ளனர். தேசிய நிறைவேற்றுப் பேரவையின் ஊடாக ஊழல் மோசடிகள் குறித்த விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-11)


## உடனடி வேலைவாய்ப்பு

அலுவலக எழுதுவினைஞர்கள் தேவை.

(பெண்கள் மட்டும்)

தொடர்பு: **0765244739**

(C-9909)



## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்



**Dr.P.ஆறுமுகம்**

T.P.: 0719315664 , 0777569205

**மீண்டும் யாழில்**

25.01.2015 முதல் 31.01.2015 வரை 7 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

**நாதன் இன்**

(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

(C-9908)


## ஓராண்டு நினைவு அஞ்சலி



அமரர்

**அண்ணாமலை லோகேஸ்வரன்**

**24.01.2015**

ஆண்டொன்று ஆனதையா
அகிலம் விட்டு நீர் நீங்கி
ஆனாலும் வழி நடத்துகின்றீர்
விழித்திரையில் தினம் தோன்றி

ஊருக்குள் சொந்தமுண்டு
மானிடருக்கு – ஆனால்
ஊரே சொந்தமாகி
கண்ணீர் வடித்ததையா – நாம்
உமை இழந்த நாளன்று

சந்திரனாய் ......
சந்திர மாமாவாய் ......
சந்திர அத்தானாய் ......
தாத்தாவாய் ......
அத்தனை உறவிலும்
அளவிலா அன்பு பொழிந்தாய் – ஆயினும்
யார் கேடிழைத்து – எம்
அன்புத் தெய்வத்தின் உயிர்
பறித்தாய் இறைவா.

தோற்றம் 06.12.1949 மறைவு 24.01.2014

உங்கள் நினைவுகளுடன்,
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(சி-9911)

# வெலிக்கடை தாக்குதல் விசாரணைக்கு விசேட குழு

(கொழும்பு)

வெலிக்கடையில் கைதிகள் கொலை செய்யப்பட்டமை குறித்து விசாரணை நடத்த விசேட ஆணைக்குழுவொன்று நிறுவப்பட உள்ளது.

கடந்த 2012-ம் ஆண்டு நவம்பர் மாதம் 9-ம் திகதி வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற கலவரத்தில் பெரும் எண்ணிக்கையிலான கைதிகள் கொல்லப்பட்டிருந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்த ஏற்கெனவே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆணைக்குழு ஒன்றை நிறுவியிருந்தார். எனினும் அந்த விசாரணைக் குழு, சம்பவம் தொடர்பில் சரியான விசாரணைகளை நடத்தவில்லை என மனித உரிமை அமைப்புக்களும் எதிர்க்கட்சிகளும் குற்றம் சுமத்தியிருந்தன.

இதன் அடிப்படையில் தற்போது புதிய விசாரணைக்குழுவொன்றை அரசாங்கம் நிறுவியுள்ளது.

உயர் நீதிமன்ற நீதவான் விமல் நம்புவசம் இந்த ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஓய்வு பெற்ற பிரதிப் பொலிஸ்மா அதிபர் அசோக விஜயதிலக்க, ஓய்வு பெற்ற நிர்வாக அதிகாரி சட்டத்தரணி கே. எஸ்.லியனகே ஆகியோர் இந்தக் குழுவின் ஏனைய உறுப்பினர்களாவர்.

சம்பவத்தில் 30 கைதிகள் வரையில் கொல்லப்பட்டதுடன், 40க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்திருந்தனர். (எ-11)


## வேலைவாய்ப்பு

தொடர்புகளுக்கு: **0774458134**

யாழ்ப்பாணத்தில் சர்வதேச ரீதியில் இயங்கிவரும் Granton நிறுவனத்தின் பதவி வெற்றிடங்கள்

விற்பனைப் பிரதிநிதி — மேற்பார்வையாளர்
முகாமைத்துவ பயிற்சியாளர் — நிர்வாக அதிகாரி

இப்பதவிகளுக்கு வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார். ஆகிய இடங்களில் வசிப்பவர்கள் கோரப்படுகிறார்கள். (9245)

30 பேருக்கு முன்னுரிமை — தங்குமிடம் உண்டு
வயதெல்லை 18-30 — சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்



## VACANCIES

One private hospital in Jaffna (Nelliady) is seeking for qualified and experienced professionals for the post of Doctor (OPD), Pharmacist & Nurses.

### DOCTOR (OPD) - 3

*Requirements:*
- A MBBS degree from a recognized university with Sri Lanka medical council registration.
- Retired doctors also can apply.
- Should be able to work under shifts.
- Salary and other benefits are negotiable.

### PHARMACIST

*Requirements:*
- Qualified pharmacist who registered under Sri Lanka medical council.
- Excellent communication and customer care skills

### NURSE - 2

*Requirements:*
- Bachelor or Diploma in Nursing
- Minimum of two years' experience in related field
- Preferably Female
- Retired Nurses also can apply
- Ability to speak and write in English & Tamil is required

### Customer care executive - 1

**Requirements:**
- Successful completion of the GCE A/L examination
- Should have good command in English & Tamil
- Positive personality & Experience in customer interaction.
- Willing to work on a shift basis
- Age below 30

Attractive remuneration packages commensurate with the qualification and experience are on offer to the selected candidates. Interested candidates are requested to forward their CV with contact details of two non-related referees within 07 working days by post/ email. The position being applied for must be clearly mentioned on the upper left corner of the envelop / subject line of the e-mail. Please call 0773760590 for further clarifications

(9243)

**Address : 32,5/2,Madangahawatthe,Colombo - 06**
**E-mail - multimovegroup@gmail.com**



# மாநகரசபை, யாழ்ப்பாணம்.
## கூறுவிலை கோரல் - 2015

மாநகரசபையின் வேலைத்திட்டங்களுக்கு வேண்டிய கீழ்க்காணும் மூலப் பொருட்களை விரைவாக வழங்கக் கூடியவர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகிறது. எதிர்வரும் 06.02.2015 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிவரை கூறுவிலைகள் ஏற்றுக்கொள்ளப்படும். 30.01.2015 ஆம் திகதிக்கு முன்னர் கொள்வனவுப் பகுதியினால் வழங்கப்படும் படிவங்களினை பெற்று பூரணப்படுத்தி கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **'கல்/மணல் கூறுவிலை - 2015'** எனக் குறிப்பிட்டு. **'ஆணையாளர் மாநகரசபை யாழ்ப்பாணம்'** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**மேலதிக விபரங்களினை கொள்வனவுப்பகுதியில் பெற்றுக்கொள்ளவும்.**

**மூலப்பொருட்கள் விபரம்**

| | |
|---|---|
| 01. 1/2'' அளவுள்ள கிறசர் சல்லி | 07. 6'' - 9'' அளவுள்ள கற்கள் |
| 02. 3/4'' அளவுள்ள கிறசர் சல்லி | 08. பூநகரி மணல் |
| 03. 1'' அளவுள்ள கிறசர் சல்லி | 09. கண்டாவளை மணல் |
| 04. 1 1/2'' அளவுள்ள கிறசர் சல்லி | 10. நாகர்கோயில் மணல் |
| 05. 2'' அளவுள்ள கிறசர் சல்லி | 11. கிறவல் |
| 06. 4'' அளவுள்ள கிறசர் சல்லி | 12. கிறேசர் டஸ்ற் |

**செ.பிரணவநாதன்**
**மாநகர ஆணையாளர்,**
**யாழ்ப்பாணம்.**
23.01.2015



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1552


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி அழைப்பிதழ்

கடந்த 25.12.2014 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த
எமது குடும்பத்தலைவி

## அமரர் மார்க்கண்டு பாக்கியம்



அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள்
24.01.2015 இன்று சனிக்கிழமை
முற்பகல் 11 மணியளவில்
அமுதாம்பிகை மணி மண்டபத்தில்
(வீரமாகாளி அம்மன் கோவில்)
நடைபெறும். அத்தருணம் தாங்கள்
குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின்
ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும்
தொடர்ந்து நடைபெறும் மதிய போசன
வைபவத்திலும் கலந்து கொள்ளும்
வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்.

(9233)

நல்லூர், அரசடி.

இங்ஙனம்
மா.சிவசுப்பிரமணியம்(சிவம்)
(முன்னாள் CTB சாரதி)
077 551 3673

---

மருதடியான் துணை

# மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்
## ஆவர்த்தனப் பிரதிஷ்டா நவகுண்டபக்ஷ மஹாகும்பாபிஷேகம் 02.02.2015
## கிரியைகள் ஆரம்பம் :- 23.01.2015
## வெள்ளிக்கிழமை காலை 7.00 மணி முதல்

**எண்ணெய்க்காப்பு**

31.01.2015 சனிக்கிழமை காலை 7.00 மணி முதல் இரவு முழுவதும் 01.02..2015 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிவரை

**மஹாகும்பாபிஷேகம்**

02.02.2015 திங்கட்கிழமை புனர்பூச நட்சத்திரம் கூடிய காலை 9.45 மணி தொடக்கம் 10.45 மணிவரை உள்ள சுபவேளையில் மருதடியான் கும்பாபிஷேகம்

என் இனிய அடியவர்களே !

என் திருக்கோலம் காண நீவீர் உள்வீதி வர விரும்பின் நான் விரும்பும் இக்கோலத்தில் வந்தால் நான் உன்னை கண்டு கொள்ளவும் என்னை நீவீர் தரிசிக்கவும் இலகுவாக இருக்கும். என் இன்பமே உன் இன்பம். எனது விருப்பமே உனது விருப்பம். எனது நல்லாசிகள் உங்களை வாழவைக்கும் எனதருள் பெற்று நீவீர் ஆலயம் வருவதை நான் விரும்புவேன்.

**இவ்வண்ணம்**

வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக் கருதின் நிலை அறிவித்துத்
தத்துவ நிலையை தந்து உனை ஆண்ட
வித்தக மருதடி விநாயகன்

குறிப்பு :- கும்பாபிஷேகத்தை தொடர்ந்து வரும் மண்டலாபிஷேகத்திற்கு பதிவு செய்தவர்கள் தங்கள் திகதியினை உறுதிப்படுத்திக் கொள்வதுடன் மேலதிகமான செலவீனத்தொகை ரூபா. 15000.00 ஆலய தர்மகர்த்தா சபை காரியாலயத்தில் செலுத்தி பற்றுச்சிட்டையினை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆலயத்தில் இனிவரும் காலங்களில் மஹோற்சவம் 25 நாட்கள் நடைபெறும் என்பதையும் மார்ச் 22 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி வருடப்பிறப்பன்று இரதோற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறும் என்பதை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

விளம்பர அனுசரணை :-
V.S.M.ஸ்ரோர்ஸ் ஆலடிச் சந்தி,
யாழ். வீதி, மானிப்பாய்.
T.P.No:-021 225 5136,
077 923 5693

(சி-9906)

ஆலய தர்மகர்த்தா சபை

---

# 75 ஆவது அகவை நிறைவு அக மகிழ்ந்து வாழ்த்து



வித்தியாகுருமார்

பேராசிரியர் அ. சண்முகதாஸ் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

பவளவிழா நனி சிறக்கவும்
எமது நற்குருமார் பணி சிறக்கவும்
எம் மன்னை நெல்லண்டைப்
பத்திரகாளி
அம்மன் ஸ்ரீ வீரமாகாளியம்மன் வ
டபத்திரகாளி அம்மன் அருள் வே
ண்டித் தினமும் வாழ்த்தி வணங்கு
கின்றோம்

இன்று கனடாவில் பவள விழாவைக் கொண்டாடும் வாழ்நாட் தகைசார் பேராசிரியர்
அ. சண்முகதாஸ் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தம்பதியினரை வாழ்த்திப்
பாராட்டிப் பணிகின்றோம்.

கனடா:- T.P:- No.001905540271

இங்ஙனம்: அன்பு மாணவன்.

(சி-9802)

சைவ சித்தார்த்த பண்டிதர் சிவஸ்ரீ தியாக.சோமாஸ் கந்தராஜாக் குருக்கள்.
(B.A.Dip.in.Edu, M.A)
(பிரதியதிபர் யா/ கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலை
தும்பளை நெல்லண்டை பத்திரகாளியம்மன், ஸ்ரீ வீரமாகாளியம்மன்,
வடபத்திரகாளியம்மன் தேவஸ்தானதிபதி ஆதீன கர்த்தாவும் பிரதம குருவும்)
T.P:-077 620 2716

---

# இராசி பலன்

24.01.2015
(தை 10, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு
சதுர்த்தி முற்பகல் 11.02 மணிவரை
பூரட்டாதி முன்னிரவு 8.25 மணிவரை
இராகுகாலம் 9.36-11.06 மணிவரை
சுபநேரம் 3.36-5.06 மணிவரை

வளவன்

**மேடம்** — தொழிலில் புதிய மாற்றங்களைச் செய்யும் எண்ணம் உருவாகும், வெளியூர் பயணமொன்றை மேற்கொள்ளும் சூழ்நிலை அமையும், சயனக் குறைவான நாள்,

**இடபம்** — இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு,வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும் வாய்ப்பு.

**மிதுனம்** — வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள்,தொட்ட காரியங்கள் வெற்றி பெறும் நாள்,ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடகம்** — கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் உருவாகும், பயணங்களால் பலனுண்டு, தொழில் முன்னேற்றம் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், புகழ் மிக்கவர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்** — சில பிரச்சினைகள் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, செலவுகள் அதிகமாகும், வாகனங்களில் செல்லும் போது விழிப்புணர்வுகள் அவசியம்,

**கன்னி** — நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம்,காரிய அனுகூலமுண்டு,கௌரவமான நாள், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும்.

**துலாம்** — மறைமுக எதிர்ப்புகள் மாறும், எதிர்பார்த்த தொகைகள் வந்து சேரலாம் ,உடல் நலம் சீராகும், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்** — பொது வாழ்வில் புகழ் கூடும் நாள்,பிள்ளைகள் வழியில் சுப செலவுகள் ஏற்படலாம், புண்ணிய காரியங்களில் நாட்டம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**தனுசு** — பெற்றோர் மீது பிரியம் கூடும், திட்டமிட்ட காரியத்தை திட்டமிட்ட படியே செய்து முடிப்பீர்கள்,உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள்,குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மகரம்** — விடாமுயற்சி வெற்றி கிடைக்கும்நாள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோஷமும் அதிகரிக்கும்,அன்பு நண்பர்கள் ஆதரவு பெருகும், கற்பனை மிகுதியான நாள்.

**கும்பம்** — நன்மைகள் நடைபெறும் நாள், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில சம்பவங்கள் இடம்பெறலாம், விரதத்தில் நம்பகத்தன்மை கூடும்.

**மீனம்** — திடீர் பயணத்தில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம்,பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்கள் தகுதியை உயர்த்தும் சஞ்சலங்கள் கூடும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## ஆன்மீகம் 132

# மனக்கோட்டைகளைத் தகர்த்தல்!

...நாம் அடுத்தவரை உடைமையாக்கிக் கொண்டு அவர்களையும் ஒரு பொருளாக்கி இழிவு படுத்துகிறோம். இங்கு தான் பிரச்சினை ஆரம்பிக்கிறது- வாழ்க்கை முடிவற்ற பே ாராட்டம்!

ஒரு சின்னக் கதை....

ராம்கோபல் ஒரு தொழில் முறை பெயின்டர் அவர் தன் நண்பரிடம் சொல்லிக்கொண்டிருந்தார். எனக்கு தெரியுமா ஒரு நாள் ஒரு பெண் கையில் ஒரு சிறு கரு நீல வண்ணம் தீட்டப்பட்ட மரத்துண்டுடன் உள்ளே நுழைந்து அதே வண்ணத்தில் ஒரு மாதிரி வீட்டிற்கு நான் வண்ணம் தீட்ட வேண்டும் என்று விரும்பினாள்.

அந்த வண்ணம் பொருந்தி வருவதற்குள் நான் தொழிலையே விட்டு விடலாம் என்று எண்ணுமளவிற்கு ஆகிவிட்டது.

எதுவுமே அவ ளுக்குத் திருப்திகரமாக இல்லை நண்பர் கேட்டார் கடைசியாக அது பொருந்தி வந்ததா? ராம் கோபால் சொன்னார் என் அதிஷ்டம் தான் அவளுக்கு செல் பேசியில் ஒரு அழைப்பு வந்தது. அவள் பேசி முடிப்பதற்குள் அந்த மரத்துண்டிற்கு வேகமாக பெயின்ட் அடித்து விட்டேன்.

(சிரிப்பு)

நாள் முழுவதும் ஒவ்வொரு வீட்டிலும் கணவனும் மனைவியும் ஒருவருக் கொருவர் பேசிக் கொள்வதை கவனமாகக் கேட்கலாம். திருமணங்களுக்கு இனிமேல் நாம் மங்கல நாண் அல்லது மோதிரத்திற்கு பதிலாக ஒரு உளியையும் சுத்தியலையும் பரிசாகக் கொடுக்கலாம்.

ஒரு மாலையில் ஒருவர் அவரது நண்பருடன் ஒன்றாக அமர்ந்து தேநீர் அருந்திக் கொண்டிருந்தார். அவர் நண்பரிடம் சொன்னார் நான் என் மனைவியை விவாகரத்து செய்து விடலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறேன். கடந்த 6 மாதங்களில் அவள் என்னிடம் ஒரு வார்த்தை கூடப் பேச வில்லை. அதற்கு நண்பர் சொன்னார் அது போன்ற ஏதாவது தீர்மானம் எடுப்பதற்கு முன்னால் கவனமாக யோசித்துப்பார். உனக்கு அது போன்ற இன்னொரு மனைவி கிடைக்கமாட்டாள்.

(பலத்த சிரிப்பு)

வாழ்க்கையில் நாம் தொடர்ந்து நமக்குள் இருக்கும் உருவத்தை வெளியில் இருக்கும் நிஜத்துடன் பொருத்த முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். எல்லாம் முழுமையாகப் பொருந்தி வருவதை ஒரு போதும் காணமுடியாது. நமக்குள் இருக்கும் இந்த உருவங்களை எல்லாம் விட்டு விட்டால் நாம் முடிவற்ற சாத்தியக் கூறுகளைக் காணலாம்.

நீங்கள் இன்னும் திருமணம் ஆகாதவராக இருந்தால் உங்கள் மனக்கோட்டைகளை விட்டு விடுங்கள். அதனால் உங்கள் வாழ்க்கைத்துணையைத் தேர்ந்தெடுக்க முடியும். கனவுத்துணையை அல்ல! நீங்கள் ஒரு மனிதரைக் தேர்ந்தெடுக்கும் பொழுது நீங்கள் அவருடன் வாழப் போவது வெறும் சில மாதங்களுக் கல்ல உங்கள் வாழ்நாள் முழுவதும் என்பதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். அதை அலட்சியமாக நினைக்காதீர்கள். அது வாழ் க்கை முழுவதற்குமான ஒரு விடயம். தற்சமயம் ஏதோ ஒரு கறுப்பு ஜீன்ஸ் அல்லது நீல டீ-சர்ட் உங்கள் கனவு லகத்துடன் ஒத்துப்போக லாம். நீங்களும் அதனால் கவர்ந்து இழுக்கப் படலாம். ஆனால் நீலமோ அல்லது கறுப்போ வெறும் 6மாத காலத்தில் அது வெளுத்துப் போய் விடும் என்பதை புரிந்து கொள்ளுங்கள்.




நீங்கள் ஏற்கனவே திருமணமானவராக இருந்தால் உங்கள் மனக்கோட்டைகளை விட்டு விடுங்கள்.அப்பொழுது தான் உங்களால் யாருடனுமே ஒரு உண்மையான உறவைத் தொடங்க முடியும். நீங்கள் அத்றகுள் ஒரு உளியுடனும் சுத்தியலுடனும் நுழைந்தால் ஒரு உண்மையான உறவு நிகழ முடியாது. பாருங்கள் செதுக்கும் பொழுது என்ன நிகழ்கிறதென்றால் நீங்க செதுக்க ஆரம்பித்து முடித்து விட்டீர்கள்.........

(தொடரும்)

**பரமஹம்ஸ சுவாமி**

# அதிசய உலகம்

### இந்திய மாணவனின் அசாத்திய திறமை... 13 வயதில் தொழிலதிபரான அதிசயம்!..



இந்திய வம்சாவளியை சேர்ந்த 13 வயது மாணவன் ஒருவன் இளம் வயதில் தொழில் அதிபராகி உள்ளான்.

அமெரிக்காவில் கலிபோர்னியாவை சேர்ந்த 13 வயது சிறுவன் சுபம் பானர்ஜி 8ம் வகுப்பு படித்து வருகிறான்.

இவனது பள்ளியில் அறிவியல் கண்காட்சி நடந்தது. அதில் வைப்பதற்காக கண் பார்வையற்றவர்கள் படிக்கும் பிரெய்லி பிரிண்டரை உருவாக்கினான்.

தற்போதுள்ள பிரெய்லி பிரிண்டர் 9 கிலோவுக்கு மேல் எடை உள்ளது. ஆனால் சுபம் பானர்ஜி தயாரித்துள்ள பிரிண்டர் மிக குறைந்த எடை கொண்டது. மேலும் விலையோ மிகவும் குறைவு அதாவது ரூ.15 ஆயிரம் மட்டுமே. மேலும், சிறுவன் சுபம் பானர்ஜி ரூ.20 லட்சம் முதலீட்டில் புதிதாக சிறிய கம்பெனி தொடங்கி தொழில் அதிபர் ஆகி யிருக்கிறான்.

# சமைப்போம் சுவைப்போம்

## தக்காளி காரப்பணியாரம்



**தேவையானவை:**

இட்லி மாவு- 2 கப்,

பெங்களூர் தக்காளி- 3

கேரட் துருவல்,

ஊறவைத்த பச்சைப் பட டாணி தலா- 3 டேபிள்ஸ பூன்,

ரஸ்க்தூள்-2 டேபிள்ஸ் பூன்,

மிளகாய்த்தூள்- 2 டீஸ்பூன்,

கறிவேப்பிலை

ஒரு ஆர்க்கு,

நறுக்கிய கொத்தமல்லித்தழை- 2 டேபிள்ஸ்பூன்,

கடுகு, கடலைப்பருப்பு, உளுத்தம்பருப்பு தலா ஒரு டீஸ்பூன், பெருங்காயத்தூள் அரை டீஸ்பூன், கறிவேப்பிலை ஒரு ஆர்க்கு, எண்ணெய்- 6 டேபிள்ஸ்பூன், உப்பு சிறிதளவு.

**செய்முறை:-** வாணலியில் 2 டேபிள்ஸ்பூன் எண்ணெய் ஊற்றி. கடுகு, பெரு ங்காயத்தூள், கடலைப்பருப்பு, உளுத்தம்பருப்பு, கறி வேப்பிலை தாளித்து கேரட் துருவல், பட்டாணி சேர்த்து வதக்கி, தக்காளியை சேர்த்து மேலும் வதக்கவும். இதனுடன் உப்பு, மிள காய்த் தூள் சேர்த்துக் கிளறி, இறுதியில் ரஸ்க்தூளையும் சேர்த்து வதக்கி இறக்கி, கொதத மல்லித் தழை சேர்த்து சிறிது நேரம் ஆறவிடவும். பிறகு, இந்தக் கலவையை இட்லி மாவுடன் சேர்த்துக் கலக்கவும். குழிப்பணியாரக் கல்லை அடுப்பில் வைத்து, சூடானதும் குழிகளில் சிறிதளவு எண்ணெய் விட்டு, மாவை முக்கால் குழி வரை ஊற்றவும். ஒரு புறம் வெந்ததும் திருப்பிப் போட்டு எடுக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண கல்வி நிலையை முன்னிலைப்படுத்த விசேட கவனம்

## இராஜாங்க கல்வி அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

வடக்கில் மூடப்பட்டிருக்கும் பாடசாலைகள், பயிற்சிக்கலாசாலைகள், சர்வகலாசாலைகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படும் என இராஜாங்க கல்வி அமைச்சர் இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமன்றி, அங்கு பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகள் தொடர்பாக அங்குள்ள முதலமைச்சர் உட்பட மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்து தீர்வை பெற்றுக்கொடுக்கவும் இது தொடர்பாக ஜனாதிபதி, பிரதமரின் கவனத்திற்குக் கொண்டுவரவும் எதிர்பார்த்துள்ளேன் என அவர் தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சின் கேட்போர் கூட மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆசிரிய நியமனம் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை தேசிய கல்வியியல் கல்லூரி, ஆசிரிய பயிற்சிக்கலாசாலை, ஆசிரிய மத்திய நிலையங்களுக்கான தமிழ்மொழி மூலம் 107 பேரும் சிங்களமொழி மூலம் 108 பேருமாக மொத்தம் 215 பேருக்கான நியமனங்கள் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம், இராஜாங்க கல்வி அமைச்சர் இராதாகிருஷ்ணன் ஆகியோரால் கொழும்பில் அமைந்துள்ள இசுறுபாய அமைச்சின் கேட்போர் கூடத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.

கல்வியின் மூலமே ஒரு நாட்டின் பல்வேறு துறைகளும் அபிவிருத்தி அடைய முடியும். உலகின் ஏனைய நாடுகளுக்கு நிகராக எமது இலங்கை உயர்வடைய வேண்டுமானால் கல்வித்துறை சரியான முறையில் அமுல்படுத்தப்படவேண்டும்.

எமது நாட்டில் சிங்களவர், தமிழர், முஸ்லிம் ஆகிய மூவினத்தவர்களும் கல்வியைப் பெற்றுக்கொள்வதில் சம வாய்ப்பை பெற்றுக்கொடுக்க எனக்கு கிடைத்துள்ள இந்த அமைச்சுப் பதவியை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்வேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோர் நன்கு ஆராய்ந்து எனக்களித்துள்ள இந்த பதவியை எந்த நோக்கத்திற்காக எனக்கு வழங்கியுள்ளார்களோ அதன்படி செயலாற்றுவேன்.

மத்திய மாகாணத்தில் கல்வி அமைச்சராக இருந்த காலப்பகுதியில் மூவினத்தைச் சேர்ந்த கல்விப்பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோருடன் இணைந்து கல்வி மேம்பாட்டுக்காக ஒன்றிணைந்து செயலாற்றிய அனுபவம் எனக்கு உண்டு.

அதேசமயம் மலையக கல்வி எம்நாட்டில் பின்னடைவாகக் காணப்படுவதை அனைவரும் ஏற்றுக்கொள்ளும் ஒரு விடயமாகும். ஐந்து வீதமான மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்கு அனுமதி பெறவேண்டி இருந்த காலகட்டத்தில் ஒரு வீதமான மாணவர்களே அனுமதி பெறுகின்றமை மிகவும் கவலைக்குரிய ஒரு விடயமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# இலங்கையுடன் பாகிஸ்தான் உறவைப்பலப்படுத்த ஆர்வம்

## உயர்ஸ்தானிகர் ஹாசிம் குரேசி தெரிவிப்பு

பாகிஸ்தான் - இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கும் இடையில் நிலவிவரும் சகல துறை ரீதியான ஒத்துழைப்புக்களை மேலும் அதிகரிக்க ஆர்வம் இருப்பதாக இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் ஹாசிம் குரேசி தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் மேஜர் ஜெனரல் ஹாசிம் குரேசிக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும் இடையிலான கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் வெளிவிவகார அமைச்சர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இடம்பெற்ற இக்கலந்துரையாடலின் போது இரு நாடுகளுக்கும் இடையிலான முழு வர்த்தக ஒப்பந்தங்கள், இரு நாட்டு வர்த்தக கலந்துரையாடல்கள் ஆகியன முக்கிய இடம் வகித்ததுடன், பேணப்படும் நல்லுறவினை இரு நாட்டுக்கும் இடையில் மேலும் வலுப்படுத்துவது தொடர்பிலும் முக்கியத்துவம் செலுத்தப்பட்டது.

பாகிஸ்தான் வெளிவிவகார அலுவல்களின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சர்ராஜ் அஸிஸ் பாகிஸ்தான் பிரதமர் நவாஷ் ஷெரிப்பின் சார்பில் நாட்டு வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அவரது கடமைகளை புதிதாக பொறுப்பேற்றமை குறித்து வாழ்த்துரைகளை தெரிவித்தார்.

இதற்கு பதிலளிக்கும் வகையில் கருத்து தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இலங்கையுடனான தொடர்ந்து பலமான உறவினை பேணிவரும் பாகிஸ்தானுக்கு எமது நாட்டின் சார்பில் பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார். அத்துடன் இரு நாடுகளுக்கும் பரஸ்பர நன்மையினை வகுக்கும் உறவு மேம்பாட்டுக்கும் நன்றிகளை தெரிவித்தார். அத்துடன் வர்த்தக முதலீட்டு மற்றும் கூட்டு வர்த்தக ஒப்ப ந்தங்களில் இரு நாட்டு வர்த்தக உறவு ஒப்பந்தங்களை மேலும் பாதுகாத்து பேணுவதாக உறுதியளித்துள்ளனர். (இ-5)


**விற்பனைக்கு**

LG குளிர்சாதனப்பெட்டி
Double door
Door cooling
தொடர்பு:- 0750783945
(9239)



**பெற்றோர் கவனத்திற்கு**

* உங்கள் வீட்டில் 2 வயதுக்கும் 5 வயதுக்கும் இடைப்பட்ட குழந்தைகள் இருக்கின்றனரா?
* இந்தப் பிள்ளைகள் பற்றி கனவு ஒன்று காண்கிறீர்களா?
* இந்தப் பிள்ளைகளுக்கும் உங்கள் எண்ணப்படி ஒரு ஆரோக்கியமான எதிர்காலத்தை உருவாக்குவதற்கு விரும்புகிறீர்களா?

**இன்றே அழையுங்கள்:- 021 568 9998, 077 346 2167**
(9221)



வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு: 021 321 0815, 021 567 1532



**தொழில் வாய்ப்புக்கள்**

நம்பிக்கையோடு வாருங்கள். உங்களுக்கு வெற்றி நிச்சயம் உள்நாட்டிலே வேலையினைப் பெற இன்றே தொடர்பு கொள்ளுங்கள். சம்பளம் 20,000/=, 26,000/=, 45,000/= (தொழில் அடிப்படையில்) கொழும்பை அண்மித்த பிரசித்தி பெற்ற தொழிற்சாலைகள் (ஜேம்/டொபி/கோடியல்/ பிளாஸ்டிக்/ பால்மா...) தனியார் துறைமுகம் விமான நிலையம் வாகன சாரதிகள், இலக்ரீசன் மற்றும் மேசன், கையுதவியாளர் உட்பட பல வேலைவாய்ப்புக்கள். அனுபவமற்றவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படும். வருகை தரும் நாளிலே வேலை. வயது 17-50 ஆண்/ பெண், உணவு ,தங்குமிடம் ஒழுங்கு செய்து தரப்படும்.

மேலதிக தகவல்களுக்கு:-
யாழ். கிளிநொச்சி, மட்டக்களப்பு:- 077 683 8231
திருகோணமலை,முல்லை.,வவுனியா, மன்னார்:- 077 111 6770
(இ-9905)



**விசேட சலுகை**

வலம்புரியின் 15 ஆம் ஆண்டு நிறைவின் தொடராக பின்வரும் விளம்பரங்களுக்கு சலுகைகள்

- கோயில் விளம்பரங்கள்
- பாடசாலை விளம்பரங்கள்
- மரண அறிவித்தல்கள்
- கண்ணீர் அஞ்சலிகள்
- நினைவுகூரல்கள்

வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு அறியத் தருக்கின்றோம்.

முழுப்பக்கம், அரைப்பக்கங்களுக்கு மாத்திரமே இவ் விசேட சலுகைகள் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

தொடர்புகளுக்கு :- 021 221 7603 / 021 567 1532
E-mail:- valampuriijaffna@gmail.com



**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 27<br>உயரம்: 5'3"தகைமை/தொழில்: பட்டதாரி/ ஆசிரியர்<br>தொ.இ: B/4023 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 40 செவ் 1 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்<br>தொ.இ: G/4053 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 14<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BCS, MSC, PHD/ உதவி விரிவுரையாளர்<br>தொ.இ: B/4024 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 38 செவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: CIMA/ BCS/ கணக்காளர்<br>தொ.இ: G/4056 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 28 1/2 செவ் 2 இல்<br>தகைமை/தொழில்: பட்டதாரி (லண்டன் PR)<br>தொ.இ: B/4025 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 12 1/2 உயரம்: 150cm<br>தகைமை/தொழில்: HNDA, AAT/ தனியார் தொழில்<br>தொ.இ: G/4058 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 31 1/4 செவ் 2 இல்<br>உயரம்: 5'9"தகைமை/தொழில்: BSC/ தனியார் (சிங்கப்பூர்)<br>தொ.இ: B/4028 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 36 1/2 உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: 9ம் தரம்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/4062 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
... காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி கொலைச்சம்பவம் மூன்று பேருக்கு பிணை அனுமதி


(சாவகச்சேரி)

தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் இளைஞர் ஒருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்களில் மூவரை தலா 30 ஆயிரம் ரூபா காசுப்பிணை மற்றும் தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணையிலும் செல்ல சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் அனுமதியளித்துள்ளார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் அல்லாரையைச் சேர்ந்த என்.அன்பழகன் (வயது- 26) என்பவர் 2014 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5ஆம் திகதி வெட்டிக்கொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என 7 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

வழக்கில் சம்பந்தப்பட்ட 3 சந்தேகநபர்களுக்கும் பிணை வழங்குமாறு, அவர்களது உறவினர்களால் யாழ்.மேல் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. அதற்கு மேல் நீதிமன்றம் அனுமதி வழங்கியதையடுத்து, சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்டுள்ளது. (இ-29)



## 25 ஆவது வருட நினைவு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பொதுவுடைமை இயக்கத்தின் புரட்சிகர முன்னோடி தோழர் கே.ஏ. சுப்பிரமணியத்தின் 25 ஆவது வருட நினைவு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு தேசியக் கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

முன்னாள் கல்வித் திணைக்கள உத்தியோகத்தர் இ.தவராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் தோழர் மணியம் நினைவுகள் நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளது. (இ

# பொலிஸ் நிலையத்தில் வைத்து பொலிஸாரின் மீது தாக்குதல்!

## மூவர் கைதாகிப் பிணை

**“கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் வைத்து பொலிஸார் மீது தாக்குதல் நடத்திய மூன்று சந்தேகநபர்களை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட மூவரையும் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்.நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய போது நீதவான் மூவரையும் தலா 2 இலட்சம் ரூபா பெறுமதியான சரீர பிணையில் விடுவித்ததுடன் வழக்கினை எதிர்வரும் மார்ச் மாதம் 24 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.”**

கோண்டாவில் பகுதியை சேர்ந்த குடும்பநல மருத்துவ மாது ஒருவர் தனது வீட்டில் இருந்து வெளியே புறப்படுகையில் வீட்டிற்கு அருகில் மது போதையில் நின்ற மூவர் அவர் தொடர்பாக அவதூறுகளை கூறியுள்ளனர்.

அதனை அடுத்து மருத்துவ மாதுவின் கண்பார்வையற்ற கணவர் அது தொடர்பில் மதுபோதையில் நின்றவர்களுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுப்பட்டுள்ளார்.

அதனை அடுத்து மது போதையில் நின்ற மூவரும் கண்பார்வை அற்றவரை தாக்கியுள்ளனர். அதையடுத்து அங்கு கூடிய அயலவர்கள் மதுபோதையில் நின்றவர்களை அங்கிருந்து விரட்டி விட்டனர்.

தம் மீது தாக்குதல் மேற்கொண்டவர்கள் தொடர்பில் அவர்கள் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்ய சென்ற போது பொலிஸார் அவர்களுடைய முறைப்பாட்டை ஏற்காமல் அசமந்த போக்காக இருந்தனர்.

குறித்த குடும்பத்தினர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய சென்ற விடயத்தை கேள்வியுற்ற மதுபோதையில் தாக்குதல் மேற்கொண்ட மூவரும் மேலும் 10 பேருடன் பொலிஸ் நிலையத்திற்கு வந்து பொலிஸார் முன்னிலையில் தமக்கு எதிராக முறைப்பாடு செய்தால் குடும்பத்தையே வெட்டுவோம் என மிரட்டியுள்ளனர்.

அதையடுத்து பொலிஸார் தாக்குதல் மேற்கொண்ட மூவரையும் தவிர ஏனையவர்களை பொலிஸ் நிலையத்தை விட்டு செல்லுமாறு கூறிய போது மூவரும் பொலிஸாருடன முரண்பட்டதுடன் பொலிஸ் நிலையத்தில் இருந்த கதிரை, மேசைகளையும் தள்ளி வீழ்த்தி அட்டகாசம் புரிந்துள்ளனர் என தெரிய வந்துள்ளது. (இ-5)

# செங்குந்தா சந்தைக்கான நிதியினை வேறு தேவைக்கு மாற்ற வேண்டாம்

## வடமாகாண சபை யாழ்.மாநகர சபைக்கு கடிதம்

யாழ்ப்பாணம் செங்குந்தா சந்தை அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட நிதியை வேறு தேவைகளுக்கு மாற்றுவதை நிறுத்துமாறு வடக்கு மாகாண சபை, யாழ்.மாநகர சபை ஆணையாளரை அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக நேற்று முன்தினம் வடக்கு மாகாண சபை அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 2004/2005 ஆம் ஆண்டுகளில் செங்குந்தா சந்தையின் புதிய கட்டடத் தொகுதிக் கடைகள் கேள்விகள் மூலம் வாடகைக்கு வழங்கப்பட்ட போது பெறப்பட்ட உரிமப்பணம் முழுவதும் அச்சந்தையின் தொடர் அபிவிருத்திக்கென நிலையான வைப்பிலிடப்பட்டது. அத்துடன் இத்திட்டத்திற்கென நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து பெறப்பட்ட ரூபா பத்து இலட்சமும் இந்நோக்கத்திற்காக நிரந்தர வைப்பிலிடப்பட்டது. 2006 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாக அபிவிருத்தி வேலைகள் தொடரப்படாமல் இருந்த போதும் நிலையான வைப்புப்பணம் அப்படியே பேணப்பட்டு வந்துள்ளது.

எனினும் இந்த வைப்புப் பணத்தை வேறு தேவைகளுக்காகத் தாங்கள் மீளப்பெற நடவடிக்கை எடுப்பதாக அறியப்படுகிறது.

செங்குந்தா சந்தையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடரப்பட வேண்டியுள்ளதால் அதற்கெனக் குறித்தொதுக்கப்பட்டு நிரந்தர வைப்பிலுள்ள பணத்தை வேறு தேவைகளுக்குப் பாவிப்பதை உடன்நிறுத்துமாறு கோரப்படுகிறது. இது பற்றிய தங்கள் நடவடிக்கை பற்றி எமக்குத் தெரியப்படுத்தவும் என வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே சிவஞானம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கடிதத்தின் பிரதிகள் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், முதலமைச்சரின் செயலாளர், உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ

## வருட இறுதி ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தூரசேவைப் பேருந்து உரிமையாளர்கள் கம்பனியின் வருட இறுதி ஒன்றுகூடல் நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

கம்பனி உரிமையாளர்களும் பணியாளர்களும் இணைந்து நடத்தும் இந்நிகழ்வில் சிறப்பு நிகழ்ச்சியாக உரிமையாளர்களுக்கான அதிர்ஷ்டசீட்டிழுப்பு மூலம் கடன் வழங்கும் நிகழ்வும் மற்றும் தொழில் அடையாள அட்டை வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (இ




## இரத்ததானம்

கோண்டாவில் நெட்டிலிப்பாய் சனசமூக நிலையத்தின் 70 ஆம் ஆண்டு நிறைவை ஒட்டி இன்று காலை 9 மணிக்கு இரத்ததான முகாம் நடைபெறவுள்ளது. (இ

# சிவாலயத்தை புனருத்தாரணம் செய்ய இந்துக்குருமார் ஒன்றியம் நடவடிக்கை



வட்டுக்கோட்டை துணைவிப் பகுதியில் மிகவும் பாழடைந்த நிலையிலுள்ள தொன்மைமிகு சிவாலயத்தினை சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ சபா. வாசுதேவக்குருக்கள் பார்வையிட்டுள்ளார்.

அவ்வூர் சிவனடியார்களது வேண்டுகோளுக்கிணங்க அங்கு சென்று பார்வையிட்டார்.

புனருத்தாரணம் செய்யப்படாத நிலையில் காலத்தால் மிகவும் பழமையுடையதாகவும் வடமொழி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டுடன் காணப்படும் இச் சிவாலயத்தின் தோற்றம் பற்றியும் அதன் வழித்தோன்றல்கள் பற்றியும் குருமார் ஒன்றியம் அறிந்து மிக விரைவில் அதனது பழைமை குன்றாது புனருத்தாரணத்தினை செய்து மக்கள் வழிபாட்டுக்கு வழிசமைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ சபா. வாசுதேவக்குருக்கள் தெரிவித்துள்ளார். (இ-5)

# என் மீதான குற்றப்பத்திரத்தை எதிர்பார்த்திருக்கின்றேன்

## அனந்தி சசிதரன் கட்சிச் செயலருக்கு கடிதம்

என் மீதான குற்றச்சாட்டு பத்திரத்தை தமிழரசுக்கட்சியிடம் இருந்து எதிர்பார்த்து காத்திருக்கின்றேன் என வட மாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரன் தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எனது மனச்சாட்சிக்கு விரோதமில்லாமலும் தமிழரசுக்கட்சியின் அடிப்படை கொள்கைகளுக்கு வலுச்சேர்க்கும் நோக்கிலும் கட்சியின் முடிவென்ற பெயரில் கடந்த 3 ஆம் திகதி ஜனவரி மாதம் 2015 இல் தமிழரசுக்கட்சியின் முன்னாள் தலைவர் இரா.சம்பந்தனின் தலைமையில் பத்திரிகையாளர் மாநாட்டில் அறிவிக்கப்பட்ட முடிவுக்கு மாறாக மைத்திரிபால சிறிசேனவுக்கு வெளிப்படையாக ஆதரவு தெரிவிக்க முடியாது என தெரிவித்திருந்தேன்.

காலாண்டு காலமாக தமிழ் அரசியலினால் கட்டிக்காக்கப்பட்ட அடிப்படை அரசியல் அறங்களை பாதுகாக்கும் பொருட்டும் எனது மனச்சாட்சிக்கு நேர்மையாக இருக்கும் பொருட்டும் இந் நிலைப்பாட்டை நான் எடுத்தேன். தமிழரசுக் கட்சிக்குள் உட்கட்சி ஜனநாயகம் முழுமையாக செத்துவிடவில்லை என்ற நம்பிக்கையிலேயே அக் கருத்தை வெளியிட்டேன். நான் கட்சியின் உறுப்புரிமையில் இருந்து இடைநிறுத்தப்பட்டதான தங்கள் கடிதம், எனது நம்பிக்கை தவறானது என்பதை நிரூபித்துள்ளது. உங்கள் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு என் மீதான குற்றச்சாட்டு பத்திரத்தை எதிர்பார்த்து காத்திருக்கின்றேன். அக் குற்றச்சாட்டு பத்திரத்தோடு பின்வரும் இரண்டு வகை ஆவணங்களையும் சேர்த்து அனுப்புமாறும வேண்டுகின்றேன்.

1.தமிழரசுக் கட்சியின் ஜனாதிபதி தேர்தல் தொடர்பான ஜனநாயக ரீதியாக முடிவெடுக்கப்பட்டதை ஆவணப்படுத்தும் கூட்டத்தின் கூட்ட அறிக்கை, இது தொடர்பாக கலந்துரையாடப்பட்ட கட்சிக் கூட்டங்கள் அனைத்தினதும் கூட்ட அறிக்கை, அவற்றில் சமுகமளித்தவர்களின் பெயர் விபரங்கள்.

2.தமிழரசுக்கட்சியின் யாப்பன் பிரதியொன்று இவ்வாறு அக் கடிதத்தில தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சு.கவுக்கு எதிராக செயற்பட்டோர் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமாம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் யாப்பு மற்றும் கொள்கைகளுக்கு முரணாக செயற்படுகின்ற உறுப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று கட்சியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்துள்ளார்.

சுசில் பிரேமஜெயந்த விடுத்துள்ள அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்களுக்காக இந்த அறிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாகாண சபை உள்ளிட்ட பல உளளூராட்சி மன்றங்களில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் உறுப்பினர்கள் சிலர் சத்தியக் கடதாசியின் மூலம் எதிர்த்தரப்பினருக்கு ஒத்துழைப்பை வெளிப்படுத்த தயாராகி வருவதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

எனினும் இதன்மூலம் ஏற்படும் ஆட்சி மாற்றம் தற்காலிகமானது என்றும், இதனால் மாகாண சபையினதோ, ஏனைய உள்ளூராட்சி மன்றங்களினதோ நிலையற்ற தன்மையை சீர்செய்ய முடியாது என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-5)

## கொடுப்பனவுகளை பெறமாட்டேன்-சஜித்

(கொழும்பு)

என்னுடைய மாதாந்த சம்பளம் மற்றும் எரிபொருள் கொடுப்பனவுகளை நான் பெறமாட்டேன். அவற்றை வீடு அபிவிருத்தி நிதியத்தில் வைப்பிலிடுவேன் என்று வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பத்தரமுல்லையிலுள்ள அமைச்சில் தன்னுடைய கடமைகளை நேற்று முன்தினம் வியாழக்கிழமை பொறுப்பேற்று கொண்டதன் பின்னர் அங்கு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நல்லாட்சிக்கு முன்மாதிரியாகவே இதனை நான் மேற்கொள்கின்றேன் என்றும் அவர் தெரிவித்தார்.

இங்கு சமய அனுஷ்டானங்களை மேற்கொண்ட கோட்டே நாக விஹாரையின் விஹாராதிபதி மாதுலுவாவே சோபித தேரர், சஜித் பிரேமதாசவுக்காக அதிகநேரம் பிரீத் ஓத வேண்டிய தேவையில்லை என்பதுடன் தந்தையைப் போல செயலாற்றுமாறு ஞாபகப்படுத்துகின்றேன் என்றும் அவர் தெரிவித்தார். (இ-5)

## பேசும் படம் - 06



மல்லாக்க படுத்து விட்டத்தைப் பாத்து தூங்கிறதில என்ன சுகம்

குறிப்பு : அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் : valampuriijaffna@gmail.com

facebook: www.facebook.com/valam.puri.16

தபால் முகவரி : ஆசிரியர், பேசும் படம், வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

அல்லது நேரில்.

# முப்படைகளுக்கு இனி பேச்சாளர்கள் இல்லை

## அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

**இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் பேச்சாளர் பதவிகளை இல்லாது செய்வதற்கு புதிய அரசு முடிவெடுத்துள்ளது. இந்தத் தகவலை உறுதிப்படுத்திய அமைச்சரவைப் பேச்சாளரான சுகாதார அமைச்சர ராஜித சேனாரட்ன, யுத்தம் இல்லாத சூழ்நிலையில் மேற்படி பதவிகள் அவசியமில்லை என்ற தொனியில் கருத்து வெளியிட்டுள்ளார்.**

எனினும், பொலிஸ்துறைக்கான பேச்சாளர் பதவி தொடர்ந்தும் இருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

புதிய ஜனநாயக முன்னணி அரசின் கன்னி அமைச்சரவைக் கூட்டம் கடந்த புதன்கிழமை இரவு நடைபெற்றது.

இதன்போது எடுக்கப்பட்ட முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. இதன் போது கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரட்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதேவேளை, அரச அதிகாரிகள் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுவதும் வரையறுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு அரச அதிகாரியும் எந்தவொரு விடயம் தொடர்பிலும் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட முன்னதாக குறித்த அமைச்சுகளின் செயலாளர்களிடம் அனுமதி பெற்றுக்கொள்ளவேண்டும். பிழையான கருத்துகளை வெளியிடுவதைத் தவிர்க்க இவ்வாறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன என்று அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரட்ன மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## இலங்கையில் இரத்தினக்கல் அகழ்வதற்கு வெளிநாட்டு நிறுவனங்களுக்குத் தடை!

### ஜனாதிபதி உத்தரவு

இலங்கையில் இரத்தினக்கல் அகழ்வதற்கு எந்தவொரு வெளிநாட்டு நிறுவனத்துக்கும் இடமளிக்க வேண்டாம் எனவும் அத்தகைய கேள்விப்பத்திரங்களை தடை செய்யுமாறும்ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேன சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமைச்சில் தமது பொறுப்புக்களை நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாகக் கையேற்று அதிகாரிகள் மத்தியில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார் .

ஜனாதிபதி இங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், இரத்தினக்கல் கைத்தொழிலை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு கையளிப்பதற்கு அரசாங்கம் ஒருபோதும் தயாரில்லை. எமது நாட்டில் இரத்தினக்கல் அகழ்வதற்கு சிங்கப்பூர் நிறுவனமொன்று தயாராகி வருவதாகக் கடந்த தேர்தல் காலங்களில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

எவ்வாறாயினும் இரத்தினக்கல் கைத்தொழிலைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் கொள்கையாகும். தற்போதைய தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள விசேட திட்டங்கள் தொடர்பில் தமக்கு அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறும், மொரகஹகந்த நீர்த்தேக்கப் பிரதேசத்தில் நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள இரத்தினக்கல் அகழ்வு நடவடிக்கையை உடனடியாக நிறுத்துமாறும் அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

நாட்டில் மணல் அகழ்வதற்குப் பொருத்தமான இடங்கள் தொடர்பில் ஆய்வு செய்து இருவாரங்களில் தமது அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொண்டார். ஜனாதிபதி பெப்ரவரி முதலாம் திகதி முதல்பொலநறுவைமாவட்டத்தில்மணல் அகழ்வதையும் மணல் போக்குவரத்தையும் உடனடியாக நிறுத்துமாறும் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பான சட்டங்களை பலப்படுத்துமாறும் எத்தகைய தராதரத்தை உடையோராயினும் சூழல் மாசுக்கான செயற்பாடுகளுக்கு இடமளிக்க வேண்டாம் என்றும் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். (இ-5)

## மனுஸ், நவுறு தீவிலுள்ள அகதிகளின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது-இயன் ரிண்டோல்

அவுஸ்திரேலிய புகலிடக் கோரிக்கையாளர்களை அதன் அண்மைய தீவுகளுக்கு அனுப்பி சிறைக் கூடத்துக்கு ஒப்பான முறையில் அடைத்து வைத்துள்ளது.

இதன் காரணமாக கடந்த 10 நாட்களாக தொடர்ச்சியாக புகலிடக் கோரிக்கையாளர்களால் நடத்தப்பட்டுவரும் உண்ணாவிரத போராட்டத்தினால் பலரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக உள்ளதாக இயன் ரிண்டோல் தெரிவித்துள்ளார்.


தங்களது கோரிக்கைகள் நிறைவேறும் வரைக்கும் தொடர்ந்து உண்ணாவிரதம் இருப்பதாகவும் தாங்கள் மரணித்தால் தங்களது உடற் பாகங்களை அமைச்சருக்கு தானமாக வழங்குமாறு அவர்கள் கேட்டுக்கொண்டதாக இயன் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இந்த கடும்போக்கு கொள்கை காரணமாக புகலிடம் கோரிய 25 பேர் அவுஸ்திரேலியாவில் மரணித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## திருடர்கள் நாட்டை விட்டு வெளியேற இடமளிக்கப்படமாட்டாது-பஸ்நாயக்க

திருடர்கள் நாட்டை விட்டு வெளியேற இடமளிக்கப்படமாட்டாது என பாதுகாப்புச் செயலாளர் யூ.டி.பஸ்நாயக்க தெரிவித்துள்ளார்.

பல்வேறு ஊழல் மோசடிகளுடன தொடர்புடைய நபர்கள் நாட்டை விட்டு தப்பிச் செல்ல முயற்சிக்கின்றனர். இது தொடர்பிலான தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.



நாட்டை விட்டு வெளியேறிச் செல்லவோ அல்லது மறைந்து இருந்து வாழவோ இடமில்லை என பாதுகாப்புச் செயலாளர் பஸ்நாயக்க தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.


கடந்த அரசாங்கத்தில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்ட பலர் இவ்வாறு நாட்டை விட்டு தப்பிச் சென்று வருவதாக ஊடகங்களில் நாள்தோறும் செய்திகள் வெளியிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனலைதீவு பிரதேச வைத்தியசாலையின் வெளிநோயாளர்கள் பிரிவு திறந்து வைப்பு








யாழ்.அனலைதீவு பிரதேச வைத்தியசாலையின் வெளி நோயாளர்பிரிவு கட்டடத்திறப்பு விழா நேற்று முன்தினம் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர். கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் இவ்வைத்தியசாலையின் பெயர்ப்பலகையினை பிரதம விருத்தினர்களில் ஒருவராக கலந்து கொண்ட வடமாகாண முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமான சி.வி. விக்னேஸ்வரன் திறந்து வைப்பதையும் வைத்தியசாலை கட்டடத்தை முதலமைச்சருடன் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வைத்தியசாலையின் கனடா அபிவிருத்திக்குழு பணிப்பாளரும் மகப்பேற்று வைத்திய நிபுணருமான வைத்திய கலாநிதி குமாராமி கிருபானந்தன் ஆகியோர் இணைந்து நாடாவெட்டி திறந்து வைப்பது உள்ளிட்ட படங்களைக் காணலாம்.இந்நிகழ்வில் விசேட அதிதியாக வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கமும் கௌரவ விருந்தினர்களாக வடமாகாணசபை உறுப்பினர்களான க.விந்தன், பா.கஜதீபன், இ.ஆனோல்ட் மற்றும் வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இரவீந்திரன், ஊர்காவற்றுறை பிரதேசசபை தவி சாளர் ம.ஜெயகாந்தன் ஆகியோர் கலந்து கொண் டிருந்தனர்.

அனலைதீவு கனடா அபிவிருத்திக்குழுவின் நிதியில் கட்டப்பட்ட இக்கட்டடத்தினை திறப்பதற்காக சென்ற முதலமைச்சர் தலையையிலான குழுவினர் அனலைதீவின் பிரசித்தி பெற்ற கோவில்களான அனலைதீவு ஐயனார் மற்றும் பிள்ளையார் கோவில்களிலும் வழிபாடுகளிலும் ஈடுபட்டிருந் தனர். (படங்கள் :- அலுவலகச்செய்தியாளர் உ.சாளின்)

# சூழலுக்கியைவான பசுமைத்தொழில்நுட்பங்கள்-34

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு இங்கொரு தளம் வேண்டும்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

கடந்த வருடங்களைவிட இந்த வருடத்திற்கு சிறப்புக்கள் பல. அவற்றை வருட ஆரம்பத்திலேயே உணர்ந்தறியக்கூடியதாக இருக்கின்றது. விவசாயத்திலும் கால்நடையிலும் மீன்பிடியிலுமான தொழிற்றுறையின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைகளாக இருக்கும் மற்றும் எதிர்நோக்குகின்ற சவால்களை புலமையாளர்களை ஒருங்கிணைத்து அவற்றை திட்டங்களாக இனங்கண்டு நடைமுறைப்படுத்த முயற்சிகள் நடைபெறுவதனை அறிந்து மகிழ்ச்சியே. நல்லனவற்றை நடப்பு நிகழ்ச்சிகளாக காண்பதில் மகிழ்ச்சி கலந்திருக்கின்றது. ஆனாலும் இம்மூன்று வளங்களுடன் மனித வளத்தையும் சரியாக கணிப்பிட்டு அதனை முழுமையாக பயன்படுத்த வேண்டும். இப்பிரசேதத்தின் தொழில்வாய்ப்புக்கள் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும். சமகால தொழில்நுட்ப வளர்ச்சியினை எமது பிரதேசமும் உள்வாங்கிஅபிவிருத்தியடையவேண்டும்.

வடபகுதியின் வளங்கள் துல்லியமாக அளந்தறியப்பட வேண்டும். இப்பிரதேசத்தில் போர் முடிந்து ஐந்தாண்டுகள் முழுமையாக கழிந்துவிட்டன. அபிவிருத்தியின் நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. பாதைப் போக்குவரத்து சீராக்கப்பட்டிருக்கின்றது. பொருட்களை கொண்டு செல்வதற்கான வழிவகைகள் பல உருவாக்கப்பட்டிருக்கின்றன. உற்பத்திப் பொருட்களுக்கான பிரச்சினைகள் இன்னமும் தொடாந்திருக்கின்றன. வளங்களை எக்காரணங்கொண்டும் அழித்துவிட அனுமதியளிக்கலாகாது. குறிப்பாக நிலத்தடி நீர் மாசு பட்டிருப்பதற்கான அடிப்படை காரணங்கள் கண்டறியப்பட வேண்டும். மின்சார உற்பத்திக்காக உள்வந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட சுற்றுச்சூழல் பாதுகாப்பு கவனத்திற்கெடுக்கப்பட்டிருக்க வேண்டும். அல்லது சுற்றுச் சூழல் பாதுகாப்பில் கவலையீனம் ஏற்பட்டிருக்க வேண்டும். அரசியல் காரணங்களை மையப்படுத்தி நிலைகொண்ட குறிப்பிட்ட நிறுவனம் உலக சுற்றுச் சூழல் பாதுகாப்பு நடைமுறைகளிலிருந்து விலகியதற்கான காரணங்களும்

**இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 53-XVI**

கண்டறியப்பட்டு அதற்கான தண்டனை வழங்கப்பட வேண்டும். யாழ்ப்பாண குடாநாட்டின் அதி முக்கிய விவசாய பிரதேசமான வலிகாமத்து நிலத்தடி நீர் கழிவு எண்ணெய் கலந்து மாசுற்றிருப்பதற்கு அதற்கான விதி முறைகளை கவனத்திற்கொள்ளாததே காரணமாகும். இதற்காக இம்மாசுறலை ஏற்படாது தவிர்ப்பதற்கு கவனத்திற்கெடுக்க வேண்டியதை தவிர்த்ததன் காரணமென்ன என்பதனையும் அறிந்து கொள்ள வேண்டும். இதுபற்றி விலாவாரியாக பலதடவைகள் எழுதியும் அதற்கான தீர்வு எட்டப்படவில்லையென்பதால் தற்போது இப்பிரச்சினை பூதாகாரமாக எழுந்திருப்பதனை காணமுடிகின்றது. இது மக்களின் வாழ்க்கைப் பிரச்சினை, குடிநீர்ப் பிரச்சினை, விவசாயிகளின் தொழில் மற்றும் வருமானப் பிரச்சினை. இவற்றுக்கான காரணத்தை கண்டு பிடித்து இனியொரு முறை இவ்வாறு நடைபெறாதிருக்க வேண்டிய நடைமுறைகளை ஆராய்தல் வேண்டும். ஒருவரையொருவர் குற்றங்கணடு கொள்வது இதற்கு தீர்வாகாது.

ஓமந்தையின் தடைகள் நீக்கப்பட்டிருக்கின்றன என்பது நல்லன நடைபெறுவதற்கான சமிக்ஞைகள். சந்தைப்படுத்தல் மிகமுக்கியமான பிரச்சினையாக அனைவராலும் சுட்டிக்காட்டப்பட்டிருப்பினும் அதற்கான வழிவகைகள் தீவாக முன்னெடுக்கப்படவில்லை. தென்பகுதி சந்தையை முழுமையாக நம்பி வடபகுதி தொழிற்றுறை வளர முடியாது. தென்பகுதி பொருட்கள் முழுமையாக வடபகுதி யிலேயே சந்தைப்படுத்தப்பட்டிருக்கின்றன.

வடபகுதியின் உற்பத்தியினை முழுவதுமாக முன்னெடுப்பதுடன் அவற்றை தரமுயர்த்தி சந்தைப்படுத்தலுக்கான பொருட்களாக உலகசந்தைக்கு எடுத்துச்செல்ல ஆவன செய்ய வேண்டும். வடபகுதியின் விமானநிலையம் மற்றும் கப்பல் இறங்கு தளங்கள் வெளிநாட்டு வர்த்தகத்திற்கு திறந்துவிடப்பட வேண்டும். இந்த மாற்றங்கள் நிச்சயமாக வடபகுதி மட்டுமன்றி ஏனைய மாகாணங்களின் வளர்ச்சிக்கும் பேருதவியாகவும் உந்து சக்தியாகவும் இருக்கும். எமது பொருட்களுக்கான கேள்வி அதிகரித்தாலன்றி அவற்றை உலக சந்தைக்கு எடுத்து செல்லமுடியாது. தரமான புதியதான பொருட்களாக இருக்கும் வரையிலும் அவற்றை எமது அடையாளப்படுத்தலுடன் சந்தைப்படுத்தும் போது தான் அவற்றுக்கான கேள்வி அதிகரிக்கும்.

தொழிற்றுறை விருத்தியில் பலவிடயங்கள் முக்கியமானவை. உள்ளூர் தயாரிப்புக்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். தென்பகுதி தொழிற்றுறையாளர்கள் வடபகுதியை குத்தகைக்கு எடுப்பதனை முழுமையாக வரவேற்க முடியாது. அதிலும் உள்ளூர் உற்பத்திகளின் சிறப்பை உணர்ந்த பின்னும் தென்பகுதி வர்த்தகத்திற்கு இணைந்து போவதனை மீண்டும் கவனத்திற்கெடுக்க வேண்டும். மக்களின் தொழில்வாய்ப்பிற்கான வழிவகைகளை நாம் ஏற்படுத்திக் கொடுப்பதை விடுத்து தென்பகுதி பொருட்களுக்கோ அல்லது வர்த்தகத்திற்கோ நாம் முகவர்களாக இருப்பதனை தவிர்த்துக்கொள்வது நல்லது. எமது பொருட்களின் தரம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவது நம்பிக்கையைத் தருகின்றது. இயந்திரமயமாக்கலில் தரத்தையும், பொருட்களை பொதிசெய்வதனையும் சிறப்பாக தரம்வாய்ந்ததாக செய்யலாம். இதற்காக தொழில்நுட்பத்தின் உதவியினை நாடுதல் நல்லது. யாழ்ப்பாணத்தில் நடைபெறும் கைத்தொழில் கண்காட்சியில் இதற்கான சில அம்சங்களை காணக்கூடியதாக இருக்கும்.

விவசாயம், கால்நடை, மீன்பிடி என்பனவற்றின் அபிவிருத்திக்கு அவசியமான விடயங்களை மீண்டும் இனங்கண்டு செயற்படுத்த முறையான திட்டங்கள் அவசியமாகும்.

ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களிலிருந்து கற்றுக்கொண்ட விடயங்களை அடிப்படையாக வைத்து இனி செய்யவேண்டிய திட்டங்களை சீர்செய்யலாம். அதன் மூலமே வடமாகாணத்தின் வள ங்களை அடிப்படையாக வைத்த பொருளாதார கட்டமைப்பை ஏற்படுத்த முடியும். பலரும் கலந்து பேசி பலமான ஆழமான திட்டங் களை சமூ கத்தின் அவசிய தேவையையும் எதிர்கால நலனையும் கருத்தில் கொண்டு செய்து முடிதல் வேண் டும். இதற்கான வழி ஏற்படுகின்றது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துவிச்சக்கரவண்டிகள் வழங்கும் நிகழ்வு

(கிளிநொச்சி)

உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழகத்தின் அனுசரணையுடன் அமரர் ஐயம்பிள்ளை சுவாமிநாதனின் (அப்பையா) நான்காம் ஆண்டு நினைவாக அவரது மகன் கிளிபேர்ட்குலநாயகத்தின் (இலண்டன்) நிதிப்பங்களிப்புடன் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கான துவிச்சக்கரவண்டிகள் வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கிளி/சிவநகர் அ.த.க. பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், கௌரவ விருந்தினராக கரைச்சி பிரதேச சபை தலைவர் நா.வை.குகராசா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். இந்நிகழ்விற்கு அனைவரையும் பங்கேற்று சிறப்பிக்குமாறு உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழகத்தினர் கேட்டுள்ளனர். (அ-2-254)

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

## விநாயகர் ஆலய பொதுக்கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரத்தினபுரம் சிவசித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மேற்படி ஆலய முன்றிலில் நடை பெறும் என ஆலய அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர். (அ-2-272)

# ஆசிரியர்களை நியமிக்காவிட்டால் போராட்டம் நடத்துவது உறுதி

**(கிளிநொச்சி)**

**கிளி/ஜெயபுரம் மகா வித்தியாலயத்தில் நீண்ட நாட்களாக முக்கிய பாடங்களுக்கான ஆசிரியர்கள் பற்றாக் குறை நிலவி வருவதாகவும் இடமாற்றலாகிச் செல்லும் ஆசிரியர்களுக்கு பதிலீடாக ஆசிரியர்கள் எவரும் நியமிக்கப்படுவதில்லையெனவும் இதனால் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பின்னடைவை சந்திப்பதாகவும் இப்பாடசாலையின் பழைய மாணவர்களும், பெற்றோர், ஆசிரியர் சங்கத்தினரும் கவலை தெரிவிக்கின்றனர்.**

இதுதொடர்பாக கிளிநொச்சி வலயக்கல்வி பணிப்பாளர், பூநகரி கோட்டக்கல்வி அதிகாரி ஆகியோருக்கு பல தடவைகள் தெரியப்படுத்திய போதிலும் ஆசிரியர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்வதற்கு எவ்விதமான நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. மேலும் இது தொடர்பில் நேற்று முன்தினம் வடமாகாண கல்வி அமைச்சர், கிளிநொச்சி வலயக்கல்வி பணிப்பாளர், பூநகரி கோட்டக்கல்வி அதிகாரி ஆகியோருக்கு மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அம்மஜகரில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு, எமது பாடசாலையில் 38 ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டிய நிலையில் தற்போது 18 ஆசிரியர்களே கடமையாற்றுகின்றனர்.

இதில் இடைநிலைப்பிரிவு முக்கிய பாடங்களான தமிழ், விஞ்ஞானம், சைவசமயம், சுகாதாரம், வணிகம் போன்ற பாடங்களுக்கு இது வரை ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை.

இதனால் க.பொ.த.(சா/த)இல் கற்கும் மாணவர்களின் கற்றல் நடவடிக்கையில் பாரிய பின்னடைவு ஏற் பட்டுள்ளது. க.பொ.த.(உ/த) ஐ பொறுத்தமட்டில் புவியியல் பாட ஆசிரியரை தவிர வேறு எவரும் நியமிக்கப்பட வில்லை.

கலைத்துறையில் தமிழ், இந்து நாகரிகம், பொருளியல் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்கள் இது வரை நியமிக்கப்படவில்லை.

கடந்த 2013 ஆம் ஆண்டு வர்த்தகப்பிரிவு ஆரம்பிக்கப்பட்ட போதும் இதுவரை ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. இதனால் எமது பிள்ளைகள் வேறு இடங்களுக்குச் சென்று கல்வியைத் தொடர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

### ஜெயபுரம் மகாவித்தி.பாடசாலைச் சமூகம் எச்சரிக்கை

தொடர்ச்சியாக இப்பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் ஒவ்வொருவராக இடமாற்றத்திற்கு உட்படுத்தப்பட்டு மாற்றலாகும் அதே வேளை பதிலீடாக ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதில்லை.

இங்கு கற்பிக்கும் சங்கீத பாட ஆசிரியரும் தற்போது இடமாற்றம் செய்யப்படவுள்ளார். எமது பாடசாலையில் நிலவும் ஆசிரியர்கள் பற்றாக்குறையை நீக்கி எமது பிள்ளைகளின் கல்விக்கு உதவுமாறு கேட்டுக் கொள்வதோடு, பிரச்சினை தொடர்பான தீர்வை எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பொருத்தமான நடவடிக்கை எடுக்காத விடத்து அடுத்து வரும் தினங்களில் பாடசாலையை மூடி போராட்டம் நடத்துவதாகவும் தீர்மானித்துள்ளோம். தொடர்ந்து பிரச்சினை தீர்க்கப்படா விட்டால், எமது பிள்ளைகளின் கல்வி செயற்பாட்டிற்காக இப் போராட்டத்தை கோட்டம், வலயம், மாகாண மட்டத்திலும் நடத்த உத்தேசித்துள்ளதாக அம்மஜகரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான மகஜர் ஒன்று கடந்த மாதமும் மேற்படி அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)




# ஓமந்தை நெல் களஞ்சியசாலையை பயன்பாட்டுக்கு ஏற்றவாறு மாற்றுக!

### விவசாயிகள் கோரிக்கை



(வவுனியா)

வவுனியாவின் ஓமந்தை பகுதியில் அமைந்துள்ள நெல் களஞ்சியசாலை கட்டடத்தை பயன்பாட்டுக்கு ஏற்றவகையில் மாற்றி அமைத்துத் தருமாறு ஓமந்தை விவசாயிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில், வவுனியாவின் ஓமந்தை பகுதியில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் ஊடாக பல இலட்சம் ரூபா செலவில் வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் நெல் களஞ்சியசாலைக்காக மூன்று கட்டடத் தொகுதிகள் அமைக்கப் பட்டன. இக்களஞ்சியசாலையுடன் இணைந்ததாக நெல் குற்றும் ஆலை ஒன்றினையும் அமைப் பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இந் நிலையில் அக்கட்டடங்கள் தற் போது கவனிப்பாரற்ற நிலையில் பற்றைக்காடுகள் சூழ்ந்து காணப் படுகின்றது.

இந்நிலையில் இக்கட்டடத்தின் நிலை குறித்து ஓமந்தை கமக்கார அமைப்பின் தலைவரும் வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொதுச் சபை உறுப்பினருமான க.அமிர்தலிங்கம் தெரிவிக்கையில், பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான இக்கட்டடத்தில் வருடா வருடம் அரசின் நிதி உதவியுடன் நெல்லை கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தி விற்பனை செய்து வந்தோம்.


ஆனால் தற்போது இக் கட்டடம் பற்றைகள் சூழ்ந்து காடாக காணப் படுகின்றது. நெல் அறுவடை தொடங்கியுள்ளதால் இதனை துப்புரவு செய்து விவசாயிகள் தொடர்ந்தும் பயன்பெறக் கூடிய வகையில் சீர் செய்து தரவேண்டும் என கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் மற்றும் சங்கத்தின் தலைவரிடம் கேட்டுகொள்கின்றேன் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை இக்களஞ்சியசாலையில் நெல் காயவிடும் தளம் அமைக்கப்பட்டுள்ளதுடன் அத்தளம் பயன்படுத்தப்படாத நிலையில் மாடுகள் தங்குமிடமாகவும் மாறியிருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இக்கட்டடத்தில் நெல் அரைக்கும் ஆலையையும் அமைத்து தரும் பட்சத்தில் விவசாயத்தை பிரதான தொழிலாக கொண்ட வவுனியா மக்களுக்கு மிகப்பயனுள்ளதாக அமையும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (அ-2)

# காணியும் வீட்டுத்திட்டமும் வழங்கப்படாத நிலையில் முத்தையன்கட்டு ஜீவநகர்

## ● பாதிக்கப்பட்டுள்ள மக்கள் ஆதங்கம்



(குருமன்காடு)

காணியும் வீட்டுத்திட்டமும் வழங்கப்படாத நிலையில் முல்லைத்தீவு முத்தையன்கட்டு மக்கள் தொடர்ந்தும் சேதமடைந்த தற்காலிக வீடுகளிலேயே வசிப்பதாக வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

முத்தையன்கட்டு ஜீவநகர் பகுதியில் நடைபெற்ற மக்கள் குறைகேள் சந்திப்பொன்றில் காணி, வீட்டுத் திட்டம், ஏற்று நீர்ப்பாசனத்துக்கான வாய்க்கால் புனரமைப்பு உள்ளிட்ட பல்வேறு குறைகளை மக்களும் முன்வைத்திருந்தனர்.

இது தொடர்வில் மேலும் அறியவருகையில், முத்தையன்கட்டு ஜீவநகர் 90ஏக்கர் திட்ட மக்களின் வேண்டுகோளுக்கமைவாக மக்கள் குறைகேள் சந்திப்பொன்று கடந்த 21 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டது.

ஜீவநகர் அம்மன் கோயில் அருகாமையில் நடைபெற்ற இச்சந்திப்பில் கலந்து கொண்ட மக்கள் காணி, வீட்டுத்திட்டம், ஏற்று நீர்ப்பாசனத்துக்கான வாய்க்கால் புனரமைப்பு உள்ளிட்ட பல்வேறு முறைப்பாடுகளையும் கோரிக்கைகளையும் முன்வைத்திருந்தனர்.

ஏறத்தாழ 30 வருடங்களுக்கும் மேலாக அவ்விடங்களில் வாழ்ந்து வரும், முத்தையன்கட்டு ஜீவநகர் 90 ஏக்கர் திட்டத்தைச் சேர்ந்த 44 குடும்பங்களில் உள்ள மக்கள் சுமார் 5 ஆண்டுகளாக இவ்வாறு இடர்பாடுகளை எதிர்கொண்டுள்ளனர்.

இவை தொடர்பில் து.ரவிகரன் கருத்து தெரிவிக்கையில்,


மேற்படி 44 குடும்பங்களுக்கும் மத்திய வகுப்புத்திட்ட காணிகள் இன்னும் வழங்கப்படவில்லை. 2010ஆம் ஆண்டு 7 ஆம் மாதம் அளவில் தற்காலிக வீடு என்று 6 மாத உத்தரவாதத்துடன் வீடு வழங்கப்பட்டதாகவும், இன்று நான்கரை ஆண்டுகள் கடந்த போதிலும் இன்னும் காணியோ வீட்டுத்திட்டமோ வழங்கப்படவில்லை என்றும் மக்கள் தெரிவித்தனர்.

தற்காலிக வீடுகள் மிகவும் சேதமடைந்துள்ளன. தகரங்கள் மற்றும் கிடுகுகள் கொண்டு கூரைகளை மீள அமைத்து சில வீடுகளில் மக்கள் தங்களின் சிறுபிள்ளைகளுடன் வாழ்வதை கண்ணுற்றேன். இவ்வாறான தற்காலிக வீடுகளும் முன்னதாக மக்களிடம் இருந்து தலா 5ஆயிரத்து 500 ரூபா அளவில் அறவிடப்பட்டே கட்டிக் கொடுப்பதாகவும் மக்கள் தெரிவித்திருந்தனர். இது தவிர ஏற்று நீர்ப்பாசனம் செய்யக் கூடிய வழிகள் இருந்தும் வாய்க்கால் புனரமைப்புக்கள் செய்யப்படாத நிலையால் தொழில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர் என்றார். (அ-2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கடோத்கஜன்



காலப்போக்கில் கடோத்கஜனுக்கு மேக வர்ணன், அஞ்சன்பர்வன் என்ற ஆண் பிள்ளைகள் பிறந்தனர்.

பல ஆண்டுகளுக் குப் பிறகு மகாபாரத யுத்தம் மூண்டபோது, பீமன் தன் மகனை மனதில் நினைக்க, உடனே கடோத்கஜன் அங்கு பறந்து வந்து விட்டான்.

கௌரவர்களைச் சேர்ந்த பகதத் தன ஒரு பெரிய யானைப் படைக்குத் தலைமை தாங்கி பாண்டவர்களின் படைக்கு பயங்கர சேதத்தை உண்டாக்கினான்.

ஓர் உயரமான யானையின் மீது அமர்ந்து அவன் நடத்திய பயங்கரத் தாக்குதலில், பாண்டவர்களின் படை வீரர்கள் சிதறியோடத் தொடங்கினர்.

அப்போது போர்க்களத்தில் நுழைந்த கடோத்கஜன் பகதத்தனை தைரியமாக எதிர்த்துப் போராடினான்.

இறுதியில் பகதத்தன் வீழ்ந்தான்.

அர்ஜுனனுடைய பிள்ளை ஐராவதன் போர்க்களத்தில் காயமுற்று மயக்கமானான்.

அப்போது அர்ஷபிருங்கன் எனும் பகைவன் அவன் மீது வாளைப் பாய்ச்சிக் கொன்றான்.

அதைக் கண்டுக் கொதித்தெழுந்த கடோதகஜன் பூதாகாரமாகத் தன் உருவத்தைப் பெரிதாக்கிக் கொண்டு கௌரவர்கள் மீது சீறிப் பாய்ந்தான்.

எதிர்ப்பட்ட துரியோதனனையே கடோத்கஜன் தாக்கத் தொடங்கினான். இருவருக்குமிடையே கதை யுத்தம் தொடங்கியது.

துரியோதனனை தனது சக்திவாய்ந்த கதையினால் கடோத்கஜன் அடிக்க, துரியோதனனுடைய நண்பனான வங்க மன்னன் குறுக்கே வர, துரியோதனன் தப்பினான். கடோத்கஜனை சமாளிக்க முடியாமல் துரி யோதனன் திணறுவதைக் கண்ட பீஷ்மர் உடனே சோமதத்தர், சைந்தவர், துரோணர் ஆகியோரை அங்கு அனுப்பினார். அவர்கள் அனைவரும் சேர்ந்து கண்டோத்கஜனை சூழ்ந்து கொண்டனர்.


தன் மகனைப் பல பகைவர்கள் சூழ்ந்து கொண்டதைக் கண்ட பீமன் உடனே உதவிக்கு விரைந்தான். பீமனும், கடோத்கஜனும் அனைவரின் ஒருங்கிணைந்த தாக்கு தலைத் தவிடு பொடியாக்கினர்.

துரியோ தனன் கடோத்கஜனைத் தவிர்த்து பீமனை தாக்கினான்.

இருவருக்குமிடையே பயங்கர யுத்தம் மூண்டது. அதில் பீமன் காயமடைய, அவனுக்கு உதவி செய்ய அபிமன்யு அங்கே வர, மீண்டும் போர் தொடங்கியது.

ஆனால் கடோத்கஜன் தன்னுடைய மாயவித்தைகளினால், கௌரவர்களைப்பின் வாங்கச் செய்தான்.

அதற்குள் பீஷ்மரின் ஆலோசனைப்படி, காய



முற்று வீழ்ந்த பகதத்தன் சுப்ரதீக் எனும் தனது யானையின் மீது அமர்ந்து போர்க்களத்தில் புகுந்து, கடோத்கஜனை எதிர் கொணடான்.

பகதத்தனாலும் அவனை சமாளிக்க இயலவில்லை.

ஆகையால் பீஷ்மர தானே கடோத்கஜனுடன் போரிட முன் வந்தார்.

இதைக் கண்ட அர்ஜுனன் சிகண்டியுடன் அந்த இடத்திற்கு விரைந்தான்.

அர்ஜுனனைத் தாக்க முயன்ற பீஷ்மர் அவனருகில் சிகண்டி இருப்பதால் தனது ஆயுதங்களைப் பிரயோகிக்க விரும்பாமல் குழம்பினார்.

உடனே, கர்ணனை அந்த இடத்திற்கு அனுப்பினார். ஆனால், கர்ணனால் கடோத்கஜனின் சாகசங்களுக்கு ஈடு செய்ய முடியவில்லை.

கர்ணனிடம் இந்திரனுடைய சக்தி வாய்ந்த அம்புகள் இருந்தன.

அவற்றை அர்ஜுனன் மீது மட்டுமே உபயோகிக்க வேண்டும் என்று கர்ணன் முன்னமே தீர்மானித்திருந் தான்.

ஆனால் கடோத்கஜனை உயிரோடு விட்டால், அவன்கௌரவசேனையையே அழித்து விடுவான் என்று தோன்றியது.

அதனால் வேறு வழியின்றி, கர்ணன் இந்திரனுடைய ஆயுதத்தை கடோத்கஜன் மீது ஏவ, கண் டோத்கஜன் உயிர் நீத்தான்.

இவ்வாறு, கடோத்கஜன் தன் முடிவை சந்தித்தான்.

(முற்றும்)




- 1679 - இங்கிலாந்தின் இரண்டாம் சார்ல்ஸ் நாடாளுமன்றத்தைக் கலைத்தான்.
- 1857 - தெற்காசியாவின் முதலாவது முழுமையான பல்கலைக்கழகம் கல்கத்தா பல்கலைக்கழகம் திறக்கப்பட்டது.
- 1887 - அபிசீனியப் படைகள் டொகாலி என்ற இடத்தில் இத்தாலியர்களைத் தோற்கடித்தனர்.
- 1897 - சுவாமி விவேகானந்தர் சிக்காகோவிலிருந்து நாடு திரும்பும் வழியில் யாழ்ப்பாணம் வருகை தந்தார். யாழ் இந்துக் கல்லூரியில் பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது.
- 1908 - பேடன் பவல் சாரணீய இயக்கத்தை ஆரம்பித்தார்.
- 1918 - கிரெகோரியின் நாட்காட்டி ரஷ்யாவில் பெப்ரவரி 14 முதல் அறிமுகப்படுத்தப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டது.
- 1924 - ரஷ்யாவின் பெட்ரோகிராட் நகரம் லெனின் கிராட் எனப் பெயர் மாற்றப்பட்டது
- 1927 - ஆல்பிரட் ஹிட்ச்கொக் தனது த பிளெஷர் கார்டன் என்ற தனது முதலாவது திரைப் படத்தை வெளியிட்டார்.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: பிராங்க்ளின் ரூஸ்வெல்ட், வின்ஸ்டன் சேர்ச்சில் ஆகியோர் தமது கசபிளாங்கா உச்சி மாநாட்டை முடித் துக் கொண்டனர்.
- 1972 - இரண்டாம் உலகப் போரில் காணாமற்போன ஜப்பானிய படைவீரனான சொயிச்சி யாக்கோய் என்பவன் குவாம் காடு ஒன்றில் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டான்.
- 1978 - கொஸ்மொஸ் 954 என்ற சோவியத் செய்மதி பூமியின் வளிமண்டலத்துள் எரிந்து அதன் பகுதிகள் கனடாவின் வடமேற்குப் பிரதேசத்தில் வீழ்ந்தன.
- 1984 - முதலாவது ஆப்பிள் மாக்கின்டொஷ் கணினி விற்பனைக்கு வந்தது.
- 1986 - வொயேஜர் 2 விண்கலம் யுரேனசின் 81, 500 கிமீ தூரத்துக்குள் வந்தது.
- 1996 - மாஸ்கோவுக்கு உளவு பார்த்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட நிலையில் போலந்துப் பிரதமர் ஜோசப் அலெக்ஸ்கி தனது பதவியைத் துறந்தார்.
- 2007 - சூடானிலிருந்து 103 பயணிகளுடன் சென்ற விமானம் நடுவானில் கடத்தப்பட்டது.
- 2009 - இலங்கை ஊடகவியலாளர் பிரகீத் எக்னலி கொட அரசுத்தலைவர் தேர்தலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் கொழும்பில் காணாமற்போனார்.

**பிறப்புகள்**

- **1924 - சி. பி. முத்தம்மா, இந்தியப் பெண் சாதனையாளர் (இ. 2009)**

**இறப்புகள்**

- 1965 - வின்ஸ்டன் சர்ச்சில், பிரித்தானியப் பிரதமர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1874)
- 1966 - ஹோமி பாபா, இந்திய அணு ஆராய்ச்சி நிபுணர் (பி. 1909)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சி.பி.முத்தம்மா



கர்நாடகத்தில் குடகு மாவட்டத்தில் விராஜ் பேட்டையில் 1924 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24 ஆம் திகதி பொனெரி பெல்லியப்பா முத்தம்மா பிறந்தார். இவர் இந்தியக் குடியுரிமைப் பணித்தேர்வில் வெற்றியடைந்த முதல் பெண். இந்தியாவின் முதல் பெண் வெளியுறவுத்துறை அதிகாரியாக 1949 இல் பணியில் சேர்ந்தவர். இந்திய ஆட்சிப் பணிகளில் பெண் அதிகாரிகளுக்கு எதிராக உள்ள விதிகளை மாற்றப்பாடுபட்டவர். 32 ஆண்டுகள் பணியின் பின்னர் இந்தியக் குடியுரிமைப் பணியிலிருந்து 1982 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார். ஆண்கள் மட்டுமே ஆட்சி செய்து கொண்டிருந்த வெளியுறவுத்துறையில் பணிபுரிய விரும்பி அரசு பணித் தேர்வாணையம் நடத்திய தேர்வில் மிகச் சிறப்பாகத் தேர்ச்சி பெற்று இந்திய வெளியுறவுத்துறை பணியில் சேர்ந்தார் முத்தம்மா.

வெளியுறவுத்துறையின் பணி விதிகள், "அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 14 மற்றும் 15 அரசுப் பணியில் இருக்கும் பெண்களுக்கெதிரான பாலியல் பாகுபாடு நிறைந்த - பெண்ணுரிமை மற்றும் சமத்துவம் ஆகிய பிரிவுகளுக்கு எதிராக இருக்கிறதென்றும், பெண் என்பதாலேயே பணி யிலமர்வதற்கான உரிமை பாதிக்கப்படுவதென்பது அரசியல் சாசனத் திற்கெதிரானதென்றும் இந்தக் காரணங்களாலேயே தனது பதவி உயர்வு தடைபட்டிருக்கிறதென்றும் எனவே இந்த பால்பாகுபாடுகளைக் களைய நீதி மன்றம் உதவ வேண்டும் எனவும் கோரி சி.பி.முத்தம்மா உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

வழக்கை விசாரித்த நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர், பாலியல் பாகுபாடு நிறைந்த விதிகள் நீக்கப்பட்டதாக வெளியுறவுத் துறையின் சார்பில் அளிக்கப்பட்ட பிரமாணப் பத்திரத்தை ஏற்றுக் கொண்டார். முத்தம்மாவின் தகுதி பதவி உயர்வுக்கு ஏற்றதாக இருக்கிறதென சொல்லி பதவி உயர்வு அளித்த வெளியுறவுத் துறை அவரை ஹேகில் இந்தியத் தூதராக நியமித்தது. வரலாற்றுச் சிறப்பு மிகுந்த இத்தீர்ப்பு ஆணாதிக்கக் கருத்துகள் கொண்ட விதிகள் திருத்தியெழுத வாய்ப்பாக அமைந்தது. இவர் 85 ஆவது வயதில் 2009 ஆம் ஆண்டு ஒக்டோபர் 14 ஆம் திகதி காலமானார்.

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு...

....மூன்று நாள் கழித்துத் திரும்பிப் பெங்களூர் வந்து சைக்கிள் செயின் சுழற்றி விட்டு மறுபடி சிங்கப்பூர்! இந்த மாதிரி அலைந்தால் ஒரு திபேத்தியலாமாவுக்குக்கூட "நெர்வ்ஸ் ப்ரேக் டவுன்" வந்து விடும். இவ்வாறு சுஜாதா கூறினார்.

**பஞ்சு அருணாசலம்**

ரஜினியின் திரையுலக முன்னேற்றத்தில் பெரும் பங்கு வகிக்கும் பஞ்சு அருணாசலம் அப்போது ஒரு பேட்டியில் கூறியதாவது:-

"உடல் நலம் சரி இல்லாத போதும், படப்பிடிப்பை ரத்து செய்யாமல் நடித்தவர் ரஜினி. இதற்காக அவரை நான் கடிந்து கொண்டது உண்டு.

அப்போதெல்லாம், "சொன்ன வார்த்தையைக் காப்பாற்ற வேண்டாமா சார்! தூக்கம் என்ன வேணடிக் கிடக்கிறது!" என்பார்.


தயாரிப்பாளர், டைரக்டர்களின் மனதை வருத்தக்கூடாதே என்று தன் உடலை வருத்திக் கொண்டார்.

ஓய்வே இல்லாமல் நடித்ததால் தான் அவருக்கு இந்நிலை ஏற்பட்டது. அவரைப்போல் பரபரப்பான - சுறுசுறுப்பான நடிகரைப் பார்ப்பது அபூர்வம்.""

இவ்வாறு பஞ்சு அருணாசலம் கூறினார். ரஜினிகாந்த் உடல் நலமும், மன நலமும் பாதிக்கப்பட்டிருந்த காலக் கட்டத்தை, "இருண்ட காலம்" என்று டைரக்டர் கே.பாலசந்தர் குறிப்பிட்டார். ரஜினிகாந்தின் திரையுலகப் பிரம்மாவான டைரக்டர் பாலசந்தர், ரஜினிக்கு அந்த கறுப்பு நாட்களில் ஏற்பட்ட குழப்பத்தைப் பற்றியும், நரம்புத் தளர்ச்சி பற்றியும் அவ்வப்பொழுது கூறியவை வருமாறு:-

**மாற்றங்கள்**

"தப்புத்தாளங்கள் படத்திற்கு அடுத்த படம் "**நினைத்தாலே இனிககும்.**" அதன் படப்பிடிப்பு முடியும் தறுவாயில், நான் ரஜினிகாந்திடம் பல மாற்றங்களைக் கண்டேன். அதை ஓர் "இருண்ட காலம்"" என்றே சொல்வேன்.



## ரஜினிகாந்துக்கு தீவிர சிகிச்சை

ரஜினிகாந்த் புது வீட்டிற்குக் குடியேறியிருந்தபோது, என்னை அழைத்திருந்தார். அவ்வளவு பெரிய வீட்டில் என் புகைப்படத்தை மட்டும் பெரியதாக மாட்டி வைத்திருந்தார்.

அந்தப் படத்தை திடீர் என்று ஒரு நாள் கழட்டி எறிந்திருக்கிறார்.

அதை ஏன் கழட்டி விட்டீர்கள் என்று யாரோ கேட்டி ருக்கிறார்கள். இந்தப் புகழுக் கெல்லாம் பாலசந்தர் தானே காரணம் என்று உதவியாளர்களிடம் சத்தம் போட்டிருக்கிறார். ரஜினியின் நண்பர் வீட்டில் என்னிடம் வந்து சொல்லி ஏன் இப்படியெல்லாம் வினோதமாகச் செயல்படுகிறார் என்று புரியவில்லை. நீங்கள் வந்து அவரிடம் கொஞ்சம் பேசுங்கள் என்றும் சொன்னார்.

**குழந்தை போல அழுதார்**

ரஜினியை சந்தித்து நான் கேடடேன். ரஜினி சொன்னார்: "நிம்மதியாக ஒரு கண்டக்டராக இருந்த சிவாஜி ராவை, நீங்கதானே ரஜினிகாந்தாக ஆக்கினீங்க? திடீர்னு வந்த புகழ் போதையைத் தாங்கிக்கக் கூடிய சக்தி எனக்கில்லை சார் என்று தேம்பித் தேம்பி ஒரு குழந்தையைபோல் அழுதார். அவரது பேச்சு தொடர்பில்லாமல் இருந்தது. ரஜினியை அந்த சூழ்நிலையில் பார்த்த என் கண்கள் கலங்கின.

நினைத்தாலே இனிக்கும் படத்தின் டப்பிங் ஏ.பி.என் தியேட் டரில் நடந்து கொண்டிருந்தது. ரஜினிகாந்த் டப்பிங் பேச மறுப்பதாக என் உதவி டைரக்டர் கண்மணிசுப்பு, எனக்கு போன் செய்தார். நான் உடனே அங்கு சென்று ரஜினியை தனியே அழைத்து, "ஏன் டப்பிங் பேச மறுக்கிறீர்கள்? என்று கேட்டேன்.

கால் முடமானவனை ஓடச் சொல்லி வேடிக்கை பார்ப்பது ஆறறிவு படைத்த மனிதன் செய்கிற வேலையா? உடல் நலம் குன்றி இருக்கும் ஒரு மனிதனிடம் வேலை வாங்குவது நியாயமா? என்று சொன்னார். இப்படியெல்லாம் ரஜினி என்னிடம் பேசமாட்டார். மனநிலை சரியில்லாமல் தான், இப்படியெல்லாம் பேசுகிறார் என்று புரிந்து கொண்டேன்.

உடனே டப்பிங்கை கேன்சல் செய்துவிட்டு, டாக்டர் ஆர்.எஸ். ராஜகோபால் அவர்களிடம் அழைத்துச் சென்றேன்.

இடைவிடாத உழைப்பால் அதிக அளவில் ரத்த அழுத்தம் இருப்பதாகக் கூறி, ஓய்வெடுத்துக் கொள்ளும்படி கூறினார் டாக்டர். வெலிங்டன் மருத்துவமனையில் சேர்த்து கண்டிப்பாக ஒரு வாரம் ஓய்வு எடுக்க வேண்டும் என்று சொல்லி, தினம் காலையிலும் மாலையிலும் சென்று அவரைப் பார்த்துவிட்டு வந்தேன். அவர் அங்கே இருப்பது யாருக்கும் தெரி யாமல் வைக்கப்பட்டது. இந்த நேரத்தில் பலர் பலவித மாகப் பேசினார்கள். இத்தோடு அவர் வாழ்க்கை அஸ்தமித்து விட்டது என்றும், அவரது பெயரைக்கூட சொல்லா மல் சிலர் "மெண்டல" என்று குறிப்பிடுகின்ற துர்பாக்கியமான நிலைமை ஏற்பட்டிருந்தது. ரஜினியின் நலனில் அக்கறையுள்ளவர்கள் என்று பலர் கூறிக் கொள்ளலாம். அவர்களெல்லாம் என்ன சொன்னார்கள் என்பது என் காதுகளுக்கு மட்டும் கொண்டு வரப்பட்ட விஷயங்கள். ஐ.வி. சசி அவர்கள் கமலஹாசனையும், ரஜினியையும் வைத்து அலாவுதீனும் அற்புத விளக்கும என்ற திரைப்படத்தை எடுத்துக் கொண்டிருந்தார்.

(தொடரும்)





# கருவாச்சி காவியம்

**வைரமுத்து- 57**

...அவ வெரல் இடுக்குலயெல்லாம் பிசு பிசுங்குது பேன் குத்துன ரெத்தம்.

ஏ கருவாச்சி எந்திர்றீன்னு சொல்லிட்டு வீட்டுக்குள்ள கை கழுவப் போனா பவளம்.

கவுந்த தல கவுந்த மேனிக்கு அர மயக்கத்துலயே கெடக்கா கருவாச்சி.

தெருவுல நடமாட்டமில்ல; ஆள் சத்தம் மில்ல.

வேப்பமரத்துல கத்துக்கிட்டிருக்கு மழையில நனஞ்சு தொண்டக் கட்டிப் போனா காக்கா காத்துல லேசா வருது யாரு வீட்லயோ கருவாடு சுடுற வாசன.

ம்மான்னு அடிவயித்துலிருந்து கத்துது நாயக்கர் வீட்ல நேத்து ஈன்ட பசுமாடு.

ஒரு அரத்தூக்க நெனப்புலயே இதையெல்லாம் அனுமானிச்சுக் கவுந்து கெடந்த கருவாச்சி யாத்தென்னு அலறித்துடிச்சு எந்திரிக்கிறா.

அவ கழுத்துல யாரோ கயித்த வச்சு இறுக்குற மாதிரி இருந்திச்சு. எந்திரிச்சுப் பாத்தா கழுத்துல கெடந்த தாலியக் காணோம்.

சேறும் சகதியுமா இருந்த தெருவுல யாரோ தட தடன்னு ஓடுற மாதிரியிருக்கு.

நடந்து என்னான்னு நின்னு நிதானிக்க முடியல.

அய்யோன்னு கொடல் ஐவ்வு கிழியக் கத்துனா.

தண்ணிமாதிரி தரையில கெடந்தவ தண்ணிப்பாம்பு மாதிரி எந்திரிச்சா.

முந்தானைய எடுத்து இழுத்துச் சுத்துனா இடுப்புல.

பளீர்னு தவ்வுனா வாசலுக்கு வெளிய தெருவுல.

முழங்காலுக்கு மேல சுருட்டி தூக்குனா சீலய.

நடக்கக்கூட லாயக்கில்லாமக் கொழ கொழன்னு சேறாக் கெடந்த தெருவுல ஓடி வாராய்யா கருவாச்சி உள்ள கெடந்த உசுரு உச்சந்தலையில முட்ட முட்ட.

"யாத்தே எந்தாலிய அத்துட்டுப் போறான்



யாத்தே எந்தாலிய அத்துட்டுப் போறான்.''

அவ போட்ட சத்தத்துல தீப்புடிக்குது நனஞ்சு நசநசன்னு கெடந்த தெருவு.

"அய்யோ எந்தாலி!
அய்யோ எந்தாலி!''

அஞ்சுமாசம் முழுகாம இருந்த பொம்பளைக்கு அந்த தெம்பும் தெறமும் எங்கிட்டிருந்து வந்துச்சுன்னே தெரியல.

கொழஞ்ச சோத்தக் கொட்டி வச்ச மாதிரி சும்மா சொத சொதன்னு கெடக்குற ஐப்பசி மாசத் தெருவுல வெறிகொண்டு வெரட்டிப் போறா தாலி அத்து ஓடுறவன் பின்னால.

மின்னல் மாதிரி ஓடி நாயக்கர் வீடுதாண்டி, கருவேலமுள்ளு அடைச்ச சந்துவழியாத் தவ்வப்பாத்து சேறு வழுக்கித் தொப்புட்டீர்ன்னு விழுந்து போனான் தாலி அத்தவன்.

தாலியைத் தூக்கிப்பிடிச்ச கையோட மல்லாக்கக் கெடக்கான்.

தத்தக்கா பித்தக்கான்னு ஓடி வந்து அவன் கையிலிருந்த தாலியை வெடுக்குன்னு பூடுங்கிக் கழுத்துல கட்டிக்கிட்டு நான் ஒனக்கு என்னாண்ணே பாவம் பண்ணேன்ன்னு கருவாச்சி கத்திக் கதறவும் விட்டுக்குள்ளருந்த ஊரு வெளிய வந்திருச்சு.

மழைத்தண்ணியோட அழுதுக் கிட்டே. ஓம் பொண்டாட்டி தாலி பால் பாலா இருக்கட்டும்ன்னு அவனக் கை எடுத்துக் கும்பிட்டா.

வல்லூறு வேகத்துல வந்தவ பாவம். வாத்துமாதிரி திரும்பிப் போறா.


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த வளர்த்த நாய்களுக்கும் குளிரூட்டப்பட்ட ஆடம்பர அறை



நாயுடன் மகிந்தவின் மகன்களில் ஒருவர்



**“(கொழும்பு)**

**அலரி மாளிகையில் செல்லப்பிராணிகளாக விலைமதிப்பான 43 நாய்கள் வளர்க்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த நாய்கள் பராமரிக்கப்பட்ட அறை குளிரூட்டப்பட்டு ஆடம்பரமாக அறை அலங்கரிக்கப்பட்டிருந்ததாக கூறப்படுகிறது. இதனை தவிர பெறுமதியான 23 அரிய வகை பறவைகளும் ஒரு குதிரையும் இரண்டு போனிக் குதிரைகளும் அலரிமாளிகையில் செல்லப் பிராணிகளாக வளர்க்கப்பட்டுள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.”**

அலரிமாளிகையில் வளர்க்கப்பட்ட பல மில்லியன் ரூபா பெறுமதியான மெகோ வகை கிளிகள் இரண்டு கூண்டை விட்டு பறந்து போனதுடன் அவற்றை பிடிக்க இராணுவத்தினர் பயன்படுத்தப்பட்டதாக 2013 ஆம் ஆண்டு ஊடகங்களில் தகவல்கள் வெளியிடப்பட்டன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்பத்தினருக்காக கோடிக்கணக்கில் பொது நிதி செலவு செய்யப்பட்ட விதம் பற்றி தகவல்கள் ஒன்றன் பின் ஒன்றாக வெளி வந்து கொண்டிருக்கின்றது.

முன்னாள் ஜனாதிபதி வாகனங்களை பராமரிப்பதற்காக மாத்திரம் கடந்த வருடம் 250 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

இதற்கு முன்னர் இவ்விதமான ஆடம்பர வாழ்க்கையை வாழ்ந்தவர்கள் பிலிப்பைன்ஸ் நாட்டின் முன்னாள் சர்வாதிகாரியான பேர்டினட் மார்கோஸ் குடும்பத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## அனந்தி இடைநிறுத்தம் இலங்கை தமிழரசுக் கட்சியின் வட்டு. இளைஞர் அணி அதிருப்தி

வடக்கு மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் இலங்கைத்தமிழரசுக்கட்சியினால் இடைநிறுத்தப்பட்டமை உட்கட்சி ஜனநாயக கோட்பாட்டை மீறும் செயல் என சுட்டிக்காட்டியுள்ள தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை இளைஞரணியினர் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்தால் கட்சியிலிருந்து வெளியேறுவோம் எனவும் எச்சரித்துள்ளனர்.

இது தொடர்பில் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை இளைஞரணியினர் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராஜசிங்கத்திற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் இலங்கை தமிழரசு கட்சியின் உறுப்புரிமையில் இருந்து தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டமையையும் கட்சியின் இளைஞரணி செயலாளர் வி.எஸ். சிவகரன் இலங்கை தமிழரசு கட்சியின் உறுப்புரிமையில் இருந்து தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டமையையும் இலங்கை தமிழரசு கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதி இளைஞரணியினராகிய நாங்கள் வன்மையாக கண்டிப்பதுடன் இவ்வாறான செயற்பாடுகள் எம்மை மேலும் அதிருப்திக்குள்ளாக்கினால் கட்சியில் இருந்தும் இளைஞரணியில் இருந்தும் வெளியேற வேண்டி வரும் என்ற எச்சரிக்கையையும் தெரியப்படுத்துகின்றோம்.

இலங்கை தமிழரசு கட்சி என்பது உட்கட்சி ஜனநாயக பாரம்பரியக் கட்டமைப்பில் மிக நீண்ட காலம் செயற்பட்டு வந்தமையினாலும் கடந்த காலங்களில் வாலிபர் முன்னணி இளைஞர் பேரவை மற்றும் சுயாதீனமாக பலர் கட்சிக்காகவும் கட்சி நலனுக்காகவும் கட்சியின் தலைமையின் எதேச்சதிகார போக்கை கண்டித்தும் பல போராட்டங்களை நடத்தியுள்ளார்கள். அவ்வாறான போராட்டங்களில்இன்றைய தலைவர்கள கூட பங்குபற்றியிருக்கிறார்கள் குறிப்பாக அமிர்தலிங்கம் தொடக்கம் மாவை. சேனதிராசா வரை பலர் என்ற வரலாறுகளும் உண்டு.

எனவே உட்கட்சி ஜனநாயக கோட்பாட்டில் கருத்துரைக்கின்றவர்கள் மீது இவ்வாறு காழ்ப்புணர்ச்சி ரீதியாக நடவடிக்கை எடுக்க முற்படுவது என்பது வருந்தத்தக்க விடயம் ஆகும்.

தமிழ்த் தேசிய கோட்பாட்டிலும் அதன் அடிப்படை நிலையில் இருந்தும் விலகாமல் பல்வேறு சோதனைகளையும் விளைவுகளையும் எதிர்கொண்டு அரசியல் பணியாற்றுகிறவர்கள் மீது இவ்வாறான இடைநிறுத்த நடவடிக்கைகள் மிகுந்த மனவேதனையை அளிக்கிறது.

எனவே இவ்வாறான நடவடிக்கைகளை நிறுத்திக்கொண்டு தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் இருந்தும் தமிழரசு கட்சியில் இருந்தும் இடைநிறுத்தும் செய்தியானது ஒவ்வொரு தமிழ்த்தேசிய உணர்வாளர்களின் உள்ளங்களிலும் மிகுந்த வேதனையையும் ஒரு ஜனநாயக கட்சியில் உட்கட்சி ஜனநாயகம் தொடர்பிலும் கேள்வியையும் விசனத்தையும் ஏற்படுத்தி நிற்கிறது.

எனவே இவர்கள் மீதான குற்றச்சாட்டுக்களில் இருந்து இவர்களை உடனடியாக விடுவித்து கட்சிக்குள் உள்வாங்க வேண்டும்.

கடந்த காலங்களில் பல்வேறு விதமானவர்கள் இவ்விதமான பாரிய விளைவுகளை ஏற்படுத்தியும் அவர்களுக்கு எவ்விதமான நடவடிக்கையும் எடுக்காமல் விட்டு விட்டு இவர்கள் இருவர் மீதும் நடவடிக்கை எடுத்திருப்பதும் மேலதிக நடவடிக்கை எடுக்க முற்படுவதும் வேறு விதமான ஒரு நிலைப்பாட்டை தமிழரசுக்கட்சியும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பும் எடுத்திருப்பதும் வேறுவிதமான கருத்தியலை உருவாக்க முற்படுகிறதா என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளதுடன் இது இவர்கள் மீதான ஒரு முன்விரோத செயற்பாட்டுக்கான நடவடிக்கையாகவே எம்மை சிந்திகக தலைப்படுத்துகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

## 769 இலக்க பேருந்து சேவைகள் ஆரம்பம்

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ்ப்பாணம்– கீரிமலைக்கான 769 இலக்க பேருந்து சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேற்படி பகுதிக்கான பேருந்து சேவைகள் இல்லாதமையால் பொது மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் கவனத்திற்கு இவ்விடயம் கொண்டு செல்லப்பட்டது.

உடனடியாக அவர் போக்குவரத்து சபையின் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு பேருந்து ஒன்றை தமக்கு பெற்றுத் தந்துள்ளதால் யாழ்ப்பாணம்–கீரிமலைக்கான பேருந்து சேவையை கடந்த 16 ஆம் திகதி முதல் ஆரம்பித்துள்ளதாக வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பிராந்திய முகாமையாளர் அஷ்கர் தெரிவித்தார். (இ

## முறையை மாற்றினால் தேர்தல் நடத்த மூன்று மாதங்கள் அவகாசம் தேவை

### மகிந்த தேசப்பிரிய

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் தற்போது நடைமுறையில் உள்ள தேர்தல் முறையின் கீழ் இரண்டரை மாதங்களில் பொதுத் தேர்தலை நடத்த முடியும் என தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

எனினும் தேர்தல் முறையில் மாற்றங்கள் செய்தால், தேர்தலை நடத்த மூன்று மாத கால அவகாசம் தேவை எனவும் அவர் கூறியுள்ளார்.


அதேவேளை தேர்தல் ஆணையாளர் நேற்று அரசியல் கட்சிகளின் செயலாளர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார்.

தேர்தலில் அரச ஊழியர்களை தவிர ஊடக, தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளின் உறுப்பினர்களுக்கு தபால் மூலம் வாக்களிக்கும் உரிமையை வழங்குவது தொடர்பாக இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பூரண பொது மன்னிப்பை பெற்றுள்ள சரத் பொன்சேகாவுக்கு வாக்குரிமை இருக்கின்றதா என இதன் போது கேள்வி எழுப்பப்பட்டது.

அவருக்கு வாக்குரிமை இருப்பதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை மீண்டும் வழங்குவது குறித்து சட்ட ஆலோசனையை எதிர்பார்ப்பதாகவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார். (இ-5)

## பிரிவுத்துயர் பகிர்வு



### அருளானந்தம் இம்மானுவேல் ஆனந்தராஜா

ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வடமராட்சி தென்புலோலியை வசிப்பிடமாகவும் கொண்ட அருளானந்தம் இம்மானுவேல் ஆனந்தராஜா கடந்த 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார். அன்னாரின் பூதவுடல் இன்று முற்பகல 10 மணிக்கு புனித இசிதோர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் ஏழாலை இசிதோர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.



### கணபதிப்பிள்ளை செல்லத்துரை

யாழ். கொடிகாமம் கச்சாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை செல்லத்துரை நேற்று முன்தினம் வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### விஜிகரன் வீரவாகு

யாழ். சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Bielefeld ஐ வசிப்பிடமாகவும் கொண்ட விஜிகரன் வீரவாகு கடந்த 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு Senne Friedhof, Brackweder Str.79, 33647 Bielefeld, Germany என்னும் முகவரியில் நடைபெறும்.



### நாகநாதர் கிருஷ்ணசாமி

யாழ். சுதுமலையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட நாகநாதர் கிருஷ்ணசாமி (இளைப்பாறிய மகாவெளி அபிவிருத்தி சபை தலைமை வரைபட அதிகாரி) கடந்த 19 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னாரின் பூதவுடல் இன்று முற்பகல் 10.15 மணிக்கு Croydon Cemetery, Mitcham Road London CR9 3AT UK என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொஹான் பீரிஸுக்கு ஊடகப் பேச்சாளரா?

## குழப்பத்தில் அமைச்சர் ராஜித




(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸுக்கு ஊடக பேச்சாளர் ஒருவர் இருப்பதை தான் அறிந்திருக்க வில்லை என அமைச்சரவை பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**

பிரதம நீதியரசர் தனது பதவியில் இருந்து விலகுவதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக அமைச்சர் ராஜித தெரிவித்திருந்தார். இருப்பினும் இதை பிரதம நீதியரசரின் பேச்சாளர் சட்டத்தரணி விஜேரதன கொடிப்பிலி நிராகரித்திருந்தார்.

இந்நிலையில் பிரதம நீதியரசர் தொடர்பான இந்த விடயத்தில் உண்மை, பொய் என்ன என்று ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைதெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதமர் என்னிடம் கூறியதையே நான் உங்களுக்கு தெரிவித்தேன். இது குறித்து மேலதிக விபரங்கள் பிரதமருக்கே தெரியும்.

எவ்வாறாயினும் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்திக்க சந்தர்ப்பம் கேட்டுள்ளார். பதவி விலகல் தொடர்பாக பேசி தீர்மானம் ஒன்றை எடுப்பதற்காக அவர் அந்த சந்தர்ப்பத்தை கோரியிருக்கலாம் என நம்புகிறேன்.

அதேவேளை முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கையாண்டு வந்த வங்கிக் கணக்குகள் சம்பந்தமாக தற்போதைய பாதுகாப்புச் செயலாளர் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. செயலாளர் ஒருவர் அமைச்சின் பெயரில்கூட வங்கிக் கணக்குகளை வைத்திருக்கமுடியாது.

இருந்தாலும் விடயங்களை சரியானதை அறியாது அரச அதி காரிகள் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டு வருவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

இதனால், அதிகாரிகள் ஊடகங்களுக்கு கருத்துக்களை வெளியிடும் போது நிறுவனாங்கள் தொடர்பான சட்டத்தை பின்பற்ற வேண்டும் எனவும் அமைச்சர் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## பிட்டகோட்டேயில் மாட்டியது ஜனாதிபதி செயலக வாகனங்கள்

பிட்டகோட்டே - ஸ்ரீஜெயவர்த்தனபுர வாகன விற்பனை நிலையமொன்றில் இருந்து ஜனாதிபதி செயலகத திற்குச் சொந்தமானதெனக் கருதும் 53 வாகனங்கள் நேற்று அதிகாலை மிரிஹான பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. ரக்னாலங்காபாதுகாப்பு நிறுவனஅதிகாரிகள்குறித்தவாகனங்களுக்கு பாதுகாப்பு அளித்துள்ளனர்.

மிரிஹான பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனையில் குறித்த வாகனங்கள் மீட்கப்பட்டுள்ளன. இந்த வாகனங்கள் ஜனாதிபதி செயலகத்தற்குச் சொந்தமானதென பாதுகாப்பு அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.


ஜனாதிபதி செயலகத்திற்குச் சொந்தமான 200 வாகனங்கள் காணாமற் போயுள்ளதாக தெரிய வருகிறது. இந்த வாகனங்கள் குறித்து விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140-200 | 150 | 200 | 120 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 500 | 600 | 600 | 500 |
| தக்காளி | 200 | 200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 | 60 |
| கோவா | 160 | 140 | 150 | 160 |
| கரட் | 170 | 200 | 200 | 240 |
| பூசணி | 60 | 50 | 80 | 60 |
| புடோல் | 100 | 200 | 100 | 100 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 40-100 | 120 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 60-90 | 100 | 120 | 80 |
| பாகற்காய் | 120-170 | 250 | 100 | 240 |
| வெண்டிக்காய் | 80-140 | 150 | 180 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 170-200 | 150 | 180 | 160 |
| லீக்ஸ் | 260 | 250 | 300 | 400 |
| பீற்றூட் | — | 200 | 200 | 200 |
| கறிமிளகாய் | — | 350 | 300 | 280 |
| முருங்கைக்காய் | — | 600 | 600 | — |
| போஞ்சி | 240 | 200 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | — | 140 | 170 | 100 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 40 | 60 | 50 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 40 | 35-45 |
| இராசவள்ளி | 100 | 130 | 120 | 100 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 262


நிஸ் கிரி




ராஜ் ராஜ்குமார்




சக்தி வேல்




விஜிதரன் சிவா




பூஜன் ராஜா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருண்- ஜெயா சந்திப்பு

# திணறி நிற்கும் தமிழக பா.ஜ.க



இந்தியாவின் நிதியமைச்சர் அருண்ஜெட்லி, தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவை அவரது போயஸ் கார்டன் இல்லத்துக்கே சென்று சந்தித்துள்ளார். சென்னையில் நடைபெற்ற கணக்காய்வாளர் குருமூர்த்தியின் இல்லத்திருமண விழாவில் பங்கேற்க வந்த நிதியமைச்சர், ஜெயலலிதாவை சந்தித்துப் பேசியுள்ளார்.

எந்த நேரத்திலும் இல்லாத அளவிற்கு அ.தி.மு.க. தலைமைக் கழகத்தின் சார்பிலேயே இதற்கு பத்திரிக்கை குறிப்பு வெளியிடப்பட்டுள்ளது. "மரியாதை நிமித்தமாக மத்திய நிதியமைச்சர் சந்தித்தார்" என்று அச்செய்தி குறிப்பில் விளக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்பு இப்படி இரு மத்திய அமைச்சர்கள் முதல்வராக இருந்த ஜெயலலிதாவை வந்து சந்தித்துவிட்டுச் சென்றார்கள்.

ஒருவர் மத்திய சட்ட அமைச்சராக இருந்த ரவிசங்கர் பிரசாத் அவருடைய சந்திப்பு பற்றி இப்படி பத்திரிக்கை குறிப்பு ஏதும் வெளியிடப்படவில்லை. அதன் பிறகு நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் வெங்கையா நாயுடு வந்து சந்தித்தார்.

அப்போது அரசின் சார்பிலேயே விளக்கமான பத்திரிக்கை செய்தி ஒன்று வெளியிடப்பட்டது. இப்போது ஜெயலலிதா முன்னாள் முதல்வர் என்பதால் அரசின் சார்பில் பத்திரிக்கை செய்தி வெளிவரவில்லை. அதற்குப் பதில் அ.தி.மு.க.வின் சார்பில் வெளி வந்திருக்கிறது.

அருண்ஜெட்லி- ஜெயலலிதா சந்திப்பு அரசியல் வட்டாரத்தில் குறிப்பாக தமிழக அரசியலில் பெரிய திருப்பு முனையையும், பரபரப்பையும் உருவாக்கியிருக்கிறது. மத்தியில் பல அவசரச் சட்டங்களை பிறப்பித்துள்ள பா.ஜ.க. அரசு இப்போது அவற்றை நிறைவேற்ற வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது.

ஆனால் அதற்குரிய பலம் ராஜ்ய சபையில் பா.ஜ.க.விற்கு இல்லை. மற்ற கூட்டணிக் கட்சிகளை நம்பித்தான் இருக்க வேணடியுள்ளது.

குறிப்பாக அ.தி.மு.க. போன்ற கட்சிகளின் ஆதரவை எதிர்பார்க்க வேண்டிய அவசியம் அக்கட்சிக்கு ஏற்பட்டிருக்கிறது. அதனால் தானோ என்னவோ அருண் ஜெட்லி சந்திப்பிற்கு பிறகு அவர் பத்திரிக்கையாளர்களை சந்திக்க மறுத்துவிட்டார்.

ஆனால் நிருபர்களிடம் பேசிய இன்னொரு மத்திய அமைச்சர் ரவிசங்கர் பிரசாத், "மக்கள் நல சட்டங்களை நிறைவேற்றவிடாமல் காங்கிரஸ் தடுக்கிறது. அதனால் அ.தி.மு.க. உள்ளிட்ட எந்த நட்புக் கட்சிகளின் ஆதரவையும் நாங்கள் பெறத் தயாராக இருக்கிறோம்" என்று அறிவித்துள்ளார்.

அருண்ஜெட்லி சந்திப்பு, ரவிசங்கர் பிரசாத் ஆகியோரின் அறிவிப்பு எல்லாம் தமிழக பா.ஜ.க.வை தடுமாற்றத்தில் விட்டிருக்கிறது. அக்கட்சியின் மாநிலத் தலைவர் தமிழிசை சௌந்திரராஜன் பொறுப்பேற்றதிலிருந்து மாநிலத்தில் ஆளும் அ.தி.மு.க. அரசை எதிர்த்து கடுமையாக பிரசாரம் மேற்கொண்டிருக்கிறார்.

சட்டம் ஒழுங்கு சரியில்லை என்று குற்றம் சாட்டுகிறார். பால் விலை உயர்வைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்கூட நடத்திவிட்டார். அவருடைய குரலை எதிரொலிக்கும் பா.ஜ.க. மாநில நிர்வாகிகள் ஆங்காங்கே அ.தி.மு.க. எதிர்ப்பு பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். "திராவிடக் கட்சிகளுக்கு மாற்று நாங்கள்" என்ற முழக்கத்தை முன்வைத்து அரசியல் செய்து கொண்டிருக்கிறது பா.ஜ.க. அது மட்டுமின்றி தமிழ் என்பதை முன் வைத்து திருவள்ளுவரை போற்றிப் பாராட்டும் வேலையை அக்கட்சியின் எம்.பி.யான தருண் விஜய் செய்து கொண்டிருக்கிறார்.

சமீபத்தில்கூட தமிழகம் முழுவதும் கன்னியாகுமரியில் தொடங்கி சென்னை வரை அவர் திருவள்ளுவர் யாத்திரை நடத்திவிட்டுச் சென்றிருக்கிறார்.

இந்தப் பிரசாரத்தின் வலிமையினால் விரைவில் நடைபெறவிருக்கின்ற ஸ்ரீரங்கம் இடைத் தேர்தலில் போட்டியிடுவது பற்றி முடிவு எடுப்போம் என்று பா.ஜ.க. தலைவர்கள் பேசுகிறார்கள். கலந்து ஆலோசனை செய்கிறார்கள்.

கடந்த மாதத்தில் சென்னை வந்த அமித்ஷா "மிஷன் 122" என்ற செயற்றிட்டத்தை தமிழக பா.ஜ.க.விற்கு அறிவித்து விட்டுச் சென்றுள்ளார்.

அந்த மிஷனை மனதில் வைத்து "மிஸ்ட் கால்" விட்டு உறுப்பினர்களை சேர்க்கும் மிகப்பெரிய பிரசாரத்தில் பா.ஜ.க. ஈடுபட்டிருக்கிறது. இது போன்ற சந்தர்ப்பத்தில் மத்திய அமைச்சர்கள் ஒவ்வொருவராக அ.தி.மு.க.விற்கு பாராட்டுப் பத்திரம் வாசிப்பதும் தமிழக பா.ஜ.க. தலைமையை திணற வைத்துள்ளது.

பா.ஜ.க. மாநிலத் தலைமைக்கு நெருங்கிய வட்டாரங்களில், "இந்த சந்திப்புகள் எங்களுக்கு முன் கூட்டிக்கூட சொல்லப்படவில்லை. மாநிலத்தில் பா.ஜ.க. ஆட்சி என்ற முழக்கத்தை முன்வைத்து சென்று கொண்டிருக்கின்ற வேளையில், அ.தி.மு.க.வின் தலைவரை சந்திப்பது தமிழக பா.ஜ.க.வினரை குழப்புகிறது. அதை நம்பி பா.ஜ.க. பின்னால் வர விரும்பும் வாக்காளர்களையும் குழப்புகிறது.

எல்லாவற்றையும் விட இளைஞர்கள் அனைவரும் பா.ஜ.க.வே எதிர்காலம் என்று நினைத்துக் கொண்டிருக்கின்ற வேளையில் இப்படி மத்தியில் உள்ள அமைச்சர்கள் அ.தி.மு.க. ஆதரவு மனப்பான்மையுடன் செயற்படுவது தமிழக பா.ஜ.க.வினர் அநாம மைய தொலைபேசி அலைப்பின் மூலம் உறுப்பினர் சேர்க்கும் பிரசாரத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது" என்று பேச்சு அடிபடுகிறது.

தமிழக பா.ஜ.க.விற்குள் இப்படியொரு குழப்பம் நீடிக்க, அ.தி.மு.க.விற்குள் இனம்புரியாத சந்தோஷம் நிலவுகிறது. முன்பு பெங்களூர் சொத்துக் குவிப்பு வழக்கில் கீழ் நீதிமன்றத்தில் தீர்ப்பு வெளிவரவிருந்த நேரத்தில் மத்திய சட்ட அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் அப்போது முதல்வராக இருந்த ஜெயலலிதாவை சந்தித்துப் பேசினார்.

அதற்கு அப்போது தி.மு.க. கடும் எதிர்ப்பு தெரிவித்தது. அதன் பிறகு நடைபெற்ற அமைச்சரவை விரிவாக்கத்தில் ரவிசங்கர் பிரசாத்திடம் இருந்த சட்ட இலாகா பறிக்கப்பட்டது. அது மட்டுமின்றி அவருக்குப் போட்டியாக பீஹார் மாநில அரசியலில் இருக்கும் ரூடி மத்திய அமைச்சரவையில் சேர்க்கப்பட்டார்.

இந்த சூழ்நிலையில் இப்போது முன்னாள் முதல்வரின் மேன்முறையீட்டு வழக்கு கர்நாடக உயர்நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. இந்த நேரத்தில் அருண் ஜேட்லி வந்து பார்த்திருக்கிறார் என்று தமிழகத்தில் அடுத்த கட்ட சர்ச்சை துவங்கவிருக்கிறது.

ஏற்கனவே தி.மு.க.வின் அதிகார பூர்வ நாளிதழான முரசொலி பத்திரிக்கையில் "அருண ஜேட்லி- ஜெயலலிதா" சந்திப்பு குறித்து செய்தி வெளியிட்டு, இது பல சந்தேகங்களை கிளப்புவதாக இருக்கிறது என்று சுட்டிக் காட்டியிருக்கிறது.

இந்த விவகாரம் மூலம் பா.ஜ.க.விற்கு தமிழகத்தில் உருவாகும் நற்பெயரை உடைகக பெரும் பிரசாரமே துவங்கும் என்பதில் சந்தேகமில்லை.

அதே நேரத்தில் ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கில் தண்டனை பெற்ற பிறகு பா.ஜ.க. மேலிடத் தலைவர்கள் யாரும் வந்து அவரை சந்திக்கவில்லை. அக்கட்சிக்கும், அ.தி.மு.க.விற்கும் ஏதோ பெரும் முரண்பாடு இருக்கிறது என்ற பிரசாரம மேலோங்கி நின்றது.

அதைத் தொடர்ந்து அ.தி.மு.க.விற்கு போட்டியாக ஸ்ரீரங்கம் இடைத் தேர்தலில் பா.ஜ.க. தங்கள் வேட்பாளரை நிறுத்தும் என்று கூட செய்திகள் அடிபட்டன.

இதற்கு எல்லாம் மேலாக மாநில அரசு நிர்வாகம் முடங்கிவிட்டது என்ற இமேஜும், மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் முட்டல் மோதல்தான் நிலவுகிறது என்ற கருத்தும் பரவிக் கொண்டிருந்தது. இது இப்போது அருண்ஜேட்லியின் சந்திப்பால் முறியடிக்கப்பட்டுள்ளது.

அ.தி.மு.க.வும்- பா.ஜ.க.வும் எப்போதும் நட்புக் கட்சிகள்தான் என்ற பெயர் கிடைத்திருக்கிறது. இது "செயற்படாத அரசு" என்று குற்றம் சாட்டும் எதிர்கட்சிகளின் பிரசாரத்தை மறுக்க பேருதவியாக இருக்கும்.


அது மட்டுமின்றி, வருகின்ற ஸ்ரீரங்கம் இடைத் தேர்தலில் பா.ஜ.க. போட்டியிடாமல் போவதற்கும் வாய்ப்பு உருவாகும்.

அப்படியே போட்டியிட்டாலும், "அ.தி.மு.க.வும், பா.ஜ.க.வும் நெருங்கிய கூட்டாளிகள்" என்ற நினைப்பில் ஸ்ரீரங்கம் தொகுதியில் உள்ள பா.ஜ.க. வாக்காளர்கள் அ.தி.மு.க. வேட்பாளருக்கே வாக்களிக்கும் சூழ்நிலை உருவாகும் என்றே தெரிகிறது. அரசியல் ரீதியாகவும் சரி, சட்ட ரீதியாகவும் சரி, இடைத் தேர்தல் ரீதியாகவும் சரி "அருண்ஜேட்லி- ஜெயலலிதா சந்திப்பு" அ.தி.மு.க.விற்கு ஒரு முக்கியத்துவத்தைப் பெற்றுத் தந்திருக்கிறது என்பது மட்டும்மறுக்க முடியாத உண்மை.

**-எம்.காசிநாதன்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்சிக்கு சதித்திட்டம் தீட்டியது எதிரணியினரே;அரசாங்கமல்ல



## முன்னாள் அமைச்சர் விமல் கூறுகிறார்

(கொழும்பு)

நாட்டில் புரட்சியொன்றினை தோற்றுவிக்க திட்டம் தீட்டியது அப்போதைய பொது எதிரணி தவிர அரசாங்கமல்ல. பொது எதிரணியின் புரட்சிகர சதித் திட்டத்தினை முறியடிப்பு செய்வது தொடர்பிலேயே அலரிமாளிகையில் பேச்சுவார்த்தை நடத்தியதாக விளக்கம் கூறிய தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ச நாம் வீசிய வலையிலேயே இப்போது குற்றவாளி மீன்கள் அகப்படுவதாகவும் தெரிவித்தார்.

இராணுவத்தைக் கொண்டு ஆட்சியினை தக்க வைத்துக்கொள்ள முன்னைய அரசாங்கம் சதித் திட்டம் தீட்டியதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையில் நேற்று முன்தினம் தேசிய சுதந்திர முன்னணியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின் போது விமல் வீரவன்ச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் இராணுவப் புரட்சியினை ஏற்படுத்தி நாட்டை சீரழிக்க வேண்டிய அவசியம் எமக்கு ஏற்பட்டிருக்கவில்லை. பொது எதிரணியை சர்வதேச பின்னணியில் உருவாக்கிய மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட குழுவினரே நாட்டில் குழப்பகரமான சூழலினை உருவாக்க திட்டம் தீட்டினர். தேர்தலின் பின்னர் நாட்டில் குழப்பம் ஒன்று உருவாகப் போவதாக இரகசிய தகவல்கள் ஆரம்பத்திலேயே எமக்கு கிடைத்திருந்தது. எனவே அவ்வாறானதொரு குழப்பகரமான சூழல் நாட்டில் ஏற்பட்டுவிடக்கூடாதென்ற வகையிலேயே ஜனவரி 9 ஆம் திகதி அதிகாலையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போதைய பொது எதிரணியே நாட்டில் குழப்பத்தினை ஏற்படுத்த திட்டம் தீட்டியதே தவிர எமது அரசாங்கத்தில் அவ்வாறான எந்த சதித்திட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை. நாம் நாட்டை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே செயற்பட்டோம் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-5)

# முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் நன்மதிப்பிற்கு களங்கம் ஏற்படுத்துவதற்கு இடமளிக்க முடியாது

## முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் களங்கம் ஏற்படுத்த இடமளிக்க முடியாதென மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக குரோத அடிப்படையில் பொய்ப் பிரசாரம் செய்யப்படுகின்றது. கட்சியின் நன்மதிப்பை சீர்குலைக்கும் நோக்கில் போலிப் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தற்போது தேசிய அரசாங்கமொன்று அமைக்கப்படவில்லை.

உண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கமே ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்றது. 100 நாட்கள் திட்டத்தின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியை கைப்பற்ற நடவடிக்கை எடுக்கும். இதன் காரணமாகவே ஐக்கிய தேசியக் கட்சி சுதந்திரக் கட்சியின் மீது அபாண்டமான பழிகளை சுமத்தி வருகின்றது.ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கமொன்றுக்கு ஆதரவளிக்கத் தயாரில்லை. எனது பதவியை பாதுகாத்துக்கொள்ள வாயை மூடிக் கொண்டு இருக்கப் போவதில்லை. மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் குரோத உணர்வின் அடிப்படையில் செய்யப்படுகின்றது. இந்த செயற்பாட்டுக்கு இடமளிக்க வேண்டாம் என கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் வேண்டுகின்றேன். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நானும் போட்டியிட உத்தேசித்துள்ளேன் என பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.(இ-5)

# பொதுத்தேர்தலின் பின்னரும் பிரதமராக ரணிலே நீடிப்பார்!

## சஜித் நம்பிக்கை



எதிர்வரும் பொதுத்தேர்தலின் பின்னரும் பிரதமராக ரணில் விக்ரமசிங்கவே செயற்படுவார் என்று அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சைப் பொறுப்பெடுக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் சஜித் 100 நாட்கள் வேலைத்திட்டம் என்பது இந்த அரசாங்கத்தின் அபிவிருத்திக்கான செயற்றிட்டங்களின் அத்திவாரம் மட்டுமே. இதற்கான பலாபலன்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னரே பொது மக்களால் உணரக்கூடியதாக இருக் கும்.

அதேபோன்று எதிர்வரும் பொதுத தேர்தலின் பின்னர் எந்தக் கட்சி வெற்றி பெற்றாலும் ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவியில் எதுவித மாற்றங்களும் இருக்காது. ரணில் விக்கிரமசிங்கவே தொடர்ந்தும் பிரதமர் பதவியில் நிலைத்திருப்பார் என்றும் அமைச்சர் சஜித் தெரிவித் துள்ளார். (இ-5)

# நாட்டைவிட்டு ஓட மாட்டேன்

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் தனக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், நிராகரித்துள்ளார்.

மேலும் தனது கடவுச்சீட்டு முடக்கப்பட்டுள்ளதையும் அவர் உறுதி செய்துள்ளார். தான் இலங்கையில் இருப்பதை உறுதி செய்யவே கடவுச்சீட்டு முடக்கப்பட்டதாக அவர் அறிக்கை ஒன்றை விடுத்து குறிப்பிட்டுள்ளார். 8 1/2 ஆண்டுகள் நேர்மை, விடாமுயற்சி அடிப்படையில் மத்திய வங்கியின் ஆளுந ராக கடமை யாற்றியதாக கப்ரால் கூறியுள்ளார். ஊடகங்கள் மூலம் வெளியிடப்படும் செய்திகள் தன் மீதான குற்றச் சாட்டுக்கள் இழிவுபடுத்தல்களுக்கு நல்ல பதில் கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் தான் பதவி விலகிய பின்னர் உத்தியோகபூர்வ இல்லத்தை கையளித்து கொழும்பில் தனியார் இல்லத்திற்கு சென்றுள்ளதாகவும் நாட்டைவிட்டு செல்லும் நோக்கம் இல்லை என்றும் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## பிறருக்காக

கனாதர் என்று ஒரு முனிவர் இருந்தார். அவரிடம் உபதேசம் பெறுவதற்காக பலர் வருவதுண்டு.

ஒரு நாள் அவரைத்தேடி நான்கு பேர் வந்தார்கள். முனிவர் அவர்களைப் பார்த்து "நாளைக்குக் காலையில் சூரியன் உதயமாகும் சமயத்தில் இங்கே வாருங்கள்" என்று சொல்லி அனுப்பிவிட்டார்.

மறுபடியும் அடுத்தநாள் காலையில் அவர்கள் வந்தார்கள். அந்த சமயத்தில் முனிவர் யாகம் செய்து கொண்டிருந்தார். வந்த நான்குபேரும் அவருக்கு உதவி செய்ய ஆரம்பித்தார்கள்.

யாகம் முடிவதற்கு அதிக நேரம் ஆகிவிட்டபடியினால் வீட்டுக்குப் போய் சாப்பிட்டு வரலாம் என்று நினைத்து புறப்பட்டார்கள்.

இதைக்கண்ட முனிவர் அவர்களைத் தடுத்து, "நீங்கள் உடனே ஆச்சிரமத்துக்குப் போங்கள். அங்கேயே உங்கள் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்திருக்கிறோம்" என்றார்.

இதைக் கேட்டவுடன் அவர்கள் ஆச்சிரமத்துக்குப் போனார்கள்.அங்கே ஒரு பெரிய பாத்திரத்தில் தண்ணீர் இருந்தது. அதில் கை, கால் கழுவிவிட்டு உள்ளே நுழையப் போனார்கள்.

அந்த சமயம் பார்த்து, நான்கு முரடர்கள் அவர்கள் முன்வந்து "இங்கு சாப்பிடுபவர்களுக்கு ஒரு நியமம் உண்டு. இதோ இந்த மூங்கில் கம்புகளை உங்கள் கைகளில் கட்டி விடுவோம்.

அதற்கு நீங்கள் சம்மதிக்கவில்லையானால் உங்களை கொன்று விடுவோம்" என்று பயமுறுத்தி அவர்களின் கையை நீட்டச் சொல்லி முழங்கையை மடக்க முடியாதவாறு மூங்கில் கம்புகளை வைத்து கட்டினார்கள்.

இவர்களுக்கு நீட்டிய கையை மடக்க முடியவில்லை. அப்படியே உள்ளே போய் நான்கு இலைகளுக்கும் எதிரும் புதிருமாக உட்கார்ந்திருந்தனர். இருந்தாலும் சப்பிட முடியவில்லை.

இந்த சமயத்தில் முனிவர் உள்ளே வந்தார். "ஏன் சாப்பிடாமல் உட்கார்ந்திருக்கிறீர்கள்? கூச்சப்படாமல் சாப்பிடுங்கள்" என்றார். இவர்களுக்கோ எரிச்சல் எரிச்சலாக வந்தது.

முனிவர் சிரித்துக்கொண்டே அவர்களைப் பார்த்து, "உங்கள் கையிலுள்ள ஆகாரம் உங்கள் வாய்க்குத் தான் போக வேண்டும் என்று அவசியமில்லை. எதிரில் உட்கார்ந்திருப்பவர் வாய்க்கும் போகலாமே! அதே மாதிரி எதிரில் உட்கார்ந்திருப்பவர் கையில் இருக்கும் ஆகாரம் உங்கள் வாய்க்கும் போகலாமே!" என்றார்.

அப்பொழுதுதான் இவர்களுக்குப் புத்திவந்தது. முழங்கையை மடக்க முடியாமல் கட்டியிருந்தாலும் அடுத்தவன் உண்பதற்கு அது உபயோகப்படுமே! என்பது புரிந்தது.

பிறகு முனிவர், "உங்களுக்குப் பாடம் கற்பிக்கவே இப்படிச் செய்தேன். நாம் சம்பாதிக்கும் பணம் நமக்குத் தான் பயன்படவேண்டும் என்பதில்லை. மாறாக அது மற்றவர்களுக்கும் உபயோகப்படலாம். ஒருவருக்கொருவர் உதவியாக இருப்பதுதான் வாழ்க்கை.

அதை புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் இப்படி முழங்கையைக்கட்டி உங்களை சாப்பாட்டுக்கு முன் உட்காரவைத்தேன்" என்றார் முனிவர்.

இதை ஒரு நல்ல உத்தியோகத்தில் இருக்கும் நம்ம ஆள் ஒருவரிடம் சொன்னேன்.

அதற்கு அவர், "சார்... எனக்கெல்லாம் கையில் மூங்கில் கம்பு வைத்து கட்ட வேண்டிய அவசியமே ஏற்படுவதில்லை.

ஏனென்றால் நான் சாதாரணமாக முழங்கையை மடக்க வேண்டிய சந்தர்ப்பமே வருவதில்லை!" என்றார்.

"அது எப்படி?" என்று கேட்டேன். "நான் எப்பொழுதும் அடுத்தவர்கள் பையில் இருக்கிற பணத்தைத் தான் எடுக்கிறது வழக்கம்" என்றார்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மாத இராசி பலன்கள்


## 15.01.2015 - 12.02.2015

# சுப விரயங்கள் அதிகரிக்கும் நேரம்!



**சுப விரயங்கள் அதிகரிக்கும் நேரம்! விழிப்புணர்ச்சியுடன் இருந்தால் வெற்றி கிடைக்கும் என்று சொல்லும் மேட ராசி அன்பர்களே!**

தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது பொருளாதார நிலையில் உயர்வு ஏற்பட்டாலும், அடுத்த நிமிடமே அதற்குரிய செலவும் தயாராகக் காத்திருக்கும். காரணம் அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் தான். எப்பொழுதும் பலம் வாய்ந்த சனி 8இல் இருக்கும் பொழுது, பணவரவு திருப்திகரமாக இருந்தாலும் செலவுகள் கூடுதலாகத்தான் இருக்கும். ஒருகடனை அடைக்க மற்றொரு கடனை வாங்கும் சூழ்நிலை உருவாகும். சங்கிலித் தொடர்போலகடன்சுமை வந்தாலும் சங்கடமில்லாமல் சமாளிக்க வேண்டுமானால், சனிபகவானைத்தான் முழுமையாக வழிபாடு செய்ய வேண்டும். அந்த அடிப்படையில் அருகிலிருக்கும் சிவாலயத்திற்குச் சென்று சனிபகவானை வழிபடுவதும் நல்லது. வாய்ப்பிருக்கும் பொழுது சனிக் குரிய சிறப்பு தலங்களுக்குச் சென்று வழிபடுவதும் நலம் சேர்க்கும். "மந்தன் செய்வதை மகேஸ்வரன் கூட செய்ய மாட்டான" என்பார்கள். "மந்தன்" என்றால் மந்த கதியில் இய ங்கும் சனிபகவான் என்று பொருள. மகேஸ்வரன் என்றால் ஈஸ்வரன் என்று பொருள். அளவில்லாத பொருட்களை வழங்கும் சனிபகவானை அனுதினமும் நினைத்து வழிபட்டாலே, உங்களுக்கு வரும் இடர்பாடுகள் அகலும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். குறிப்பாக இம்மாதத்தில் செவ்வாய், சனி பரிவர்த்தனை யோகம் பெற்றிருக்கிறார்கள். இராசிநாதன் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே பணப் புழக்கம் அதிகமாக இருக்குமென்றே சொல்லலாம். ஆனால் அவற்றை வீண் விரயம் ஆகாமல், சுபவிரயமாக மாற்றிக் கொள்வது உங்கள் புத்தி சாலித்தனம். வீட்டிற்குத் தேவை யான விலையுயர்ந்த பொருட்களை வாங்குவதன் மூலமும், பழைய மின்சாதனப் பொருட்களைக் கொடுத்து விட்டுப் புதிய மின்சாதனப் பொருட்களை வாங்குவதன் மூலமும், குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி வங்கிகளில் வைப்புத் தொகை வைப்பதன் மூலமும், விரயங்களை மகிழ்ச்சியளிக்கக் கூடிய விரயமாக மாற்றிக் கொள்ள இயலும்.




**வருமானம் இருமடங்காகும் நேரம்!**

வருமானம் இருமடங்காக உயரும் விதத்தில் சுக்ரன் ஜனவரி 23-ந் திகதி கும்ப ராசிக்குச் செல்லவிருக்கிறார். தனாதிபதியும், ராசிநாதனும் ஒன்றாக இணையும் இந்த நேரம் ஒரு பொன்னான நேரமாகும். புதிய தொழில் தொடங்கும் திட்டங்கள் நிறைவேறும். அதிகாரிகளின் ஒத்துழைப்போடு உத்தியோகஸ்தர்களுக்கு உத்தியோக உயர்வும், ஊதிய உயர்வும் கிடைக்கலாம். குடும்பத்தில் தாமதப்பட்ட காரியங்கள் தடையின்றி நடைபெறும்.

**பொன்னான புதனின் மாற்றம்!**

ஜனவரி 28ஆந் திகதி தனுசு ராசியில் புதன் வக்ரம் பெறுகிறார். இதன் விளைவாக வழக்குகளில் வெற்றி கிடைக்கும். வருங்கால நலன கருதி எடுத்த முயற்சிகளுக்கு மாற்றி னத்தவர்கள் ஒத்துழைப்புச் செய்வார் கள். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்பு மாறும். பிப்ரவரி 8இல் மகர புதன் சஞ்சரித்தால், உடன்பிறப்புகள் உங்களுக்கு உத விக்கரம் நீட்டுவார்கள். நீண்ட பாக்கிகள் வசூலாகும். நிலையான உத்தியோகமும் சிலருக்கு வாய்க்கும்.

**மீன செவ்வாயின் சஞ்சாரம்!**

பிப்ரவரி 10ஆந் திகதி ராசி நாதன் செவ்வாய் விரயஸ்தான மான மீனத்தில் சஞ்சரிக்கப் போகிறார். இக்காலத்தில் விழிப்புணர்ச்சி தேவை. இடமாற்றம், ஊர்மாற்றம், வீடு மாற்றம், உத்தியோக மாற்றம் போன்றவைகள் ஒரு சிலருக்கு எதிர்பார்த்தபடி அமையும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். குலதெய்வ வழிபாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள். சகோதர வர்க்கத்தினரால் பாதியில் நின்ற பணி மீதியும் தொடரும். இம்மாதம் சூரியன் வழிபாடு சுகங்களையும், சந்தோஷங்களையும் வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்:**

குடும்பச்சுமை கூடுதலாகும் மாதம் இது. கடுமையாக முயற்சித்தும் நடைபெறாத ஒருசில காரியங்கள், இம்மாதத்தில் துரிதமாக நடைபெறும். பணத்தேவைகள் உடனுக்கடன் பூர்த்தியாகும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் இருப்பதால், அருகில் இருப்பவர்களுடன் பகை உருவாகலாம். எனவே கோபத்தைக் குறைத்துக் கொண்டு செயல்படுவது நல்லது. வாகன மாற்றம் செய்ய உகந்த நேரமிது. தேக நலனில் ஏதேனும் பாதிப்புகள் வந்தால், உடனுக்குடன் மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவதன் மூலம் உற்சாகத்தை தக்க வைத்துக் கொள்ளலாம். எள் தீபம் ஏற்றி சனியை வழிபட்டால் நல்லது நடக்கும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

# ஆரோக்கியத்தில் அக்கறை காட்டவேண்டிய நேரம்!



**ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நேரம்! வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளும் புத்திசாலியான இடப ராசி அன்பர்களே!**

தைமாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ராசிநாதன் சுக்ரன் தனாதிபதியோடும், சுகாதிபதியோடும் கூடியிருப்பது யோகம்தான். பொருளாதாரத்தைப் பொறுத்தவரை நல்ல முன்னேற்றமாகவே இருக்கிறது. பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரபபும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். வாட்டத்தைப் போக்க வள்ளல்களும் ஒத்துழைப்பு செய்வார்கள். வங்கிகளும் ஒத்துழைப்புச் செய்யும்.

ஆனால் சனியின் பரிபூரண பார்வை, உங்கள் ராசியின் மீதல்லவா பதிகிறது. இதனால் ஒரு சில காரியங்களில் தடைகளும், தாமதங்களும் ஏற்படத்தான் செய்யும். உடல் ஆரோக்கியத்திற்கு ஒரு தொகையைச் செலவிடும் சூழ்நிலை ஏற்படலாம். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும் மாதம் இது என்று கூடச் சொல்லலாம். உங்கள் ராசிநாதன் சுக்ரனுக்கு சனி நட்பு கிரகம் என்பதால் பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்படாது. பிரச்சினைகளை எதிர் கொளளக் கூடிய நிர்ப்பந்தம் ஏற்பட்டாலும் கடைசியில் அனுகூலம் ஏற்படும். அதற்குப் பரிகாரமாக பிரதோஷ காலத்தில் நந்தியெம்பெருமான் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். வார வழிபாடாக சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டையும் செய்து வரலாம். மாருதி வழிபாடு உங்கள் மனக்கவலையைப் போக்கும். குரு வக்ரம் பெற்றிருப்பது ஒரு வகைக்கு யோகம்தான். சுக்ரன் உங்கள் ராசிநாதனுக்குப் பகை கிரகமாக விளங்கும் கிரகம். வக்ர இயக்கத்தில் ராசிநாதன் இருக்கும் பொழுது, எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறும். எதிரிகளின் தொல்லை குறையும். புதிய திருப்பங்கள் பலவற்றையும் காணப்போகிறீர்கள்.

**கும்ப சுக்ரனின் சஞ்சாரம்!**

ஜனவரி 23ஆந் திகதி கும்ப ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகின்றார். ராசிநாதன் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் தொழில் வளம் மேலோங்கும். தொல்லை தந்தவர்கள் எல்லையை விட்டு விலகுவார்கள். புதிய ஒப்பந்தங்கள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும். வீடு வாங்கும் யோகம் கூட ஒரு சிலருக்கு உருவாகும்.




**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

ஜனவரி 28ஆந் திகதி புதன் வக்ரம் பெறுகிறார். இது அவ்வளவு நல்லதல்ல. தனாதிபதி வக்ரம் பெறும்பொழுது கூடுதல் கவனத்துடன் செயல்படுவது நல்லது. விரயங்கள் அதிகரிக்கும். வீட்டுத் தேவைகளும் கூடுதலாக இருக்கும். பிள்ளைகள் வழியில் சில தொல்லைகளைச் சந்திக்க நேரிடலாம். பூர்வீக சொத்துக்கள் விற்பனையில் எதிர பார்த்த அளவு லாபம் கிடைக்குமா? என்பது சந்தேகம் தான். பிப்ரவரி 8ஆந் திகதி மகரத்தில் புதன் சஞ்சரித்த பிறகு இழப்புகளை ஈடுசெய்யும் வாய்ப்பு கிடைக்கும். தந்தை வழி உறவில் ஏற்பட்ட விரிசல் அகலும். பங்காளி பகை மாறும்.

**மீன செவ்வாயின் சஞ்சாரம்!**

பிப்ரவரி 10ஆந் திகதி விரயாதிபதி செவ்வாய் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். சப்தமாதிபதியாகவும் செவ்வாய் விளங்குவதால் வாழ்க்கைத்துணை வழியே இருந்த பிரச்சினைகள் அகலும். வரவு எதிர்பார்த்த இடத்திலிருந்து வந்து சேரும். அந்நிய தேச யோகம் ஒரு சிலருக்கு எண்ணியபடியே கிடைக்கும். வேலை வாய்ப்புக்காக முயற்சி செய்தவர்களுக்கு அது கிடைத்து உதிரி வருமானங்களும் வந்து சேரும். கட்டிடம் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். இம்மாதம் பிரதோஷ நாளில் நந்தியெம்பெருமான் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்:**

இம்மாதம் குடும்பத் தேவைகள் அதிகரிக்கும். நகைகள் வாங்குவதில் நாட்டம் உண்டாகும். மாதத் தொடக்கத்தில் கும்ப சுக்ரனின் சஞ்சாரத்தால் உத்தியோக முயறசியில் ஈடுபட்டிருப்பவர் களுக்கு வெற்றி கிடைக்கும். நரம்பு, எலும்பு சம்பந்தமான தொல்லைகள் ஏற்பட்டாலும் சாதாரண மருத்துவத்தால் குணமாகும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட, விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். பிள்ளைகளால் உதிரி வருமானங்கள் வந்தாலும் பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடலாம். மாதக் கடைசியில் மங்கல நிகழ்ச்சிகள் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். அனுமன் வழிபாடு அல்லல் தீர்க்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் சொத்து தொடர்பான விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு



## சீசெல்ஸ் அரசு அறிவிப்பு

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சொத்து விபரங்கள் தொடர்பில் நடத்தப்படும் விசாரணைக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என சீசெல்ஸ் அரசாங்கம் அறிவித்துள்ளது.**

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் சீசெல்ஸ் நாட்டில் கொண்டிருக்கும் சொத்துக்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

திட்டமிடல் மற்றும் பொருளாதாரத்துறை பிரதியமைச்சர் ஹர்சடி சில்வா இதனை அறிவித்தார்.

இவ்விடயத்தில் விசாரணைகளை மேற்கொள்ள பல்வேறு வழிகள் உள்ளதாகவும் இதற்காக தனிப்பட்ட கணக்காய்வாளர்களின் உதவியை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விசாரணைக்காக உலக வங்கியின் திருடப்பட்ட சொத்துக்கள் மீட்புத் திட்டத்தின் உதவியை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் சீசெல்ஸ் நாடு, திருடப்பட்ட சொத்துக்களின் பாதுகாப்பான சுவர்க்கமாக கருதப்படுகிறது என்றும் ஹர்ச கூறினார்.

சீசெல்ஸின் முகவரிகளைக் கொண்டு சுவிஸ் நாட்டின் வங்கிகளில் பணம் வைப்பிலிடப்பட்டமை தொடர்பில் எதிர்க்கட்சியில் இருக்கும்போதே தாம் குற்றச்சாட்டை முன்வைத்திருந்ததாக ஹர்ச சுட்டிக்காட்டியுள்ளார்.

90 ஆயிரம் பேரை மாத்திரமே கொண்ட சீசெல்ஸில் இருந்து கடந்த வருடத்தில் மாத்திரம் சுவிஸ் வங்கிகள் மேற்கொள்ளப்பட்ட வைப்புக்கள் அதிகரித்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி இலங்கையில் சொத்துக்களை திருடி சீசெல்ஸ் நாட்டில் பதுக்கி வைத்திருப்பது தொடர்பில் ஊடகங்களில் செய்தி வந்துள்ளதாகவும் இதுகுறித்து விசாரணை நடத்த தீர்மானித்துள்ளதாக புதிய ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில் அதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கத் தயார் என சீசெல்ஸ் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் ஹர்சடி சில்வாவின் குற்றச்சாட்டை சீசெல்ஸ் அரசாங்கம் நிராகரித்துள்ளது. இது அடிப்படையற்ற குற்றச்சாட்டு என சீசெல்ஸ் வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது. இந்து சமுத்திரத்தில் உள்ள நாடுகளுடன் நெருங்கிய உறவை வைத்துக்கொள்ளவே சீசெல்ஸ் விரும்புவதாக அமைச்சு மேலும் அறிவித்துள்ளது. (இ-5)

## குடும்பப் பெண்ணுக்கு ஒருவருட சிறைத்தண்டனை

கசிப்பு உற்பத்தி செய்த குடும்பப் பெண் ஒருவருக்கு ஒருட கால சிறைத்தண்டனையும், 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து சாவகச்சேரி நீதவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் தீர்ப்பளித்தார்.

சாவகச்சேரி, பெருங்குளம் பகுதியிலுள்ள பாழடைந்த வீடொன்றில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட பெண்ணொருவரை கடந்த 8ஆம் திகதி கைது செய்த சாவகச்சேரி பொலிஸார், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய வேளையில், அவரை கடந்த வியாழக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டிருந்தார். மேற்படி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, பெண் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதை யடுத்து அவருக்கு ஒரு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (இ)

## விருது வழங்கல்

எக்கமுத்து ஒரே மக்கள் ஒருமைப்பாட்டு நம்பிக்கையாளர் சபை நிதியத்தின் ஏற்பாட்டில் விருது வழங்கும் நிகழ்வு இன்று மாலை 6 மணிக்கு சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணத்தின் அனுசரணையுடன் மணவளம் கலாசாரம், திறமைகளின் இணைப்பான ரே ஹோப்- 3 மற்றும் தேசிய ஐக்கியம் அமைப்புடன் இணைந்து இந்த விருது வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது. (இ)

## யாழில் கஞ்சா வைத்திருந்த நபருக்கு 50 நாட்கள் சமூக சேவைக்கு உத்தரவு

கஞ்சா வைத்திருந்த ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த யாழ்ப்பாண நீதவான் பொ.சிவகுமார் குற்றவாளியை தொடர்ந்து 50 நாட்களுக்கு சமூக சேவை செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார்.

யாழ். பேருந்து நிலையப் பகுதியில் கடந்த 8 ஆம் திகதி யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டு அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது குற்றவாளி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து நீதிபதி உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இதேவேளை கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குப்பட்ட பகுதியில் 10 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை எதிர்வரும் 5 ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ)

## நீரில் மூழ்கி இரு சிறுவர்களும் கத்திக்குத்தில் இருவரும் பலி!

ஏறாவூர் - தாமரங்கேணி பகுதியில் களப்புக்கு அருகில் உள்ள சிறிய நீர்த்தேக்கத்தில் நீராடிக் கொண்டிருந்த சிறுவர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் 10 மற்றும் 11 வயதுடைய சிறுவர்களே உயிரிழந்துள்ளனர்.

சடலம் ஏறாவூர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் நேற்று மரண விசாரணை இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, பியகம - ரக்சபான - மல்வான பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். 26 வயது இளைஞரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

மேலும் புளத்சிங்கள - கலவெல்லாவ பகுதியில் 35 வயது பெண் கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்யப்பட்டுள்ளார். குடும்பப் பிரச்சினை காரணமாக இக்கொலை இடம்பெற்றுள்ளது.

இந்த இரு கொலைகளுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-5)

# கொலைகளுக்கு பாரபட்சமின்றி விசாரணைகள் நடத்த வேண்டும்

## அரசிடம் ஈ.பி.டி.பி.கோரிக்கை

கடந்த காலங்களில் நடைபெற்ற கொலைகள் தொடர்பாக பாரபட்சமின்றி விசாரிக்கப்பட வேண்டும் எனவும் அமைச்சர் ராஜித சேனாரத்ன, முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, பாராளுமன்ற உறுப்பினர்களான நடராசா ரவிராஜ், தியாகராஜா மகேஸ்வரன், ஜோசப் பரராஜசிங்கம், பத்திரிகையாளர் லசந்த விகரமதுங்க ஆகியோரின் கொலைகள் தொடர்பாக விசாரணைகள் நடைபெறுமென கூறியிருப்பதை நாம் வரவேற்கின்றோம் எனவும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை விசாரணைக்கு உட்படுத்தவேண்டிய இன்னும் பலரது படுகொலைகள் கடந்த காலங்களில் நடந்துள்ளன. இவற்றில் முன்னாள் அமைச்சரான லக்ஸ்மன் கதிர்காமர், பாராளுமன்ற உறுப்பினர்களான அம்பாறை சந்திரநேரு, திருமலை தங்கத்துரை, நீலன் திருச்செல்வம், தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம், ஈ.பி.ஆர்.எல்.எப் உறுப்பினரும், இலங்கை சமாதான செயலகத்தின் உத்தியோகத்தருமான லோகநாதன் கேதீஸ்வரன், பத்திரிகையாளர்களான அற்புதராஜா நடராஜா பா.உ, பாலநடராஜா ஐயர், தராகி சிவராம், நிமலராஜன், ஈ.பி.ஆர்.எல்.எப், நாபா அணியின் தலைவர் சுபத்திரன், மனித உரிமைகள் சட்டத்தரணி மகேஸ்வரி வேலாயுதம் ஆகியோரும் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

இவர்களின் கொலைகள் தொடர பாகவும் பாரபட்சமற்ற விரிவான விசாரணைகள் நடத்தப்படவேண்டும். இவர்களும் தாம் கொண்டிருந்த அரசியல் நிலைப்பாடுகள் காரணமாகவும், கருத்து முரண்பாடுகள் காரணமாகவும் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

இவர்களின் கொலைகளோடு சம்மந்தப்பட்டவர்கள், கொலையை தூண்டிவிட்டவர்கள் தொடர்பாக இவர்களை இழந்த உறவுகளுக்கு ஏமாற்றங்களும், சந்தேகங்களும் இருக்கவே செய்கின்றது.

எனவே அமைச்சர் ராஜித சேனாரத்ன முன்னெடுக்கும் கொலைகள் தொடர்பான விசாரணைகள் பரந்தளவில் பாரபட்ச மின்றி முன்னெடுக்கப்பட வேண்டு மென உறவுகளை இழந்தவர்கள் சார்பாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி கேட்டுக் கொள்கின்றது.

கடந்த காலங்களில் மாற்று அரசியல் கருத்துகளைக் கொண்டிருந்த பல உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், தவிசாளர்கள், அரச உத்தியோகத்தர்கள், புத்திஜீவிகள் என்போரும் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். இவர்களின் கொலைகள் தொடர்பாகவும் நியாயமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென அவர்களது உறவுகள் எதிர்பார்த்துள்ளார்கள் என்பதையும் தங்களது கவனத்துக்கு நாம் சுட்டிக்காட்ட வேண்டியவர்களாக இருக கின்றோம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## அமெரிக்க ஹவாய் சைவ ஆதீன முதல்வருக்கு நாளை வரவேற்பு

(கொழும்பு)

அமெரிக்க ஹவாய் சைவ ஆதீன முதல்வர் சத்குரு போதிநாத வேலன் சுவாமியை வரவேற்கும் வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதேவேளை கொழும்பு இரத்மலானை இந்துக் கல்லூரி மாணவர் விடுதிப் பிள்ளைகளின் சிறப்புப் பிறந்ததின வைபவமும் அங்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு சத்குரு போதிநாதவேலன் சுவாமிகளின் ஆசீர்வாதத்தைப் பெறுமாறும் பிறந்ததினத்தை கொண்டாடும் பிள்ளைகளை வாழ்த்துமாறும் அகில இலங்கை இந்துமாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது. (இ-5)

## பிரதேச சபைக் கூட்டத்தில் நேற்று வாய்த்தர்க்கம்

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் நேற்று வாய்த்தர்க்கம் இடம்பெற்றுள்ளது.

கூட்டத்தில் பிரதேச சபையின் ஆளும்கட்சி உறுப்பினர் குகதாஸ் உரையாற்றுகையில்,

கடந்த அரசாங்கத்தினால் தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. ஆட்சி மாற்றம் நடந்துள்ள இந்த நேரத்தில் சிறையிலுள்ள தமிழ்க் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும். பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும்.

இனியாவது நாங்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும். அரச அதிகாரிகள் பலர் கடந்த அரசாங்கத்துடன் இணைந்து பல இன்னல்களை பொதுமக்களுக்குச் செய்துள்ளனர்.

அப்படியானவர்களை இனங்கண்டு விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்றார்.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய உறுப்பினர் மதியரசன் எதிர்க்கட்சியினர் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும். அல்லது சபையை விட்டு போகலாம் என கூறியதைத் தொடர்ந்து எதிர்க்கட்சி உறுப்பினர் சந்திரசேகரம் எழுந்து வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டார்.

கூடவே உறுப்பினர் கணேசுவும் இணைந்து வாய்த்தர்க்கத்துக்கு மெருகூட்டினார். சபை சற்று நேரம் அமளியாகக் காட்சி தந்தது. எனினும் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது. (இ-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்.எஸ்.எஸ்.அமைப்புக்கு எதிராக அமெரிக்காவில் வழக்குத் தொடுப்பு



**ஆர்.எஸ்.எஸ் அமைப்பை தீவிரவாத இயக்கமாக அறிவிக்க கோரி அமெரிக்காவில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. நியூயோர்க் நீதிமன்றத்தில் சீக்கியர்களுக்கான நீதி அமைப்பு இவ்வழக்கை தொடர்ந்துள்ளது. அவர்கள் தாக்கல் செய்துள்ள மனுவில் ஆர். எஸ்.எஸ் இயக்கம் இந்தியாவில் பாசிச கொள்கை திணிப்பில் ஈடுபடுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவை இந்து மத நாடாக மாற்ற வன்முறை மற்றும் மூர்க்கத்தனமான பிரசாரத்தை ஆர்.எஸ்.எஸ். கையாளுவதாக அதில் கூறப்பட்டுள்ளது.**

இந்தியா முழுவதும் இந்து மத கலாசாரம் மற்றும் அடையாளத்தை ஏற்படுத்த ஆர்.எஸ்.எஸ். இயக்கம் முயற்சிக்கிறது என்றும் புகார் கூறப்பட்டுள்ளது. 2002 ஆம் ஆண்டு குஜராத்தில் நடந்த கோத்ரா புகையிரத எரிப்பு சம்பவமும், பொற்கோவில் கலவரத்தில் இராணுவ நடவடிக்கை எடுக்கச் செய்தது, பாபர் மசூதி இடிப்பு, 2008 இல் தேவாலயங்களை எரித்தது போன்ற சிறுபான்மையினருக்கு எதிரான செயலகளில் ஆர்.எஸ்.எஸ். ஈடுபட்டு வருவதாகவும் சீக்கியர்களுக்கான நீதி அமைப்பு தனது மனுவில் குறிப்பிட்டுள்ளது.

தற்போது கிறிஸ்தவர்களையும், இஸ்லாமியர்களையும் இந்து மதத்திற்கு மாற்ற வீடு திரும்புதல் என்ற நிகழ்ச்சியை ஆர்.எஸ்.எஸ். நடத்துவதாக தெரிவித்துள்ளது. மத திணிப்பில் ஈடுபடும் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தையும், அதனை சார்ந்த கிளை அமைப்புகளையும் தீவிரவாத இயக்கமாக அறிவிப்பதுடன், ஆர்.எஸ்.எஸ். அமைப்பை சர்வதேச தீவிரவாத பட்டியலில் சேர்க்க வேண்டும் எனவும் மனுவில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த வழக்கு தொடர்பாக அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் ஜோன் கெர்ரிக்கு சம்மன் அனுப்பியுள்ள நீதிமன்றம், 60 நாட்களுக்குள் பதிலளிக்கவும் உத்தரவிட்டுள்ளது. (இ-5)

# சவுதி அரேபிய மன்னர் அப்துல்லா காலமானார்

## புதிய மன்னராகிறார் இளவரசர் சல்மான்



சவுதி அரேபிய மன்னர் அப்துல்லா பின் அப்துல் அஜீஸ் நேற்று அதிகாலை மரணம் அடைந்தார். அவருக்கு தலைவர்கள் இரங்கல் தெரிவித்தனர்.

சவுதி அரேபியாவின் ஆறாவது மன்னராக 2005 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் அப்துல்லா பதவியேற்றார். தனது ஆட்சிக்காலத்தில் சவுதி அரேபியாவில் பல புரட்சிகரமான மாற்றங்களை அவர் கொண்டு வந்தார்.

1923 ஆம் ஆண்டு பிறந்த அவருக்கு 90 வயதாகிறது. கடந்த 3 வாரங்களாக நிமோனியா நோயினால் அவதிப்பட்டு வந்த மன்னர் அந்நாட்டு நேரப்படி நேற்று அதிகாலை ஒரு மணிக்கு உயிரிழந்தார்.

இதையடுத்து சவுதி அரேபிய மன்னரின் மரணத்திற்கு இந்திய பிரதமர் மோடி டுவிட்டரில் இரங்கல் தெரிவித்துள்ளார். தங்களின் வழிகாட்டியை சவுதி அரேபியா இழந்து நிற்கும் இவ்வேளையில் அந்நாட்டு மக்களுக்கு தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்வதாக மோடி டுவிட் செய்துள்ளார். அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும் அப்துல்லாவின் குடும்பத்தினர் மற்றும் அந்நாட்டு மக்களுக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

இவருடைய மரணத்தினை அடுத்து தற்போது இளவரசராக உள்ள சல்மான் பின் அப்துல் அஜீஸ், புதிய மன்னராக பதவி ஏற்கிறார். அவர் தனது சகோதரர் முக்ரின்னை இளவரசராக அறிவித்துள்ளார்.

மன்னராக பதவியேற்க உள்ள சல்மானின் வயது 79. 2012 ஆம் ஆண்டு முதல் இளவரசராகவும் பாதுகாப்பு அதிகாரியாகவும் இருந்துள்ள இவர் 50 ஆண்டுகளுக்கும் மேலாக சவுதி அரேபியாவின் தலைநகரான றியாத்தின் ஆளுநராக இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# கண்ணீருடன் தாய் பேட்டி

ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளின் பிடியில் பிணைக்கைதியாக உள்ள ஜபபான் புகைப்பட ஊடகவியலாள்களின் தாய், தன் மகனை விட்டு விடுமாறு கண்ணீர் மல்க பேட்டியளித்துள்ளார்.

சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளால் பிணைக்கைதிகளாக பிடிக்கப்பட்ட ஜப்பானை சேர்ந்த பத்திரிகை ஒன்றின் புகைப்பட ஊடகவியலாளரை கென்ஜி கோட்டோ (Kenji Goto Jogo Age-47) மற்றும் தனியார் பாதுகாப்பு நிறுவனத்தின் நிறுவனர் ஹருணா யுகாவா (Haruna Yukawa Age-42) ஆகிய இருவர் ஆவர்.

இவ்விருவரையும் தலை துண்டித்து கொல்லப் போவதாக ஐ.எஸ். ஐ.எஸ் . அமைப்பை சேர்ந்த ஜிகாதி ஜோன் கடந்த 20 ஆம் திகதி வீடியோ ஒன்றில் மிரட்டல் விடுத்தான்.

அந்த வீடியோவில் அவன் பேசியதாவது, இன்னும் 72 மணி நேரத்திற்குள் இந்த இருவர்களுக்கும் சேர்த்து மொத்தத் தொகையான 200 மில்லியன் டொலர்களை ஜப்பானிய அரசாங்கம் எங்களுக்கு வழங்க வேண்டும் என்றும், இல்லையேல் இவர்களை தலை துண்டித்து கொடூரமாக படுகொலை செய்வோம் என பேசியுள்ளான்.

இதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த பிணைக்கைதி கென்ஜி கோட்டோவின் தாயார் ஜுங்கோ இஷிடோ(Junko Ishido), தன் மகனை காப்பாற்ற ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளிடம் பேட்டி ஒன்றின் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில்,

எனது மகன் இஸ்லாமியர்களின் எதிரி அல்ல, அவனை விட்டு விடுங்கள்.

நான் தாயார் என்ற முறையில் அவனது விடுதலைக்காக என்னால் பிரார்த்தனை செய்ய முடியும். அவனது விடுதலைக்காக எனது உயிரை கொடுக்கவும் தயாராக இருக்கிறேன் என கண்ணீருடன பேட்டியளித்துள்ளார்.

மேலும் தன் மகனை பத்திரமாக மீட்க ஜப்பானிய அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (இ-5)

# பயங்கரவாதத்தினை ஒழிப்பதில் ஜப்பான் அரசு உறுதியாகவுள்ளது

இஸ்லாமிய அரசு ஆயுதக் குழுவினர் பிடியில் உள்ள தங்கள் நாட்டு பிணைக்கைதிகள் இருவரையும் விடுவிக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்துவருவதாக ஜப்பான் அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அரசு செய்தித் தொடர்பாளர் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகளில் சர்வதேச நாடுகளுக்கான ஒத்துழைப்பை வழங்குவதில் ஜப்பான் உறுதியாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபேயும் இதே கருத்தை வலியுறுத்தியுள்ளார என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)




# கவர்ச்சியை நீக்க பிரிட்டன் திட்டம்

பார்ப்பவர்களை கவர்ந்து இழுக்க வல்ல கவர்ச்சியான சிகரெட் பக்கெட் வடிவமைப்புகளுக்கு பதிலாக, புகைப்பதால் உருவாகும் மோசமான பின்விளைவுகளை எச்சரிக்கும் புகைப்படங்கள் தாங்கிய சிகரெட் பக்கெட்டுகள் மட்டுமே அனுமதிக்கும் புதிய சட்டம் பிரிட்டனில் அறிமுகம் செய்யப்போவதாக பிரித்தானிய அரசு அறிவித்திருக்கிறது.

இந்த புதிய வடிவமைப்புக்களில் சிகரெட் பக்கெட்டுகளில் அதன் தயாரிப்பு நிறுவனத்தின் பெயர் பெரியதாகவோ, கவர்சியான வடிவமைப்போ, வண்ணங்களோ, எழுத்துக்களோ இருக்காது.

அதற்கு மாறாக, புகைப்பதால் ஏற்படும் உடல்நல பாதிப்புகள் குறித்த எச்சரிக்கைகள் மற்றும் அதை காட்டும் புகைப்படங்கள் மட்டுமே பெரியளவில் இருக்கும்.

இதுவரை அவுஸ்திரேலியா மட்டுமே இப்படியான சட்டத்தை நடைமுறைப்படுத்தியிருக்கிறது.

இந்த ஆண்டு மே மாதம் நடக்கவிருக்கும் பிரிட்டிஷ் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக இந்த சட்டத்திற்கு பிரிட்டிஷ் நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்தால் 2016 ஆம் ஆண்டு முதல் இந்த சட்டம் நடைமுறைக்கு வரும். புகைபிடிப்பதற்கு எதிரான செயற்பாட்டாளர்கள் பிரிட்டிஷ் அரசின் இந்த முன்னெடுப்பை வரவேற்றிருக்கிறார்கள்.

இங்கிலாந்தில் மட்டும் ஆண்டுக்கு 80 ஆயிரம் பேர் வரை புகைபிடிப்பதனால் இறப்பதாக அரசு புள்ளி விபரங்கள் கூறுகின்றன. (இ-5)

# பூமியை நெருங்கும் விண்கல்



விண்வெளியில் 2004 பி.எல். 84 என்ற பெரிய விண்கல் இருப்பது, கடந்த ஆண்டு, நியூமெக்சிகோவில் உள்ள ஒயிட் சேன்ட்ஸ் நியர் எர்த் ஆஸ்ட்ராய்டு ரிசர்ச் சர்வேயில் தெரியவந்தது. அந்த விண்கல் இப்போது, பூமிக்கு நெருக்கமாக வந்து கொண்டிருக்கிறது.

இந்த விண்கல் நாளை மறுதினம் 26 ஆம் திகதி பூமிக்கு மிக நெருக்கமாக வந்து செல்லும். அப்போது பூமிக்கும், அந்த விண்கல்லுக்கும் இடையேயான இடைவெளி 12 இலட்சம் கி.மீ. ஆக இருககும். இன்னும் 200 ஆண்டு களுக்கு, 2004 பி.எல். 84 விண்கல், பூமிக்கு இவ்வளவு அருகாமையில் வராது என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த எரிகல் பூமிக்கு நெருக்கமாக வருகிறபோது, வட துருவத்தில் வானியல் ஆராய்ச்சியாளர்கள் சிறிய டெலஸ்கோப் மூலமோ, பைனாகுலர்கள் மூலமோ பார்க்க முடியும் எனவும் அவர்கள் கூறியுள்ளார். (இ-5)

# 36 பேர் உயிரிழப்பு 11 பேர் பதவி பறிப்பு

சீனாவின் மிகப்பெரிய நகரமான ஷாங்காயில் கடந்த ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி இரவு புத்தாண்டு கொண்டாட்டம் நடந்தது. ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்ச்சியின் போது திடீரென நெரிசல் ஏற்பட்டது. இதில் சிக்கி 36 பேர் பலியானார்கள். 49 பேர் படுகாயம் அடைந்தனர். பலியானவர்களில் பெரும்பாலானவர்கள் 20 வயதுக்கு உட்பட்டவர்கள்.

இந்த சம்பவம் சீனாவை மட்டுமன்றி உலக நாடுகளையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இதுகுறித்து விசாரணை நடத்த சீன ஜனாதிபதி ஜின்பிங் உத்தர விட்டு இருந்தார்.

ஆயிரக்கணக்கானோர் கூடிய இடத்தில் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததே நெரிசலுக்கு காரணம் என்று தெரிய வந்தது.

இதனையடுத்து 36 பேரின் உயிரிழப்புக்கு காரணமான 11 அதிகாரிகள் பணி நீக்கம் செய்யப்பட்டு உள்ளனர். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## கறுப்புப் பணம் பதுக்கியவர்கள் பற்றி ஆதாரங்களைத் திரட்டி இருக்கிறோம்

சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் சுவிஸ் நிதி அமைச்சர் ஈவ்லின் விட்மெரை சந்தித்து ஜேட்லி ஆலோசனை நடத்தினார். அப்போது கறுப்புப்பண விவகாரம் குறித்து இரு அமைச்சர்களும் 40 நிமிடங்கள் பேசினர். இதுகுறித்து பின்னர் மத்திய நிதி அமைச்சர் ஜேட்லி கூறியதாவது,

சுவிட்சர்லாந்து வங்கிகளில் கறுப்புப்பணம் பதுக்கி வைத்துள்ளவர்களின் விபரங்களைத் திருடி வெளியிடப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இந்தியாவுக்கு எந்தத் தகவலும் அளிக்க முடியாது என்று சுவிஸ் அரசு தெளிவாக கூறி உள்ளது. எனவே, நாங்கள் தனிப்பட்ட முறையில் சுவிஸ் வங்கிகளில் கறுப்புப்பண பதுக்கிய இந்தியர்களின் விபரங்களைத் திரட்டி இருக்கிறோம்.

அந்த ஆதாரங்களின் அடிப்படையில் கறுப்புப்பண் பதுக்கியவர்களின் விபரங்களை அளித்து முழு ஒத்துழைப்பு அளிப்பதாக சுவிஸ்அரசு கூறியுள்ளது. இதுதொடரபான வழக்கை விரைந்து நடத்தவும ஒத்துழைப்பதாக சுவிஸ் தெரிவித் துள்ளது. இவ்வாறு அருண் ஜேட்லி கூறினார்.

சிஐஐ - பிசிஜி கூட்டத்தில் ஜேட்லி பேசுகையில், 'கடந்த ஆண்டு மே மாதம பிரதமர் மோடி தலைமை யில்புதிய அரசு பொறுப்பேற்ற பிறகு, ஊழல் என்ற பேச்சுக்கே இடமில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)









இந்திய குடியரசு தினத்தை முன்னிட்டு நாளை மறுதினம் 26 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா வருகை தரவுள்ள நிலையில் ஒபாமா, பிரதமர் மோடி ஆகியோரின் படங்களுடனான பட்டங்கள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

# நீதிமன்றத்தில் குண்டு வெடிப்பு

## 2 பேர் பலி; 14 பேர் படுகாயம்

**பீகார் மாநிலத்தில் போஜ்பூர் மாவட்டத்தில் உள்ள அர்ரா நகரத்தில் உள்ள நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் சக்தி வாய்ந்த குண்டு வெடித்துள்ளது.**

முதற்கட்ட தகவலின்படி பெண் ஒருவரே இந்த சக்தி வாய்ந்த வெடிகுண்டோடு நீதிமன்றத்திற்குள் நுழைந்து, தாக்குதல் நடத்தியுள்ளதாக தெரிகிறது. தாக்குதலில் அந்தப்பெண் சம்பவ இடத்தில் பலியானார். இத்தாக்குதலின் போது நீதிமன்றத்தினுள் இருந்த பொலிஸ் அதிகாரி ஒருவரும் பலியானார். மேலும் 14 பேர் படுகாயமடைந்தனர்.

பாரதச் செய்தி

நாளை மறுதினம் 26 ஆம் திகதி நடைபெறும் குடியரசு தின விழாவிற்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வருகை தர உள்ள நிலையில் வெடிகுண்டு தாக்குதல் நடத்திருப்பது பாதுகாப்பு அதிகாரிகளுக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. (இ-5)

## தி.மு.க.மீது நீதிபதி காட்டம்

சொத்துக்குவிப்பு வழக்கில் அ.தி.மு.க.பொதுச்செயலாளர் ஜெயலலிதாவின் மேல்முறையீட்டு மனு மீதான விசாரணையில், தி.மு.க. சட்டத்தரணி தேவையில்லாமல் குறுக்கீடு செய்ய வேண்டாம் என நீதிபதி தெரிவித்துள்ளார்.

ஜெயலலிதா மீதான சொத்துக் குவப்பு வழக்கு மீதான மேல் முறையீட்டு விசாரணை கர்நாடக உயர் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. இந்த வழக்கின் விசாரணை நேற்றுமுன்தினம் 12 ஆவது நாளாக நடைபெற்றது. அப்போது ஜெயா பப்ளி கேஷன்ஸ், நமது எம்.ஜி.ஆர் நாளிதழின் வருவாய் குறைத்து காண்பிக்கப்பட்டதாகவும், சொத்துக்களின் சந்தை மதிப்பும் தவறாக கணக்கிடப்பட்டு ள்ளதாகவும் ஜெயலலிதா தரப்பு சட்டத்தரணி நாகேஷ் வரராவ் வாதிட்டார்.

இதனையடுத்து நீண்ட நாட்களாக நடைபெற்ற வழக்கில், 9 மாதங்களில் குற்றப்பத்திரிக்கையை எப்படி தாக்கல் செய்தீர்கள் என அரசு சட்டத்தரணியிடம் நீதிபதி கேள்வி எழுப்பினார். இதற்கு 150 அதிகாரிகள் குழுவினர் தீவிர ஆய்வுகள் நடத்தி அறிக்கை தாக்கல் செயததாக பவானிசிங் விளக்கம் அளித்தார். மேலும் ஜெயலலிதாவின் சொத்து குறித்து முழுமையான ஆவணங்கள் உள்ளதா? எனவும் நீதிபதி கேள்வி எழுப்பினார். இதற்கு தி.மு.க. சட்டத்தரணி குமரேசன் குறுக்கிட்டு, தங்களிடம் முழுமையான ஆவணங்கள் உள்ளதாக தெரிவித்தார்.

அப்போது தேவையில்லாமல் குறுக்கீடு செய்ய வேண்டாம் என நீதிபதி அவரிடம் கூறினார். மேலும் வழக்கை முடிக்க 3 மாதங்களே உள்ளதால் முக்கிய அம்சங்களை மட்டுமே தெரிவிக்குமாறும் நீதிபதி அறிவுறுத்தியுள்ளார். (இ-5)

## மும்பை சித்திவிநாயகருக்கும் தீவிரவாதிகளால் அச்சுறுத்தல்

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வருகையையொட்டி, மும்பை சித்தி விநாயகர் கோயிலை தாக்க தீவிரவாதிகள் திட்டம் தீட்டியுள்ளதாக வநத உளவுத்துறை எச்சரிக்கையை அடுத்து, அந்தக் கோயிலுக்கு பாதுகாப்பு பலமடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 28ஆம் திகதிக்கு முன்னர் தாக்குதல் நடத்த பாகிஸ்தான் ஆதரவு ஜிகாதி அமைப்புகள் திட்டமிட்டிருப்பதாக தெரிகிறது. ஜமாத்-உத்-தாவா, லஷ்கர்-இ-தொய்பா, ஜெய்ஷ்-இ-முகமது, ஹிஸ்புல் முஜாகிதீன் ஆகிய அமைப்புகள் சதித் திட்டத்தில் ஈடுபடவுள்ளதாக தெரிகிறது. தீவிரவாத குழுவினர் ஒரு பிரிவினர் மகாராஷ்டிராவிலும், மற்றொரு பிரிவு உத்தரப் பிரதேசத்திலும், ராஜஸ்தான் மற்றும் ஒடிசாவில் சிலரும் பதுங்கியிருப்பதாக தகவல் வந்துள்ளது.

மகாராஷ்டிராவில் ஊடுருவியுள்ள தீவிரவாதிகள் மும்பை சித்தி விநாயகர் கோயிலில் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருப்பதாக வந்த தகவலையடுத்து, அங்கு பாதுகாப்பு பல மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான், ஒடிசா மாநில அரசுக்ளுக்கும் பாதுகாப்பு, கண்காணிப்பை அதிகரிக்கு்மாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்ட எச்சரிக்கைக் குறிப்பில், லஷ்கர் இ தொய்பா தலைவர் ஹபீஸ் சையத் உத்தரவின் பேரில் இந்தியாவுக்குள் ஊடுருவ 10 பயிற்சி பெற்ற தீவிரவாதிகள் திட்டமிட்டிருப்பதாகவும், அவர்கள் தற்போது பாகிஸ்தானின் சியால்கோட் மாகாணத்தில் முகாமிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஒபாமா தங்கும் ஹோட்டலில் கூடுதல் பாதுகாப்பு**

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தங்கும் ஐ.டி.சி. மவுரியா ஹோட்டலில் பாதுகாப்பு ஏற்பாடுகள் சிறப்பாக செய்யப்பட்டுள்ளன. அங்கு தொலைபேசி ஜேமர்கள் பொருத்தப்பட்டுள்ளதோடு. ஹோட்டல் ஊழியர்கள் தொலைபேசி கொண்டு செல்லவும்தடை செய்யப்பட்டுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இ.போ.ச. பேருந்து மீது கல்வீச்சு; பணியாளர்கள் எதிர்ப்பு

## இ.போ.சபை,த.பே.உ.சங்கம் என்பன பரஸ்பர குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி இ.போ.ச. பேருந்து சபையின் நேர ஒழுங்கு அட்டவனையல்லாது பேருந்து சேவையில் ஈடுபடுவதால் தனியார் பேருந்துச் சேவை உரிமை யாளர்கள் பல நெருக்கடியும் நட்டமும் ஏற்பட்டதாக தெரிவிக்கின்றனர்.**

இது தொடர்பில் தெரியவருவ தாவது,

கிளிநொச்சி டிப்போவிற்குச் சொந் தமான இ.போ.ச.பேருந்து யாழ்ப் பாணத்திலிருந்து வட்டக்கச்சிக்கு புதிதாக நேற்றைய தினம் சேவை யில் ஈடுபடுத்தப்பட்டது.

இதனால் அப்பேருந்திற்கு வட் டக்கச்சியில் வைத்து இனந்தெரி யாத நபர்கள் கல்வீச்சுத்தாக்கு தலை நடத்தியிருந்தனர்.

இதனால் கிளிநொச்சி இ.போ.ச. முகாமையாளர் இலங்கை போக்கு வரத்து சபைக்கு சொந்தமான சாலை யில் நிறுத்தப்பட்டிருந்த தனியா ருக்குச் சொந்தமான பேருந்து களை அப்புறப்படுத்துமாறும் தாம் வேலி அமைக்க வேண்டுமெனவும் கடும் கோபமாக கூறியுள்ளார்.

கிளிநொச்சி நகரில் பேருந் து கள் தரித்து நிற்பதற்கு பேருந்து நிலையம் இதுவரை அமைக்கப்பட வில்லை.அத்துடன் காணியும் வழ ங்கப்படவில்லை.

மக்கள் மீள்குடியேற்றத்தை யடுத்து டிப்போ காணியின் பகுதி யில் இ.போ.சபையினருக்குச் சொந் தமான பேருந்துகளும் தனியாரு க்கு சொந்தமான பேருந்துகளும் தரித்து நின்றன.

திடீரென அவ் விடத்தை விட்டு தனியார் பேருந்துகளை வெளி யேற்றுமாறு கூறுவது பொருத்த மற்ற செயற்பாடாகுமென தனி யார் பேருந்து உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

இது தொடர்பாக கிளிநொச்சி தனியார் பேருந்து சங்கத்தலைவர் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த 5 வருட காலமாக வட்ட க்கச்சி பகுதிக்கான வீதிகள் புனர மைக்கப்படாத நிலையிலும் கூட மக்களுக்கான பேருந்து போக்கு வரத்து சேவையை தனியாரே வழ ங்கியதாகவும் தற்போது இ.போ. ச.பேருந்து சபையினர் குத்தகை அடிப்படையில் பேருந்துகளை கொள்வனவு செய்துவிட்டு கடன் தொகையை செலுத்துவதற்கு நேர அட்டவணையைப் பின்பற்றாது சேவை யில் ஈடுபடுவதனால் தமக்கும் இ.போ. ச.பேருந்து சபையினருக்கும் இடை யில் பிரச்சினை இடம்பெறுவதாக வும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் கிளிநொச்சி நகரில் பேருந்து நிலையம் இல்லாமை யால் தாம் பல்வேறு அசௌகரிய ங்களை எதிர்கொள்வதாகவும் சம்ப ந்தப்பட்ட தரப்பினர் இவ்விடயத்தில் அக்கறை கொண்டு சிறந்த தீர் வைப் பெற்றுத்தர ஆவன செய்ய வேண் டுமென அவர் கேட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் கிளி நொச்சி மாவட்ட இ.போ.ச. முகா மையாளர் எஸ்.ஜீவாநந்தனை தொட ர்பு கொண்டு கேட்டபோது,

கிளிநொச்சி மாவட்ட செயல கத்தின் அனுமதியின்படி இ.போ.ச. பேருந்து பயணிக்கும் போதே வட்ட க்கச்சியில் வைத்து கல்வீச்சு தாக் குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதனால் தான் தனியார் பேரு ந்துகளை இ.போ.ச. காணியிலி ருந்து அகற்றுமாறு இ.போ. சாவின் ஒட்டுமொத்த தொழிலாளர் களும் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுவரை காலமும் இ.போ.ச தனியார் பேருந்து என்பன ஒரே காணியில் தான் தரித்து நிற்கின் றன. இ.போ.ச. பேருந்து மீதான கல்வீச்சே தொழிலாளர்கள் கிளர் ந்தெழக் காரணமாகிவிட்டது என் றார். (அ-2-277)




## மின்சாரம் தடைப்படும்

(கிளிநொச்சி)

மின்சார சபையினரால் மேற் கொள்ளப்படும் நிர்மாணப் பணிக ளின் காரணமாக இன்று சனிக் கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழ மையும் காலை 9 மணியளவில் இருந்து மாலை 5 மணி வரை மின் சாரம் தடைப்பட்டிருக்கும் என கிளி நொச்சி மின் அத்தியட்சகர் தி.குக ராஜ் அறிவித்துள்ளார்.

இதற்கமைய திருமுறிகண்டி வீதியிலிருந்து ஜெயபுரம் வரையான பகுதிகளுக்கும் ஸ்கந்தபுரம் ,கோணா வில் ஆகிய பகுதிகளுக்கும் அதே போன்று பரந்தனில் இருந்து தேரா வில் குளம் வரையான பகுதிகளுக் கான மின்சாரம் தடைப்பட்டிருக்கு மென அவர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு எதிர்வரும் 31 ஆம் திகதி பிற்பகல் 2 மணியில் இருந்து மாலை 6 மணிவரை இரணை மடு விலிருந்து கொக்காவில் வரையி லான பகுதிகளுக்கான மின்சார மும் தடைப்பட்டிருக்குமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(அ-2-277)

## எஸ்.கே.முதியோர் இல்லத்தினால் ஆசிரியர்,மாணவர்கள் கௌரவிப்பு

### 5இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பணப்பரிசில்

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மலையாளபுரத்தில் புலம்பெயர் தமி ழரினால் இலவசமாக இயக்கப்படும் எஸ். கே.முதியோர் இல்லத்தின் நிர் வாகம் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகியமாவட்டங்களில்கடந்த ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை யில் முதலிடங்களைப் பெற்ற ஏழு மாணவர்களுக்கும் கல்வி போதித்த ஏழு ஆசிரியர்களுக்கும் 5 இலட் சத்து 25 ஆயிரம் ரூபா பணப்பரி சில் வழங்கி கௌரவித்துள்ளது.

இது தொடர்பில் தெரியவருதா வது, புலம்பெயர் தமிழர் ஒருவரால் தனது தந்தையாரின் ஞாப கார்த் தமாக கிளிநொச்சி மலையாள புரத்தில் எஸ்.கே. முதியோர் இல்லம் ஒன்றை ஆரம்பித்து 80 முதிய வர்களை இலவசமாகப் பராமரித்து வருகின்றார்.

இதன் மற்றுமொரு சேவையாக கடந்த தைப்பொங்கல் தினத்தன்று மலையாள புரத்தில் உள்ள கற்ப முத்துமாரி அம்மன் ஆலய வளா கத்தில் மேற்படி மாணவர்களுக்கும் ஆசிரியர்களுளக்கும் பணப்பரிசு வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முத லாமிடத்தை பெற்ற 3 மாணவர்க ளுக்கும் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் கிளிநொச்சி மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்ற 4 மாணவ ர்களுக்கும் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் 2 இலட்சம் ரூபாவும் வழங்க ப்பட்டது.

மேற்படி இரு மாவட்டங்களும் கல்வி போதித்த 7 ஆசிரியர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதம் ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபாவும் மொத்தம் 5 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பணப்பரிசில் வழங்கி கௌர விக்கப்பட்டுள்ளனர். (அ-2-15)

## செஞ்சோலை சிறுவர் இல்ல இரண்டாம் ஆண்டு நிறைவு

கிளிநொச்சி, இரணைமடு செஞ் சோலை சிறுவர் இல்லத்தின் இரண் டாவது ஆண்டு நிறைவு விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணி யிலிருந்து பிற்பகல் 4 மணி வரை செஞ்சோலை சிறுவர் இல்லத் தலை வர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந் தினராக வடமாகாண சிறுவர் நன்ன டத்தை பராமரிப்பு சேவை திணைக்க ளத் தின் ஆணையாளர் ரி.விஸ்வரூ பன் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக, கிளி நொச்சி வலயக்கல்விப் பணிப்பா ளர் க.முருகவேள், கிளிநொச்சி மாவ ட்ட கோட்டக்கல்விப்பணிப்பாளர் அ.அமிர்தலிங்கம், கிளிநொச்சி மாவ ட்ட சிறுவர் நன்னடத்தை உத்தி யோ கத்தர் மு.முத்துக்குமரன், கிளிநொ ச்சி மாவட்ட தேசிய சிறுவர் பாது காப்பு அதிகாரசபை உத்தியோகத்தர் களான செந்தூரன், கோபி, கிளி நொச்சி மாவட்ட உளவளத்துறை உத்தியோகத்தர் ரி.துஷ்யந்தன், கரைச்சி பிரதேச சபை சிறுவர் பாது காப்பு உத்தியோகத்தர் திருமதி ஜெனி ற்றா, கிளிநொச்சி மாவட்ட நன் னடத்தை உத்தியோகத்தர் ஆர்.ராஜன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப் பிக்கவுள்ளனர். (அ-2)

## பாதுகாப்பற்ற முறையில் மின்சாரம் வழங்கப்படுகிறது

### ஆபத்து ஏற்படும் என சுட்டிக்காட்டு

கிளிநொச்சி தர்மபுரம் கட்டைக் காடு கிராமத்திற்கு கடந்த சில மாதங் களுக்கு முன்னர் வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படுவதற்கென வருகை தந்த வடக்கின் வசந்த திட்டத் தின் ஒப்பந்தக்காரர்கள் தாம் தங்கி யிருந்த வீட்டிற்கு மின்மானி பொரு த்தாது தற்காலிகமாக மின்னி ணைப்பு செய்துள்ளனர்.

தற்போது அவர்கள் தமது வீட்டி லிருந்து சுமார் 100 மீற்றர் தூரத் திற்கு இடைப்பட்ட ஒரிரு வீடுகளு க்கு பாதுகாப்பற்ற விதத்தில் நிலத்தி ற்கு கீழாக மின்சாரத்தை வழங்கியு ள்ளதாக அப்பகுதி மக்களால் தெரி விக்கப்படுகின்றது.

இதேவேளை இந்த பாதுகாப்ப ற்ற மின்சாரத்தை மக்கள் பயன் பாட்டிற்கு விடுவதால் உயிராபத்து ஏற்படும் என ஒப்பந்தக்காரர்களி டம் அப்பகுதிபெரியவர்களால் எடுத்துக் கூறப்பட்டது.

இருந்தும் இதை நிறுத்துவதற்கு அவர்கள் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

உயிராபத்து ஏற்படுத்தும் மின் இணைப்பை நிறுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2-282எ)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

துணுக்காய் கல்வி வலயத்திற் குட்பட்ட மு/கொல்லவிளான் குளம் அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் க.பிரேமசந்திரன் தலைமையில் பாடசாலை மைதா னத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந் தினராக துணுக்காய் கல்வி வலய உதவிக்கல்விப்பணிப்பாளர் ஆ.சுந் தரமூர்த்தி கலந்து கொண்டு சிறப்பி க்கவுள்ளார்.

இந்நிகழ்வில்பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் வருகை தந்து சிறப் பிக்குமாறு பாடசாலை சமூகம் கேட்டுள்ளது. (அ-2-15)





வவுனியா தம்பனைச்சோலை கேதீஸ்வரா வித்தியாலயத்தில் கால்கோள்விழா அண்மையில் பாடசாலை அதிபர் திருமதி பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற போது.... (படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழிவாங்குதல் என்பது அற்பர்களால் உண்டாகும் அற்ப ஆனந்தம் காணும் செயலாகும். – ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# சுன்னாகம் கழிவு எண்ணெய் கசிவு தொடரும் எதிர்ப்புப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கழிவு எண்ணெய் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வினைக் கோரி வைத்தியர்கள் உட்பட அப்பகுதி மக்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

சுன்னாகத்தில் அமைந்துள்ள நொதேர்ன் பவர் நிறுவனம் மூடப்பட்டிருந்தாலும் தற்போது காணப்படுகின்ற கழிவு எண்ணெய்ப் பிரச்சினைக்கு உரிய நடவடிக்கை எடுக்கக் கோரியே அவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இவ் உண்ணாவிரதப் போராட்ட சுன்னாகம் சிவன் கோயில் முன்பாக நேற்றும் நேற்று முன்தினமும் தொடர்சியாக நடைபெற்றது.

இது தொடர்பில் பொதுமக்கள், அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள் மேற்கொண்ட முயற்சிகள், போராட்டத்தினால் நொதேர்ன் பவர் நிலையத்தினை மூடுமாறு மின்சக்தி எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க உத்தரவிட்டிருந்தார்.

எனினும் நொதேர்ன் பவர் மின்னுற்பத்தி நிறுவனத்தினால் கசியப்படுவதாக கருதப் படுகின்ற கழிவு ஒயில் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு வழங்கப் படவில்லை.

இந்நிலையிலேயே வைத்தியர்கள் மற்றும் பொதுமக்கள் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த வைத்தியர் ஜி.செந்தூரன் தெரிவிக்கையில்,

மின்னுற்பத்தி நிலையம் மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதே தவிர நிரந்தரமாக மூடுவதற்கான அறிவித்தல்கள் எவையும் விடப்படவில்லை.

நாம் எமது போராட்டத்தினை கைவிட்டால் ஒரு சில வாரங்களின் பின்னர் குறித்த அனல் மின்னுற்பத்தி நிலையத்தினை மீண்டும் இயங்க விட்டுவிடுவார்கள்.

கழிவு எண்ணெய்க் கலப்பினால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு நிரந்தர குடிநீர் விநியோகம் ஏற்படுத்தப்படவில்லை.

இவ்வாறான நிலையில் எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என அவர் தெரிவித்தார். (எ-4)

## தமிழ்க் கைதிகளுக்கும் பொது மன்னிப்புக் கிடைக்குமா?

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொது மன்னிப்பு வழங்கியுள்ளார்.

பொது மன்னிப்பு வழங்கப்பட்டதை அடுத்து ஏற்கெனவே பறிகொடுத்த 'ஜெனரல்' பட்டத்தை மீண்டும் சரத் பொன்சேகா பெற்றுள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகா என்று அவரை இப்போது அழைக்க முடியும். 2010 ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் இராணுவத் தளபதி தன்னை எதிர்த்துப் போட்டியிட்டார் என்ற ஆத்திர மேலீட்டால் சரத் பொன்சேகாவுக்கு மகிந்த ராஜபக்ச செய்த நிட்டூரம் கொஞ்சமன்று.

பொன்சேகாவை சிறையில் அடைத்தது முதல் பதவிகள், பட்டங்கள் என அனைத்தும் பறிக்கப்பட்டது வரை மகிந்தவின் கட்டளையில் நடந்து முடிந்தன.

2015 ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகா, மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்தார். அவருக்காக தேர்தல் பிரசாரமும் செய்தார்.

யாழ்ப்பாணத்தில் நடந்த மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் பிரசாரத்தில் உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், மைத்திரிபால சிறி சேனவும், சரத் பொன்சேகாவை விளித்துக்கூறும் போது, 'ஜெனரல்' சரத் பொன்சேகா என்றே குறிப்பிட்டனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக – பொன்சேகாவின் பதவி பறிக்கப்பட்டிருந்த வேளையில் ஜெனரல் என்று மிகத் துணிவோடு கூறப்பட்டதெனில் அடுத்த ஜனாதிபதி மைத்திரி என்பது ஏற்கெனவே முடிவாகியிருந்தது என்பதைக் கூறுவதில் எந்தத் தவறும் இல்லை. இப்போது ஜனாதிபதி மைத்திரி, சரத் பொன்சேகாவு க்கு பொது மன்னிப்பு வழங்கியுள்ளார். பொது மன்னிப்பு வழங்கியதன் காரணமாக; ஏலவே பறிக்கப்பட்ட பட்டம், பதவிகள் மீளவும் கிடைத்துள்ளன.

பரவாயில்லை, தனது வெற்றிக்காக பாடுபட்ட சரத் பொன்சேகாவுக்கு ஜனாதிபதி மைத்திரி பொதுமன்னிப்பு வழங்கியது பற்றி நாம் ஆதங்கப்படவில்லை.

ஆனால் சரத் பொன்சேகாவுக்கு மன்னிப்பு வழங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் இரண்டு விடயங்களை வலியுறுத்த விரும்புகிறோம்.

அதில் ஒன்று, போர்க்குற்ற விசாரணை நடைபெறும் போது சரத் பொன்சேகா மீதும் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

மகிந்தவின் பழிவாங்குதலில் இருந்து சரத் பொன்சேகாவைக் காப்பாற்றியது போல போர்க்குற்ற விசாரணையிலும் சரத் பொன்சேகாவை காப்பாற்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முற்படக்கூடாது. அவ்வாறான முயற்சிகள் நடக்குமாயின் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காமல் போகும்.

இரண்டாவது விடயம், சரத் பொன்சேகாவுக்கு மன்னிப்பு வழங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் இன்னுமொரு தார்மீகப்பணியைச் செய்ய வேண்டும்.

அது எதுவெனில், விளக்கம் விசாரணையின்றி சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கி அவர்களை விடுதலை செய்வதாகும்.

பல ஆண்டுகளாக சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் சிறைகளில் இருந்தவாறு எத்தனையோ போராட்டங்களை நடத்திவிட்டனர். எனினும் இன்று வரை அவர்களுக்கு விடுதலை கிடைக்கவில்லை.

எனவே, சரத் பொன்சேகாவிற்கு பொதுமன்னிப்பு வழங்கிய ஜனாதிபதி தமிழ் அரசியல் கைதிகளுக்கும் பொதுமன்னிப்பு வழங்க வேண்டும். அவ்வாறு மன்னிப்பு வழங்கும் போது புதிய ஜனாதிபதி இனப்பாகுபாடின்றி ஆட்சி நடத்துகின்றார் என்ற மன நிலை சிறுபான்மை மக்களிடம் ஏற்படும்.

அதேநேரம், போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் மரண தண்டனை விதிக்கப்பட்ட இந்தியர்களுக்கு மன்னிப்பு வழங்கிவிட்டு, இலங்கைத் தமிழர்களுக்கு மன்னிப்பு வழங்க மறுத்த மகிந்தவின் இனவெறித்தனத்திற்கு பரிகாரம் காணும் வகையில் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஈழத்தமிழர்களுக்கும் ஜனாதிபதி மைத்திரி பொதுமன்னிப்பு வழங்கி அவர்களை விடுதலை செய்ய வேண்டும்.

## 500 மில். பெறுமதியில் கப்ராலின் பிரமாண்ட வீடு

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ராஜகிரியவில் 500 மில்லியன் ரூபாய் பெறுமதியில் மிகப பிரமாண்டமானதொரு வீடொன்றை நிர்மாணித்துள்ளர்.

இவ் வீட்டை இவர் ஆளுநராக பதவி வகித்த பின்பே நிர்மாணித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவர் உயர் பதவியை வகிக்கும் போது அரசுக்கு சொத்து விபரங்கள் கையளிக்கும் போது இந்த வீடு இருக்கவில்லை என தெரியவருகின்றது.

அத்துடன் இவரது சகோதரியையும் ஒரு அரச வங்கியின் தலைவியாகவும் நியமித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மத்திய வங்கியின் அதிகாரிகள், முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் எவ்வாறு நிதிகளை சட்ட விரோதமாக கையாடினார் என்ற விடயங்களை தெரிவித்து வருகின்றனர்.

பெற்றோலிய சம்பந்தமாக கெக் ஒப்பந்தம், வெளிநாட்டு வங்கிகளின் ஒப்பந்தத்தில் அவருக்கு பாரிய பங்கு கிடைத்துள்ளது.

அத்துடன் 4 ஆயிரம் மில்லியன் ரூபாய் கிரீஸ் நாட்டில் ஒரு கம்பனியில் அவர் நேரடியாக முதலிட்டுள்ளதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன. (எ-11)

## வவுனியாவில் ஆயுதங்கள் மீட்பு



(குருமன்காடு)

வவுனியா சிதம்பரபுரம் கற்குளம் மலைமுருகன் கோயிலுக்கு அருகில் வீட்டு வளவு ஒன்றினுள் பரல் ஒன்றில் புதைத்துவைக்கப்பட்டிருந்த ஆயுதங்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை தென்னங்கன்று நடுவதற்காக குழிவெட்டிய போது பரல் ஒன்று காணப்பட்டுள்ளது. மேலும் தோண்டியபோது அதற்குள் ஆயுதங்கள் இருந்தமை தெரியவந்தது.

இதையடுத்து பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் அந்த பரலில் இருந்த வெடி பொருள்களை மீட்டனர். ஆர்.பி.ஜி.எறிகணைகள் - 2, பரா வெளிச்சக் குண்டுகள் - 2, எம்.பி.எம்.ஜி. ரவைகள் 67 என்பன உட்பட சில வெடிபொருள்கள் மீட்கப்பட்டன. (எ-250)

## இலங்கை அகதிகளை அனுப்புவது குறித்துப் பேச்சு

### இந்.பிரதமர் யோசனை

(புதுடில்லி)

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கை தமிழ் அகதிகளைத் தாயகம் திருப்பி அனுப்புவது தொடர்பில் இலங்கை தலைவர்களுடன் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி விரைவில் பேச்சு நடத்தவுள்ளார்.

கொழும்புக்கான தனது பயணத்தின போது, இலங்கை தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவது குறித்து பேச்சுக்களை நடத்துவதில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி முக்கிய கவனம் செலுத்துவார் என்று அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நரேந்திர மோடியின் கொழும்புக்கான பயணத்தின் திகதி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என்றாலும், எதிர்வரும் மார்ச் மாதம் அவர் கொழும்புக்குப் பயணம் மேற்கொள்வார் என்று செய்திகள் கூறுகின்றன.

இந்தியப் பிரதமரின் கொழும்புக்கான பயணத்தின் போது கொழும்புக்கும் கணடிக்கும் இடையில் இரட்டை தொடருந்துப பாதையை இந்தியாவின் பங்களிப்புடன் அமைப்பது தொடர்பிலும் பேச்சு நடத்தப்படவுள்ளது.

அத்துடன் பதுளை மற்றும் நுவரெலிய மாவட்டங்களில் இந்திய வம்சாவளித் தோட்டத் தொழிலாளர்களுக்கு 4 ஆயிரம் வீடுகளை அமைத்துக் கொடுப்பது குறித்தும் பேச்சுக்கள் நடத்தப்படும்.

தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையிலும், கொழும்புக்கும் தூத்துக்குடிக்கு இடையிலும் மீண்டும் பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பது குறித்தும் பேச்சுக்கள் நடத்தப்படவுள்ளன. (எ-11)

## மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மேற்கு இறுப்பிட்டி அரியநாயகன்புலம் அருள் மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை 25 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

பெப்ரவரி 2 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ஏ)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



### மனதில் இருந்து விடுதலை

இது மனமே இல்லாத நிலையல்ல. மனம் என்பது நம்பிக்கை, நோக்கங்கள், சிந்தனைகள், சமுதாயக் கட்டுப்பாடுகள், பாதிப்புக்கள், பிள்ளைப்பராய முடிவுகள் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது. இந்த மனதே நமது விருப்புகளுக்கு உட்படாது; நமது வாழ்வைக் கட்டுப்படுத்துகின்றது; ஆகவே நாம் முடிவையும் எடுக்க முடியவில்லை; இந்த மனதின் வட்டத்திற்கு வெளியில் எதையும் சிந்திக்க முடியவில்லை.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### ஒற்றுமைக்கு வழிகாட்டு!



❖ எல்லாத் தீமையையும் எதிர்த்து நின்று போரிடு. தொண்டு செய்து வாழ்வதே மகிழ்ச்சியானது.

❖ சுயநலமில்லாமல் எந்நேரமும் பற்றின்றி பணியாற்றுவதே கர்மயோகம்.

❖ இன்பம் மட்டுமே குறிக்கோள் அல்ல. ஞானம் ஒன்றே வாழ்வின் உயர்ந்த லட்சியம்.

❖ உதவி செய். ஒருபோதும் சண்டையிடாதே. ஒற்றுமைக்கு வழிகாட்டு. யாரையும் அழிக்க நினைக்காதே.

❖ [illegible], தூய்மையும், பூரணத்தன்மையும் உன்னிடத்திலே நிறைந்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரான்கி, எலியாட் உலக சாதனை

# இலங்கையை வென்றது நியூசிலாந்து






இலங்கைக்கு எதிரான 5வது ஒருநாள் போட்டியில், நியூசிலாந்தின் அணி 108 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது.

நியூசிலாந்து சென்றுள்ள இலங்கை அணி, 7 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் 4 போட்டிகள் முடிவில், நியூசிலாந்து அணி 2-1 என, முன்னிலையில் இருந்தது.

நேற்று ஐந்தாவது போட்டி டுனிடினில் நடந்தது.

முதலில் நாணயற்சுழற்சியில் வென்ற இலங்கை அணி களத்தடுப்பை தெரிவு செய்தது.

நியூசிலாந்து அணிக்கு கப்டில், 'டக்' அவுட்டாகி அதிர்ச்சி கொடுத்தார். பிரண்டன் மக்கலம் (25), வில்லியம்சன் (26), ராஸ் டெய்லர் (20) சீரான இடைவெளியில் ஆட்டமிழந்தனர்.

நியூசிலாந்து அணி 93 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்தது.

பின் இணைந்த ரான்கி, எலியாட் ஜோடி அணியை சரிவில் இருந்து மீட்டது. சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ரான்கி, 74ஆவது பந்தில், தனது முதல் சர்வதேச கன்னிச் சதத்தை பெற்றான்.

இவருக்கு நல்ல ஜோட கொடுத்த எலியாட், தன் பங்கிற்கு 2வது சதம் அடிக்க, நியூசிலாந்து அணி 50 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 360 ஓட்டங்கள் குவித்தது. 6வது விக்கெட்டுக்கு 30 ஓவர்களில் 267 ஓட்டங்கள் சேர்த்த ரான்கி, எலியாட் ஜோட புதிய உலக சாதனை படைத்தது.


கடின இலக்கை துரத்திய இலங்கை அணிக்கு திரிமான்னே (45), ஜெயவர்த்தனா (30), மெண்டிஸ் (18) சற்று ஆறுதல் தந்தனர். டில்ஷான் ஒருநாள் அரங்கில் 21வது சதம் அடித்தார்.

இருப்பினும், இலங்கை அணி 43.4 ஓவரில், 252 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து, 108 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

ஒருநாள் தொடரில் நியூசிலாந்து அணி 3-1 என, முன்னிலை பெற்றது. போட்டியின் ஆட்ட நாயகனாக ரான்கி எலியாட் ஜோடி தெரிவு செய்யப்பட்டனர். (க)

# அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ்

# சானியா-சூ வெய் ஜோடி தோல்வி



அவுஸ்திரேலிய ஓபன் கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் நேற்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு 2வது சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் சானியா மிர்சா-சீன தய்பேயின் சூ வெய இணை தோல்வியை தழுவியது.

கனடாவின் டப்ரோவ்ஸ்கி-போலந்தின் ரொசொல்கா இணை 7-6(7-5), 6-4 என்ற நேர் செட்களில், டென்னிஸ் தரவரிசை பட்டியலில் 2வது இடத்தில் உள்ள சானியா-சூ வெய் ஜோடியை தோற்கடித்து 3வது சுற்றுக்கு முன்னேறியது. (க)

# முல்லைக்கிண்ணம் இன்று ஆரம்பம்

முல்லைத்தீவு மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் நடத்தும் "முல்லைக் கிண்ணம்-2015" சுற்றுப் போட்டி இன்று காலை ஆரம்பமாகவுள்ளது.


முல்லைத்தீவு மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கம் நடத்தும் மாபெரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி 24,25 ஆம் திகதிகளில் மு/மல்லாவி மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில் இடம் பெறுகின்றது.

வடமாகாண ரீதியாக ஆண்கள் அணிகளுக்கிடையே நடத்தப் படவுள்ளது. இச்சுற்றுப்போட்டியில் வடமாகாணத்தின் முன்னணி அணிகள் பல பங்குபெறவுள்ளன.

போட்டிகளின் ஆரம்ப வைபவத்தில் விருந்தினர்களாக மு/மல்லாவி மத்திய கல்லூரி அதிபர், துணுக்காய் பிரதேச செயலர் ஆகியோர் கலந்து கொண்டு போட்டிகளை ஆரம்பித்து வைக்கவுள்ளனர். (க-23)

# இந்திய பட்மிண்டன் போட்டி

# கால் இறுதியில் சாய்னா, சிந்து



சயத் மோடி நினைவு சர்வதேச இந்திய மாஸ்டர்ஸ் பட்மிண்டன் போட்டி லக்னோவில் நடந்து வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடந்த பெண ்கள் ஒற்றையர் 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் இந்திய நட்சத்திர வீராங்கனை சாய்னா நேவால் 21-15, 21-9 என்ற நேர் செட்டில் சக நாட்டவரான ரிதுபர்னா தாசை வீழ்த்தி கால்இறுதியை எட்டினார்.

மற்றொரு இந்திய வீராங்கனை பி.வி.சிந்து 21-18, 21-14 என்ற நேர் செட்டில் ஜியாயுயன் சென்னை (சிங்கப்பூர்) தோற்கடித்து கால் இறுதிக்கு முன்னேறினார். பெண்கள் இரட்டையர் 2ஆவது சுற்றில் இந்தியாவின் ஜுவாலா கட்டா-அஸ்வினி ஜோடி 21-15, 21-11 என்ற செட் கணக்கில் சக நாட்டவர்களான மேகனா-மனீஷாஇணையைவென்றது.

ஆண்கள் ஒற்றையர் 3ஆவது சுற்றில் இந்திய முன்னணி வீரர் ஸ்ரீகாந்த் 22-20, 20-22, 21-11 என்ற செட் கணக்கில் போராடி ஜாய்னுதினை (மலேசியா) வீழ்த்தி கால்இறுதிக்கு தகுதி பெற்றார்.

இந்த வெற்றியை பெற ஸ்ரீகாந்துக்கு 1 மணி7 நிமிடங்கள் தேவைப்பட்டது. பிரனாய், குரு சாய்தத், காஷ்யப், சாய் பிரனீத் ஆகிய இந்தியர்களும் கால் இறுதியை உறுதிசெய்துள்ளனர்.

இதற்கிடையே வெளியிடப்பட்ட புதிய தரவரிசையில் சாய்னா ஒரு இடம் உயர்ந்து 3ஆவது இடத்தை பிடித்துள்ளார். சிந்து 11ஆவது இடத்தில் இருந்து 9ஆவது இடத்திற்கு வந்துள்ளார். ஸ்ரீகாந்த் ஒரு இடம் சரிந்து 5ஆவது இடத்தை பெற்றிருக்கிறார். (க)

# விக்ரம் ராஜன் கங்கு ஞாபகார்த்த கிரிக்கெட்



கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகதத்தினால் வருடந்தோறும் நடத்தப்படும் விக்ரம ராஜன் கங்கு ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று சனிக்கிழமை கொக்குவில் இந்துக்கல்லூரி மைத னத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இச் சுற்றுப்போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணி, சென்றலைட்ஸ் அணி, கொக்குவில் மத்திய சனசமுக நிலைய விளையாட்டுக்கழகம், ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் ஆகியன பங்குபற்றுகின்றன.

இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் கொக்குவில் மத்திய சனசமுக நிலைய் விளையாட்டுக்கழகத்தினை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகமும், பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெறும் போட்டியில் யாழ்.பல்கலைக்கழக விளை யாட்டு அணியை எதிர்த்து சென் றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்மித் சதம் இறுதிப் போட்டிக்கு முன்னேறியது ஆஸி



ஸ்ரீபன் ஸ்மித்தின் அசத்தலான சதம் கை கொடுக்க, இங்கிலாந்துக்கு எதிரான கார்ல்ரன் மிட் தொடரின் லீக் போட்டியில் 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி, அத்தொடரின் இறுதிப் போட்டிக்கு லாவகமாக முன்னேறியது.

அவுஸ்திரேலியா, இந்தியா, இங்கிலாந்து அணிகள் பங்கேற்கும் மும்முனைத் தொடர் அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வருகிறது.

இதன் 4ஆவது லீக் போட்டி ஹோபர்ட் நகரில் நேற்று அவுஸ்திரேலியா- இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் நடைபெற்றது.

ஆஸியின் வழமையான அணித் தலைவர் ஜோர்ஜ் பெய்லி போட்டித் தடை காரணமாக, பங்குபற்றாத நிலையில், முதன் முறையாக அவுஸ்திரேலிய ஒருநாள் அணிக்கு ஸ்ரீபன் ஸ்மித் தலைமை தாங்கினார்.

டேவிட் வோர்னர், வோட்சன் ஆகியோருக்குப் பதில் ஹென்ரிக்ஸ், ஷோன் மார்ஷ், கமரூன் வைட் இடம்பெற்றனர்.

**சிறப்பான தொடக்கம்:**

துடுப்பாட களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு மொயீன் அலி, இயன் பெல் இணைந்து சிறப்பான ஆரம்பம் வழங்கினர்.

இவர்கள் இருவரும் முதலாவது விக்கெட்டுக்கு 113 ஓட்டங்களை பகிர்ந்த போது, மொயீன் அலி 46 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

**பெல் சதம்:**

அடுத்து வந்த ஜேம்ஸ் ரெய்லர், 5 ஓட்டங்களில் ஆட்டமிழந்தாலும், சிறப்பான ஆட்டத்தை தொடர்ந்த இயன் பெல், தனது ஒருநாள் கிரிக்கெட் வாழ்க்கையில் 4ஆவது சதத்தை பூர்த்தி செய்து அசத்த,

50 ஓவர்கள் நிறைவில் இங்கிலாந்து அணி 8 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 303 ஓட்டங்கள் குவித்தது.

**ஸ்மித் சதம்:**

கடின இலக்கைத் துரத்திய அவுஸ்திரேலிய அணியின் பின்ச் (32), ஷான் மார்ஷ் (42) இணை அசத்தலான ஆரம்பம் (76) வழங்கினர்.

தொடர்ந்து களமிறங்கிய வீரர்களும் தம் பங்குக்கு ஓட்டங்களை எடுத்த போதிலும் அது அணியின் வெற்றிக்கு போதுமானவையாக அமையவில்லை.

இருப்பினும் மனம் தளராத ஸ்ரீபன் ஸ்மித் (102*) சதம் அடித்து கைகொடுத்தார்.இறுதிநேரத்தில் ஹடினின் 42 ஓட்டங்களும் உதவ,

அவுஸ்திரேலிய அணி 49.5 ஓவர்களில், 7 விக்கெட்டுக்களை இழந்து 304 ரன்கள் எடுத்து, 3 விக்கெட்டுக்களால் வெற்றி இலக்கை அடைந்தது.

போட்டியின் ஆட்டநாயகனாக ஆஸி அணித் தலைவர் ஸ்மித் தெரிவானார்.

இந்த வெற்றியை அடுத்து, 13 புள்ளிகள் பெற்ற அவுஸ்திரேலிய அணி, முத்தரப்பு ஒருநாள் தொடரின் இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. (க)

## தமிழ் மக்களு...

புதிய அரசாங்கத்தின் 100 நாள் வேலைத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பது பாரிய சவால் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க, த வோல்ட் ஸ்ட்ரீட் ஜேர்னலுக்கு வழங்கிய விசேட செவ்வியில் தெரிவித்துள்ளார்.

இதில் செய்யப்பட வேண்டிய பணிகளில் மிக முக்கியமான பணி ராஜபக்ஷ அரசாங்கம், அரசியல மயப்படுத்திய பொலிஸ் திணைக்களத்தை அதில் இருந்து விடுவிப்பது எனவும் அவர் கூறியுள்ளார்.

அதேபோல் இலங்கையின் சிறுபான்மை சமூகமான தமிழ் மக்களுக்காக அரசியல் தீர்வொன்றை வழங்க வேண்டும் என்ற கடும் நிலைப்பாட்டில் புதிய அரசாங்கம் இருக்கின்றது. ஜனவரி மாதம் நடந்த தேர்தல் மாற்றத்திற்காக நடந்த தேர்தல் எனவும் இந்த மாற்றத்தின் மூலம் நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

தமிழ் மக்கள் வாழும் வடக்கு மாகாணத்திற்கு கூடிய அதிகாரங்களை வழங்குவது குறித்து தற்போதைய அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

அதேபோல், கடந்த அரசாங்கம் சீனாவின் கடன் வழங்கும் நிறுவனங்கள் மற்றும் ஒப்பந்த நிறுவனங்களுடன் செய்து கொண்ட சில மோசடி கொடுக்கல் வாங்கல்கள் குறித்து புதிய அமைச்சரவைக்கு தகவல்கள் தெரியவந்துள்ளதை அடுத்து புதிய அரசாங்கம் கடும் போராட்டத்தை எதிர்நோக்கி வருகிறது.

ராஜபக்ஷ அரசாங்கம் உட்கட்டமைப்பு அபிவிருத்திகளுக்காக மேற்கொண்ட சில திட்டங்கள் விலை மனுகோரப்படாமல் வழங்கப்பட்டுள்ளன. அவை தொடர்பான தகவல்களை கடந்த அரசாங்கம் வெளிப்படையாக மக்களுக்கு முன்வைக்கவில்லை.

கொழும்பு காலிமுகத் திடலுக்கு எதிரில் சீனாவின் உதவியுடன் நிர்மாணிக்கப்படும் துறைமுக நகர அபிவிருத்தித் திட்டம் சுற்றுச் சூழல் ஆய்வின் பின் ஆரம்பிக்கப்பட்டதா என்பதை கண்டறிய வேண்டும் எனவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.(எ-11)

## இராணுவ சதி...

கொள்ள மகிந்த ராஜபக்ச அரசாங்கம் முயற்சி மேற்கொண்டதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இராணுவத்தை பயன்படுத்தி ஆட்சியை தக்க வைத்துக்கொள்ள மேற்கொள்ளப்பட்ட முயற்சியானது உண்மையானதே என அவர தெரிவித்துள்ளார்.

சாதாரண அதிகாரிகள் மறுப்பு வெளியிட்ட காரணத்தினால் இந்த சூழ்ச்சித் திட்டத்தை முன்னெடுக்க முடியவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அலரி மாளிகையில் கடந்த 9-ம் திகதி அதிகாலை இராணுவ சூழ்ச்சித்திட்டம் மேற்கொள்ளப்பட்டமை நிஜமே என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கொழும்பின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் இராணுவத்தினர் நிலைநிறுத்தப்பட்டனர் என்பதனை பொறுப்புடன் கூற முடியும்.

வெள்ளவத்தை பாலம், களனி பாலம், சிறிகொத்த, றோயல் கல்லூரி, டி.எஸ் சேனாநாயக்க கல்லூரி உள்ளிட்ட பல இடங்களில் இவ்வாறு இராணுவத்தினர் நிலைநிறுத்தப்பட்டனர்.

கொழும்பு மாவட்டத்தை 17 பிரிவுகளாக பிரித்து உயர் இராணுவ அதிகாரிகளிடம் ஒவ்வொரு பிரிவும் ஒப்படைக்கப்பட்டிருந்தது என அவர் தெரிவித்துள்ளார்.

கடைநிலை அதிகாரிகள் இந்த திட்டத்திற்கு எதிர்ப்பை வெளியிட்ட காரணத்தினால், கடந்த அரசாங்கத்தினால் இந்த திட்டத்தை முன்னெடுக்க முடியவில்லை என அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

## வாழ்க்கைச்...

அரசாங்கம் வழங்கிய வாழ்க்கை செலவு கொடுப்பனவும் அதிகரிப்பு இதனுடன் இணைத்து அரச துறை ஊழியர்களுக்கு வழங்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதனையடுத்து எதிர்வரும் ஜூன் மாதம் மேலும் 5 ஆயிரம் ரூபாய் சம்பள அதிகரிப்பு அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும். எவ்வாறாயினும் தனியார்துறை ஊழியர்களுக்கு இந்த ஊதிய அதிகரிப்பு வழங்கப்பட மாட்டாது எனவும் நிதியமைச்சர் கூறியுள்ளார்.

அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வாக்குறுதி வழங்கியிருந்தார்.

இதனடிப்படையில் முதல் கட்டமாக 5 ஆயிரம் ரூபாய் சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் எனவும் அவர் உறுதியளித்திருந்தார்.

இதேவேளை புதிய அரசாங்கம் எதிர்வரும் 29ஆம் திகதியன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ள இடைக்கால வரவு செலவுத்திட்டத்தில் மக்களுக்கு அதிக நிவாரணங்களை வழங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இந்த வரவுசெலவுத்திட்டத்தில் அத்தியாவசிய 10 பொருட்களின் விலைகள் குறைக்கப்படவுள்ளன.

இதனை தவிர அரச பணியாளர்களின் சம்பளம் 5ஆயிரம் ரூபாயினால் அதிகரிக்கப்படவுள்ளதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்கான உறுதிமொழி கடந்த ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களின்போது வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## அப்பாவி தமிழ்...

வருடங்களாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பெண்கள் உட்பட பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கும் சுதந்திர தினத்தில் பொதுமன்னிப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் கோரினார்.

பத்தரமுல்லை செத்சிறிபாய கட்டிடத் தொகுதியில் மகளிர் விவகார பிரதி அமைச்சராக தனது கடமைகளை பொறுப்பேற்ற பின்னர் இது தொடர்பில் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

30 வருடகால யுத்தம் நிறைவடைந்த போதிலும் இதுவரையிலும் பல குடும்பங்கள் மீள் குடியேற்றப்படவில்லை. வடபுல மக்களை மீள்குடியேற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுப்பேன். மேலும் தேசிய பிரச்சினைக்கான தீர்வு திட்டம் தொடர்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு என்றும் உறுதுணையாக இருப்பேன்.

இந்நிலையில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பல வருடங்கள் சிறையில் உள்ள சிறுவர்கள் பெண்களையும் மேலும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யபட்ட அப்பாவி தமிழ் கைதிகளுக்கும் சுதந்திர தினத்தில் பொதுமன்னிப்பை வழங்க வேண்டும். இது தொடர்பிலான கோரிக்கைகளை ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் முன்வைத்துள்ளோம் என்றார். (எ-11)

## கழிவு எண்ணெய்...

யின் தலைவாரான தி.பிரகாஸ் சுன்னாகம் கழிவு எண்ணெய் பிரச்சினை குறித்து உடனடியாக நடவடிக்கையெடுக்க வேண்டும்.

புதிய அரசின் 100 நாள் வேலைத்திட்டத்திற்குள் சுன்னாகம் கழிவு எண்ணெக்கசிவு பிரச்சினையும் உள்வாங்கப்படல் வேண்டும் என கோரிக்கைகளினை முன்வைத்திருந்தார்.

இதனையடுத்து தான் உடனடியாக கவனம் செலுத்தவதாக ஜனாதிபதி மைத்திரி உறுதியளித்துள்ளார்.

மேலும் இச்சந்திப்பில் மீள்குடியேற்றம், சட்டவிரோத மணல் அகழ்வு, நெல்சிப் திட்ட ஊழல் போன்ற பிரச்சினைகளும் சந்திப்பில் கலந்து கொண்டிருந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பிரதேச சபை தவிசாளர்களினால் ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டப்பட்டிருந்தன. (எ-4)

## போர்க்குற்ற...

வில் உள்நாட்டு விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இந்த உள்நாட்டு விசாரணைக்குழுவை நியமிப்பது தொடர்பாக அனைத்துக் கட்சிகளின் தலைவர்களுடனும் ஆலோசனை நடத்தப்படவுள்ளது.

பொருத்தமான நிபுணர்களை உள்ளடக்கியதாக இந்த விசாரணைக் குழு விரைவில் நியமிக்கப்படும் என்று மேலும் கூறியுள்ளார்.(எ-11)

## பேக்கரி உற்...

டிக்கை எடுக்கப்படும் என தாம் நம்புவதாக அவர் கூறினார்.

அரசாங்கத்தினால் விலை குறைப்பு மேற்கொள்ளப்படுமாயின் அதன் நன்மைகளை நுகர்வோருக்கு பெற்றுக் கொடுப்பதற்கு தமது சங்கம் நடவடிக்கை எடுக்கும் எனவும் பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார். (எ-11)

## பிரதம நீதி...

விசாரணைகள் இடம்பெறுகின்றன.

இதேவேளை இந்தக்குற்றச்சாட்டின் பேரில் பிரதம நீதியரசர் பதவி விலக வேண்டும என்று கோரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது.

எனினும் தமக்கு இராஜதந்திர பதவி ஒன்று வழங்கப்பட்டால் மாத்திரமே பதவியை விலக முடியும் என்று மொஹான் பீரிஸ் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடி வேலைவாய்ப்புக்கள்

சர்வதேச ரீதியில் 30 ஆண்டுகளாக இயங்கிவரும்
எமது Canadian நிறுவனத்துக்கு
புதிய கிளைகள் ஆரம்பமாக இருப்பதால் (கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம்) போன்ற இடங்களுக்கு பணியாற்றுவதற்கு பதவி வெற்றிடங்கள் உள்ளன.
O/L, A/L **படித்தவர்கள் உடனே அழையுங்கள்.**
**பதவிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.** (9244)

**T.P: 0771908997, 0771882507** No.28, 3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### திருமதி தங்கம்மா அம்பலவாணர்



கைதடி கிழக்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட தங்கம்மா அம்பலவாணர் 22.01.2015 அன்று மாலை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-கண்மணி தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற அம் பலவாணரின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஐயாத்துரையின் (கொழும்பு) அன்புச் சகோதரியும், நாகேஸ்வரி, சிவநேஸ்வரி, யோகேஸ்வரி, லோகநாதன் (பகுதித் தலைவர் A/L கணித விஞ்ஞானம் யாழ்.மத்திய கல்லூரி, இரசாயனவியல் ஆசிரியர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வரத்தினம், தேவதாசன், சிவநேசன், உமாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், தாரணி, யாழினி, தனோஜன், தயானி, வினோஜிதா, சிவசெல்வன், கிருஸ்ணபாலன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், காலஞ்சென்ற இரத்தினம் (வத்தளை) மற்றும் ரஞ்சினி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (25.01.2015) ஞாயிற்றுக்கிழமை காலை கைதடி கிழக்கில் உள்ள லோகநாதன் ஆசிரியரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப 11 மணியளவில் தகனக்கிரியைக்காக கைதடி கிழக்கு ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"செல்வபதி" தகவல்:குடும்பத்தினர்.
கைதடி கிழக்கு, கைதடி. (9235) 0777464889

## எளிமையான...

கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை இதனைத் தெரிவித்துள்ளார்.

பாப்பரசரை வரவேற்பதற்காக நடத்தப்பட்ட விழாக்களுக்காக அர்ப்பணிப்புடன் செயல்பட்ட அதிகாரிகளுக்கு நன்றி செலுத்துவதற்காக வெளிவிவகார அமைச்சில் விசேட கூட்டமொன்று நடைபெற்றது.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோரின் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இலங்கைக்கு பயணித்ததில் தாம் பெருமகிழ்ச்சியடைந்ததாக புனித பாப்பரசர் தன்னிடம் தெரிவித்ததாக மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மேலும் குறிப்பிட்டார்.

உலகில் பல நாடுகளுக்கு தான் பயணம் செய்துள்ளதாகவும், அரச தலைவர்கள் உள்ளிட்ட ஏராளமான முக்கியஸ்தர்களைச் சந்தித்துள்ளதாகவும், எனினும், இவ்வாறான தொரு அரச தலைவரை வரலாற்றில் என்றும் சந்தித்ததில்லை எனவும் புனித பாப்பரசர் தெரிவித்ததாக மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மேலும் கூறினார். (எ-11)

## இராணுவ அதிகாரிகள்...

இராணுவத்தினர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். ஒரே இடத்தில் இரண்டு ஆண்டுகள் கடமையாற்றியவர்கள் இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவத் தளபதியின் பரிந்துரைக்கு அமைய இந்த இடமாற்றங்கள் செய்யப்பட்டுளளதாகவும், கடந்த 16-ம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றங்கள் இடம் பெறவுள்ளன. (எ-11)


2 மணித்தியாலத்தில்
**கணினி திருத்தம்**
உங்கள் வீடுகளுக்கும் வந்து கணினிகள் திருத்தி தருகிறோம் அழையுங்கள்
0779086737 Computer Repair
GUNAA BEST PC 52, Hospital Road Jaffna.



## அறிவிப்பாளர், ஒலிபரப்பாளர், மொழிபெயர்ப்பாளர்கள், வானொலிக் கலைஞர்கள், கலைஞர்கள் தேவை

வெளிநாட்டுத் தமிழ் வானொலியின் யாழ்ப்பாணக் கலையக அலுவலகத்துக்கு அறிவிப்பாளர்கள், ஒலிபரப்பாளர்கள், மொழி பெயர்ப்பாளர்கள், வானொலிக் கலைஞர்கள், கலைஞர்கள், இணையப் பதிவேற்றுநர்கள் தேவை.

1) க.பொ.த சாதாரண தர/ உயர்தர சித்தியுடன்
2) ஊடகத்துறை, கணனித்துறை, கலைத்துறை பயிற்சி பெற்றோர் மற்றும் ஆர்வமுள்ளோர்

சுயவிபரக் கோவை மற்றும் சான்றிதழ்களுடன் நாளை 25.01.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நேரில் சமுகம் தரவும்.

நேர்முகப் பரீட்சை நடைபெறும் இடம்:-
இல.52, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:-0776534924, 0779086737 (9240)



## எந்தவொரு நாட்டுக்குமான எந்த வகை விசா என்றாலும்....

**UK, Australia, New Zealand, Switzerland, Germany, France, Denmark, Norway, Netherlands, China, Russia, Italy, Canada, America, Malaysia, Singapore & More**

| | |
|---|---|
| A/L அல்லது O/L முடித்தவர்களுக்கு | பகுதிநேர வேலைவாய்ப்புடன் மாணவர் விசா |
| பட்டதாரிகளுக்கு | வேலைவாய்ப்புடன் நிரந்தர குடிரிமை |
| தொழில் அனுபவம் உள்ளவர்களுக்கு | வெளிநாட்டு வேலையுடன் குடியுரிமை |

**மற்றும் Visit Visa, Tourist Visa, Spouse Visa, Parent Visa, Medical Visits, Dependent Visa Green Card & Visa Rejection Appeals**

மேலதிக விபரங்களுக்கு **www.sikaram.lk**
info@sikaram.lk என்ற மின்னஞ்சலுக்கு உங்கள் சுயவிபரக்கோவையை அனுப்பி பொருத்தமான வாய்ப்புக்களை அறிந்துகொள்ளுங்கள் (சி-9901)

SIKARAM Education Abroad Work, Migration & Visa Solutions
Sikaram (Pvt) Ltd., 275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி. யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 0773616798 / 021 222 00 11



EXPONET Overseas Consultants
www.expogroup.lk

## STUDY IN LATVIA
(SCHENGEN VISA)
வேலை வாய்ப்புக்களுடன்

## நேரடி அனுமதிகள்
இலவசக் கருத்தரங்கு யாழ்ப்பாணத்தில்
**27-01-2015**
VENUE: GNANAMS HOTEL
9.30 am - 1.00 pm

யாழ். மாணவர்களே!
அரிய சந்தர்ப்பம்



- IATVIA அரச பல்கலைக்கழகங்களில் இருந்து வரும் Representative இனை சந்திப்பதன் மூலம் பல்கலைக்கழக அனுமதிகளைப் பெறமுடியும்
- May Intake இற்கான அனுமதிகளை பெற்றுக்கொள்ள விரையுங்கள்.
  எமது அலுவலகத்தில் நடைபெறும் ஆங்கில பரீட்சையில் சித்தி எய்துவதன் மூலம் IELTS இன்றி Visa வினை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.
- IELTS இன்றி உயர்கல்வியைத் தொடருவதற்கான அரிய சந்தர்ப்பம் A/L 3 பாட சித்தியுடன் உங்களுக்கு விரும்பிய கற்கை நெறியை தொடர முடியும்
- schengen Visa (Sehengen Union இல் உள்ள 26 நாடுகளுக்கும் சென்று பணிபுரிய முடியும்.)
- ஒருவருடத்துக்கான கட்டணமாக Rs. 350,000/=

197, Arasady Road, Jaffna, Sri Lanka
Tel : 021 2227230 | 0217538395
Email : nimal@expogroup.lk (சி-9904)

Hotline: 0212227230 LEGAL REPERSENTATIVE FOR RTU (University)



Join Sri Lanka's #1 ESOFT Shaping Lives, Creating Futures.

Vacancies @ ESOFT

Sri Lanka's Leader in Professional ICT Education is looking for skilled people
Positions are available in Jaffna Campus & Kilinochchi

### Lecturers in IT
- Areas of expertise include Networking, Software Engineering, Web Engineering, Programming with JAVA/C#/ASP.NET & DBMS knowledge, Mathematics, Computer Science etc..
- Working week will be 5 and a Half days including week end
- Experience would be an added advantage

### Marketing Executive - Jaffna
- Result oriented individual with strong communication skills
- Willing to travel and meet clients
- identify potential markets to promote company products
- implementing, engage and monitoring promotional activities for the branch
- Assist to achieve branch monthly targets

### Academic Coordinator | Kilinochchi
We are looking for goal oriented, energetic young candidates to work at ESOFT. An IT graduate with the capablility to lead a team.

Main Responsiblities are handling of local market campigns, general administration, achieving branch targets, ensuring quality delivery of programmes and effective utilisation of staff.

Work time will be according to a duty roster consisting of a five and a half day working week including the weekend, which is our busiest time.

Sucessful candidate will receive a good take home salary. Additional earnings via paid lecturers.

### How to Apply
Send us your completed CV within 10 days of this advertisement including a covering letter introducing yourself. Please state the position applied as the subject line of the email

Established in 2000, ESOFT has rapidly grown to be a trendsetter in the industry.

As part of our expansion, we are looking for skilled individuals who can work in a team environment, to achieve set goals.

Successful candidates should be self motivated and have the capability of setting own standards and be able to see that they are achieved and surpassed.

**ESOFT METRO CAMPUS**
137, K.K.S Road, Jaffna, Sri Lanka
Tel: 021 222 4142, Hotline: 077 309 9 308
Web: http://www.esoft.lk Email: jaffna@esoft.lk (சி-9903)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.01.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org